REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 செப்டெம்பர் 22 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 225 | Friday 22, September, 2023 | 20பக்கங்கள் | 50/-

நகர அபிவிருத்தி அதிகார சபையின்

## அறுகம்பை பிரதான சுற்றுலா திட்டம் வெளியிடப்பட்டது

நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட அறுகம்பை பிரதான சுற்றுலாத் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி செயலணியின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற சந்திப்பிலே, இத்திட்டம் வெளியிடப்பட்டது.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு 06

490 கோடி ரூபா இந்திய கடன் திட்டத்தின் கீழ்

## நவீன மயமாகும் ரயில் சமிக்ஞை, தொடர்பாடல் கட்டமைப்புகள்

### அமைச்சர் பந்துல முன்னிலையில் ஒப்பந்தம் கைச்சாத்து



மாஹோ முதல் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதையில் சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் கட்டமைப்பை நவீன மயப்படுத்தும் திட்டத்துக்கான ஒப்பந்தம் நேற்று (21) போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் சார்பில் அமைச்சின் பதில் செயலாளர் எல்.எச்.திலகரத்னவும் இந்திய அரசின் கீழ் செயல்படும் IRCON Ltd சர்வதேச நிறுவனத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்து பராக் வர்மா ஆகியோரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். 06

IMF முகாமைத்துவ பணிப்பாளருடன் ஜனாதிபதி சந்திப்பு

## பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டங்களை IMF பாராட்டு

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுக்கும் (Kristalina Georgieva) இடையிலான சந்திப்பு, நியூயோர்க்கில் ஐ. நா சபையின் தலைமையகத்தில் (20) நடைபெற்றது.

இலங்கையின் நிதித்துறை சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தை குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்துக்கு 06





## எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் இன மதவாதத்தை தூண்டுவதாக உள்ளது

சபையில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 03

சனல் 4 குற்றச்சாட்டு:

## தெரிவுக் குழு அமைக்க ஆளும் கட்சி சபாநாயகரிடம் சபையில் வேண்டுகோள்

### சபை முதல்வர் சுசில் நேற்று அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில், சனல் 4 காணொளியின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தெரிவுக்குழு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் இணைந்து சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவித்தலொன்றை முன்வைத்து அமைச்சர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது: 06

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய

# உலகளாவிய முன்னேற்றத்தின் நிலை திருப்திகரமாக இல்லை

## உலகளாவிய தொற்றுநோய், பொருளாதார வீழ்ச்சி, வளப்பற்றாக்குறை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை தாமதப்படுத்தியுள்ளது

### 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான உலகளாவிய முன்னேற்றத்தின் தற்போதைய நிலை, திருப்திகரமானதாக இல்லை. 12% முன்னேற்றத்தை மாத்திரமே இவ்விடயத்தில் தற்போது காண முடிவதாகவும் ஏனைய முக்கியமான இலக்குகளில் 30% இன்னும் அடைந்துகொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத் தொடருக்கு இணையாக (20) ஆரம்பிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி 06




அரசியல் வாழ்வில் ஊழல், முறைகேடுகளா?

## ஆதாரங்களுடன் எவரேனும் நிரூபித்தால் அரசியலிலிருந்து உடன் விடைபெறுவேன்

### பாராளுமன்றத்தில் அமைச்சர் பந்துல நேற்று தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமது அரசியல் வாழ்க்கையில் ஊழல், மோசடி அல்லது முறைகேடுகள் இடம் பெற்றிருப்பின், அவற்றை ஆதாரத்துடன் நிரூபித்தால் அரசியலிலிருந்தே விடைபெற்றுச் செல்வதாக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தமக்கு எதிராக குரோதமாகவும் இழிவுபடுத்தும் வகையிலும் உண்மைக்கு புறம்பான விடயங்களை 06

## தயாசிறியை பதவி நீக்கி அனுப்பப்பட்ட கடிதத்தை நடைமுறைப்படுத்த தடை

### கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அறிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தயாசிறி ஜயசேக்கரவுக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

தயாசிறி ஜயசேக்கர தாக்கல் செய்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, இந்த தடை உத்தரவை (21) பிறப்பித்துள்ளார். 06

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பு மனுக்கள் இரத்து

### ஆலோசனைக் குழுவில் இணக்கம்



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அமைச்சுக்களுக்கான ஆலோசனைக் குழு ஏகமனதான இணக்கம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமையால் தேர்தலுக்கென வேட்புமனுவைச் சமர்ப்பித்த வேட்பாளர்கள், அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். 06

## G.C.E உயர் தர பரீட்சை நவ. 27 இல் நடைபெறாது



### புதிய திகதி அடுத்த வாரம் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் நவம்பர் 27இல், நடத்தப்படமாட்டாதெனவும் புதிய திகதியை அடுத்த வாரம் பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பாரெனவும் கல்வி யமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று கல்வியமைச்சு தொடர்பாக விசேட கூற்றொன்றை முன்வைத்து, 06

## ஜனாதிபதியின் திறமைக்கு உலகத் தலைவர்கள் பாராட்டு

### ஐ.நா.கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள வடிவேல் சுரேஷ்

இலங்கை கடந்த ஒரு வருட காலத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில், உலக நாட்டுத் தலைவர்களும் உலக வங்கித் தலைவரும் ஜனாதிபதியை பாராட்டியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது 06




வடக்கு, கிழக்கு பகுதிகளில்

## யுத்த காலத்தில் தேவாலயங்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்

### அவர்களுக்காகவும் பேராயர் குரல் கொடுக்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து சர்வதேச விசாரணை கோரும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, யுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் தேவாலயங்களில், கொல்லப்பட்ட மக்கள் தொடர்பிலும் குரல் கொடுக்க முன்வர வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பு 06

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணைக்கும் தயார்

### சபையில் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டால் அதனையும் எதிர்கொள்ள, தயாராக உள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலானது இடம்பெற்று முடிந்த சம்பவம். எனினும், தற்போது 06

## அவிசாவளை துப்பாக்கி சூட்டில் இருவர் பலி



அவிசாவளை, இஹல தல்துவ, குருபஸ்கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர்.

முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நால்வர் மீது, நேற்று முன்தினம் இரவு (20) மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர், இருவர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் தல்துவ பகுதியைச் சேர்ந்த 27, 36 வயதான இருவரே உயிரிழந்துள்ளனர். 06

## ஈஸ்டர் குண்டு தாக்குதல் முதலும் இறுதியுமானதல்ல

### இது போன்ற தாக்குதல்கள் எதிர்காலத்திலும் நடக்கலாம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதல் சம்பவம் முதலும் இறுதியுமான சம்பவம் அல்ல. இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலும் நாட்டில் இடம் பெறலாமென பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுமானால் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பில் நேரம் காலம் 06

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்: சர்வதேச விசாரணைகள் அவசியம்

### தெரிவுக் குழு அமைப்பது காலத்தை வீணடிக்கும் செயல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைத்து காலத்தை வீணடிக்காது, சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு 06

## தனுஷ்கவிற்கு எதிரான வழக்கு விசாரணை முடிவு

### அடுத்த வியாழன் தீர்ப்பு;



அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இலங்கை அணியின் முன்னாள் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணை, நேற்று முடிவுக்கு வந்துள்ளது. தீர்ப்பு அடுத்த வியாழக்கிழமை அறிவிக்கப்படவுள்ளதாக நீதிபதி சரா ஹியுகெட் தெரிவித்துள்ளார்.

நேற்று நான்காம் நாள் வழக்கு விசாரணையின்போது குறிப்பிட்ட பெண் எதிர்பார்த்ததை விட தனுஷ்கவுடனான பாலியல் உறவு வித்தியாசமாக அமைந்ததாகக் கூறியதாக அரச 06

# ஐ.நா.பொதுநலவாய கூட்டத்தில் ஜனாதிபதி நடத்திய சந்திப்புக்கள்

## இலங்கையின் புதிய முதலீடுகளில் மலேசிய நிறுவனங்கள் அதிக ஆர்வம்

### – மலேசிய பிரதமர்



ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹிமும் சந்தித்து பேச்சு நடத்தினர்.

நியூயோர்க்கில் (20) இந்த உத்தியோகபூர்வ சந்திப்பு நடந்தது. இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடினர். இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புக்களில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த பிரதமர் அன்வர் இப்ராஹிம், மலேசியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கைசாத்திடுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கும் சாதக பதிலை வழங்கினார். விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் கோரிக்கையை ஏற்பதாக மலேசியப் பிரதமர் தெரிவித்தார். அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர ரிம் கூட்டமைப்பின் (IORA) பிராந்திய மாநாட்டில் மலேசிய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் எனவும் பிரதமர் அன்வர் பின் இப்ராஹிம் இதன்போது உறுதியளித்தார்.

மலேசியாவிற்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அடுத்த வருடம் மலேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக உறுதியளித்தார்.

## கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுவை நிறுவி பொருளாதாரத்தை விரிவுபடுத்தல்

### இலங்கை – ஈரான் ஜனாதிபதிகளுக்கிடையே இணக்கம்



ஈரான் ஜனாதிபதி கலாநிதி செய்யித் இப்ராஹிம் ரைசி நியூயோர்க்கில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.இச்சந்திப்பு (20) இடம்பெற்றது.

இலங்கை மற்றும் ஈரானுக்கிடையிலான நீண்ட கால உறவுகள் மற்றும் பல வருடகால பரஸ்பர ஒத்துழைப்புக்களை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஈரான் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

கூட்டுப் பொருளாதார ஆணைக் குழுவை நிறுவி, இரு நாடுகளதும் பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவது பற்றி இரு தலைவர்களும் கவனம் செலுத்தினர்.

ஈரானிடமிருந்து அதி நவீன விவசாய தொழினுட்ப தெரிவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.இதற்கான ஒத்துழைப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு இரு தலைவர்களும் இணங்கிக் கொண்டனர். இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் (IORA) உறுப்பு நாடுகளை இணைத்துக் கொள்ளல் மற்றும்

ஈரான், இலங்கையிடையிலான பிராந்திய தொடர்புகளை வலுப்படுத்துவதன் அவசியத்துக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் பேச்சுக்கள் அமைந்திருந்தன.

மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறையில், குறிப்பாக உமா ஓயா திட்டத்திற்கு ஈரான் வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உமா ஓயா பல்துறை திட்டத்தை திறந்து வைப்பதற்காக இலங்கைகு விஜயம் செய்யுமாறும் அழைப்பு விடுத்தார்.

## அவசர காலநிலை நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த இலங்கை அர்ப்பணிக்கும்

### காலநிலை மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஐ.நா சபை பொதுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள அவசர காலநிலை நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த, இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் (20) நடைபெற்ற காலநிலை அபிலாஷைகள் தொடர்பான மாநாட்டிலேயே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.இங்கு உரையாற்றிய ஜனாதிபதி:புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை அடிப்படையாகக் கொண்டு, காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையிலான உலகளாவிய கூட்டு விருப்பத்தை வெளிப்படுத்தும் மைல்கல்லாக இம்மாநாடு கூட்டப்பட்டுள்ளது.இதில் பங்கு பற்றிய இராஜதந்திரிகளால் முன்மொழியப்பட்டவை பாராட்டுக்குரியது.

காலநிலை சவால்கள்,2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.05 வீதத்தை பாதிக்குமென நிபுணர்கள் கணித்துள்ளனர்.காற்று மற்றும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பசுமை வளர்ச்சிக்கான ஒரு மூலோபாயமாக COP 27 காலநிலை செழிப்புத் திட்டம் வெளியிடப்பட்டது. 2022ஆம் ஆண்டு நிதி நெருக்கடிக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரத்தை பசுமைப் பொருளாதாரமாக மாற்றும் நோக்கில் இலங்கையில் நடை முறைப்படுத்தப்படும் பொருளாதார மறுசீரமைப்பு செயல்முறையுடன் இணைந்ததாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை



யின் காலநிலை அபிலாஷைகளில் இரண்டாவது அம்சம், காலநிலை நியாய மன்றம் நிறுவுவதை ஆதரவளிப்பதே. இந்த முயற்சிகளுக்கு மேலதிகமாக, உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இரு விடயங்களை இலங்கை முன்மொழிந்துள்ளது. இதன் முதற்கட்டமாகவே, சர்வதேச காலநிலை பல்கலைக்கழகத்தை இலங்கையில் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக தன்னகத்தே உள்ள வள முகாமைத்துவத்தின் அவசியத்தை தெரிந்துகொண்டு, இலங்கையில் அதிகபட்ச செல்வாக்கு செலுத்தக்கூடிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

## பொதுநலவாய வேலைத்திட்டங்களுக்கு முன்னிலை வகிக்க இலங்கை தயார்

### பட்ரீசியா ஸ்கொட்லாண்டிடம் ஜனாதிபதி உறுதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் (20) நடைபெற்றது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கும் பொதுநலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கடந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இவர்கள் கலந்துரையாடினர். காலநிலை மாற்றம், காலநிலை நிதியளித்தல் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் ஏனைய சவால்கள் குறித்தும் இங்கு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இவ்விடயங்கள் தொடர்பில் பொதுவான நிலைப்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக, பொதுநலவாய அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்திற்கு, இலங்கை முன்னிலை வகிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.




## றைகம், முத்துமாரியம்மனுக்கு வருஷாபிஷேகப் பெருவிழா!



இங்கிரிய, றைகம், கீழ்பிரிவு, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருஷாபிஷேகப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முத்துமாரியம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் செல்வரத்தினம் செல்லாவின் ஒருங்கமைப்பிலும் ஆலய பிரதம குரு கிரியாஜோதி, கிரியா குகசாகரம், சிவ ஸ்ரீ கணேச பரமசிவன் குருக்களின் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பால்குட பவனியுடன், 1008 சங்குகளுடன் சகஸ்ர சதா சங்காபிஷேகம் நடைபெற்று,பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் அன்றிரவு விசேட வசந்த மண்டப பூஜை, வேதபாராயணம், விசேட தீபாராதணை தோத்திர பாராயணம் என்பன நடைபெற்று ஸ்ரீ முத்துமாரியம்மன், பிள்ளையார், முருகன் மூம்மூர்த்திகளில் உள்வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி தந்ததுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

## ஊடக அரசியல் நடத்துபவர்கள் காங்கிரஸை விமர்சிக்கின்றனர்

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் குற்றச்சாட்டு



'அறிக்கை அரசியலை' தனது உயிர் மூச்சாகக்கொண்டு செயற்படும் கட்சிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை விமர்சிக்காவிட்டால் அரசியல் பிழைப்பில்லை.

அதனால் தான் சமூக வலைத்தளங்களில் காங்கிரஸூக்கு எதிராக அக்கட்சியினர் விமர்சனங்களை முன்வைப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்து கொண்டும், ஊடகங்களுக்கு அறிக்கை விட்டுக்கொண்டும் 'பப்ளிசிட்டி' அரசியல் நடத்தும் கட்சிக்கு மக்கள் அரசியல் என்றால் என்னவென்று தெரியவில்லை. அதனால்தான் மக்களுக்காக அரசியல் செய்யும் காங்கிரஸ் மீது சொற்கணைகளை தொடுத்து வருகின்றனர்.

ஊடக அரசியல் நடத்துவது எமக்கு பிரச்சினை இல்லை. அது அவர்களுக்கு கைவந்த கலை. அதுதான் அவர்களின் கட்சி கொள்கையும் கூட. ஆனால் தமது இருப்புக்காக காங்கிரஸ் மீது அபாண்டமாக பழி சுமத்துவதும், போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதும் ஏற்புடைய நடவடிக்கை அல்ல. அது அநாகரீக அரசியலின் வெளிப்பாடாகும். அதனால் தான் எமக்கும் பதிலளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸை ஏதேனும் வழியில் விமர்சித்தால் தான் தமக்கு அரசியல் செய்யலாம் என்ற நோக்கில் செயற்படும் இவர்களுக்கு பதிலளிக்கும் நேரத்தில் மக்களுக்கு ஏதேனும் ஒரு சேவையை செய்துவிடலாம். ஆனால் கண்ணாடி கூண்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறியும் இத்தகைய அரசியல்வாதிகளை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களால் அறிக்கை விடுக்க முடியுமே தவிர மக்களுக்காக ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யமுடியாது என்பதே கசப்பான உண்மையாகும்.

கொள்கையே இல்லாமல் இரவில் ஒரு புறமும், பகலில் மறுபுறமும் அரசியல் நடத்தும் இவர்கள் முதுகெலும்பு பற்றியும், துணிவு பற்றியும் கதைப்பது கோமாளி அரசியலின் வெளிப்பாடாகும். அறிக்கைகளில் மாத்திரம் அரசியல் நடத்தும் இவர்களுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என அவர் தெரிவித்தார்.

## பசறையில் புதையல் தோண்டிய சம்பவம்; சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(பதுளை தினகரன் விசேட நிருபர்)

பசறையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 7 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதவான் உத்தரவிட்டுள்ளார். கடந்த 19ஆம் திகதி பசறை, தொலும்புவத்த 4ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள விகாரைக்கு அருகிலுள்ள காணியில் புதையல் தோண்டிய போது 7 சந்தேகநபர்கள் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வெலிமடை, ஒக்கம்பிடிய மற்றும் தொலும்புவத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுடன், பூஜை பொருட்கள், மண்வெட்டிகள் போன்ற பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும். அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட மிகவும் பின்தாங்கிய பாடசாலைகளில் ஒன்றான கிரேட் வெஸ்டன் பாடசாலை மாணவியொருவர் முதற்தடவையாக மாகாண மட்ட ஆங்கில மொழித்தின உறுப்பமைய எழுதுதல் போட்டியில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவிக்கு பரிசில்கள் வழங்கி பதக்கம் அணிவித்து கௌரவித்தார். (படம்; தலவாக்கலை குறூப் நிருபர்)

## பாக்கு பறிக்கச் சென்றவர் மின்சார கம்பியில் சிக்கி மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி பகுதியில் பாக்குப் பறிப்பதற்கு சென்று கொண்டிருந்த 24 வயதான குடும்பஸ்தர் ஒருவர் மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இரத்தினபுரி கரபிஞ்சா பகுதியைச் சேர்ந்த 24 வயதான லசந்த குமார் என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர்

வயலில் சென்றுக் கொண்டிருக்கையில் தனது நண்பர் திடீரென நிலத்தில் விழுந்ததாகவும் தான் அருகில் சென்று பார்த்த பொது அவர் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி உயிரிழந்ததாகவும் நேரில் பார்த்த நண்பரொருவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

## 15 வயது பாடசாலை மாணவி 'சோழன் உலக சாதனை'



(பொகவந்தலாவை நிருபர்)

பொகவந்தலாவை சென். மேரிஸ் மத்திய கல்லூரியில் தரம் 10 கல்வி கற்கும் நிதர்சனா என்ற 15 வயது மாணவி 8 மணி 30 நிமிடங்களில் 54 கி.மீற்றர் தூரத்தை நடந்து உலக சாதனை படைத்துள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னால் காலை 06:05 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சோழன் உலக சாதனை படைப்பதற்கான நடைப் பயணம், கினிகத்தேன, வட்டவளை, ஹற்றன், நோர்வூட், பொகவந்தலாவ நகரங்கள் ஊடாக நடந்து பகல் 02 மணி 35 நிமிடங்களில் பொகவந்தலாவை சென்.மேரிஸ் தேசிய கல்லூரியில் நிறைவடைந்தது.

இதன்போது சோழன் உலக சாதனைப் படைத்த மாணவிக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் காலணிகள் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ.நாகவாணி ராஜா, நுவரெலியா மாவட்ட தலைவர் சாம்பசிவம் சதீஸ்குமார் மற்றும் கண்டி மாவட்டப் பொதுச் செயலாளர் சடையாம்பிள்ளை சந்திரமோகன் போன்றோர் கலந்துகொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 22 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 04.45
ளுஹர் - 12.06
அஸர் - 03.15
மஃரிப் - 06.09
இஷா - 07.19

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 06
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## நொச்சியாகம மகாவலி அதிகார சபை பதில் முகாமையாளர் கைது

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

நொச்சியாகம மகாவலி அதிகார சபையின் பதில் முகாமையாளர் இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**75,000 ரூபா இலஞ்சமாக பெற்றதாக குற்றச்சாட்டு**

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியை ஒருவருக்கு மாற்றுவதற்காக 75,000 ரூபாவை,இவர் இலஞ்சமாக பெற்றதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தொகையை இலஞ்சமாக பெற்றுக்கொண்டாரென்ற சந்தேகத்தின் பேரில்,கைதான இவர், சோதனைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நாடு வங்குரோத்து அடைந்தமைக்கு பிரேமதாசவும் சஜித்துமே பொறுப்பு

## SLPPயை குறை கூறுவதை ஏற்க முடியாது



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடு வங்குரோத்து நிலை அடைந்ததில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் பொறுப்பு உண்டென, ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாடு வங்குரோத்து நிலை அடைந்தமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த, பல்வேறு காரணங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு வங்குரோத்து அடைந்ததாக இப்போது தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தந்தையான ரணசிங்க பிரேமதாச, நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார். அதன் பின்னர் அமைச்சராக சஜித் பிரேமதாசவும் பல ஆண்டுகாலம் பதவி வகித்துள்ளார். அவர்களும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதனை விட்டுவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் இப்போது பொதுஜன பெரமுன உறுப்பினர்களை குறை கூறுவது எந்த விதத்திலும் ஏற்க முடியாதது. அத்துடன் பொது ஜன பெரமுன கட்சி அண்மையில் உருவான கட்சி.இதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் வங்குரோத்து நிலை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் தெரிவிக்கையில்,

நாட்டை வங்குரோத்து நிலை அடைய காரணமான பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டுக்கு சென்றுள்ளார்கள். ஜனாதிபதி அந்த மாநாட்டுக்கு செல்லும் போது மிகவும் அவசியமான அதிகாரிகளை

06

## சுவிஸிலிருந்து நாடு திரும்பியவர் சடலமாக மீட்பு

(வவுனியா விசேட நிருபர்)

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த இளம் குடும்பஸ்தர் வவுனியாவில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல், லக்ஸபானா வீதியிலுள்ள வீடொன்றிலிருந்தே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சிறிதரன் அரவிந்தன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சுவிஸ் நாட்டிலிருந்து விடுமுறையில் தனது தாயாரின் வீட்டுக்கு வந்திருந்த போதே துரதிஷ்டவசமாக இச்சம்பம் இடம்பெற்றுள்ளது. தாயார் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

# எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் இன மதவாதத்தை தூண்டுவதாக உள்ளது

## சபையில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(லோரன்ஸ் செல்வநாயகம்)

" நான் என் மனைவிக்காக அரசியல் செய்பவன் அல்ல. மக்களுக்காக அரசியல் செய்பவன். என் மனைவி தமிழ் என்பதற்காக எனக்கு எவரும் வாக்களிக்காவிட்டால், நான் அரசியலை விட்டே செல்வதற்கு தயார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் சில காலமாக இனவாதம் தலைதூக்கியது. இன்னொரு சமயம் மதவாதம் தலை தூக்குகிறது. இதை எவரும் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தக் கூடாது என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றியஅவர்,

என்னிடம் இனவாதம் இல்லை.நான் தமிழ் பெண்ணை மணந்துள்ளேன். 83 கறுப்பு ஜூலையின் போது என்னால், என் மனைவியுடன் வெளியே செல்ல முடியவில்லை.

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி விடும் வகையிலேயே இன்று எதிர்க்கட்சியினர் செயற்படுகின்றனர்.

தேர்தலின் போது பகலில் சிங்களவர் வீட்டில் சோறும், இரவில் தமிழர் வீட்டில் தோசையும், வடையும் சாப்பிடுகிறார்கள் என்று என்னை சிலர் கேலி செய்தார்கள்.

நான் மக்களுக்காக அரசியல் செய்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக பாராளுமன்றத்தில் பலமுறை உரையாற்றியுள்ளோம்.

2019 மே மாதம் மூன்று நாட்களும் 2021 மார்ச் இல் மூன்று நாட்களும் 2021 ஏப்ரலில் மூன்று நாட்களும் இது தொடர்பான விவாதம் நடத்தப்பட்டது. அது மீண்டும்

06

**திருத்தம் பற்றிய அறிவித்தல்**

**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**
**விலைக்கோரல் இல. 074/T/2023**

2023 செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதிய ‘‘தினகரன்’’, ‘‘தினமின’’ மற்றும் ‘‘டெய்லி நியூஸ்’’ பத்திரிகைகளில் பிரசுரமான மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபாக பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் சம்பந்தமானது.

விலைக்கோரலுக்கான விடயம் ‘‘இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு (CIAR) 04 எண்ணிக்கையான HF எயார் பேண்ட் டிரான்ஸ்சீவர்களை வழங்குதல்’’ எனத் திருத்தப்படல் வேண்டும்.

ஏனையவைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## நிசாந்த முதுஹெட்டிகம மீள விளக்கமறியலில்

சட்டவிரோதமாக ஜீப் ரக வாகனமொன்றின் உதிரிப்பாகங்களை மாற்றி பொருத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிசாந்த முதுஹெட்டிகம மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர், நேற்று காலி பிரதான நீதவான் இசுரு நெத்திகுமார முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# நாகபட்டினத்திலிருந்து இலங்கைக்கு அதிவிரைவு பயணிகள் கப்பல் சேவை

**ஆக்டோபரில் ஆரம்பமாகுமென்கிறார் தமிழக அமைச்சர்**

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

பயணிகள் கப்பல் போக்குவரத்தை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுடன் இணைந்து பயணிகள் கப்பல் போக்குவரத்தினைத் துவக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தின் நாகையிலிருந்து இலங்கைக்கு எதிர்வரும் அக்டோபர் மாதம் பயணிகள் கப்பல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தமிழக பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.



நாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர், நாகப்பட்டினம் சிறு துறைமுகத்திலிருந்து 60 கடல் மைல்கள் தொலைவிலுள்ள காங்கேசந்துறை துறைமுகத்துக்கு 150 பேர் பயணிக்கும் அதிவிரைவு பயணிகள் கப்பலை (High Speed Passenger Ferry) இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய கப்பல் போக்குவரத்து கழகம், விரைவு பயணிகள் கப்பல் போக்குவரத்தை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், தமிழ்நாடு அரசுடன் இணைந்து பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

# விசேட வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

பயிற்சிக்காக நியமிக்கப்படும் விசேட வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் இதற்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார். “பயிற்சி பெற்ற விசேட வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டது. ஒரு விசேட வைத்தியருக்கு பயிற்சி அளிக்க பொதுவாக 05 ஆண்டுகள் ஆகும். இன்னும் 05 ஆண்டுகளில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். ஏனெனில், தற்போது ஆட்சேர்ப்பு எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், விசேட வைத்தியர்களை நியமிக்கும் திறன் எங்களிடம் உள்ளது. எதிர்காலத்தில் பெருமளவிலான விசேட வைத்தியர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர். இந்த குழுவின் வருகையால் இந்த மோதல் சூழ்நிலைக்கு தீர்வு கிடைக்கும் என நினைக்கிறேன். சுமார் 600 வைத்தியர்கள் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

இந்தக் குழுவிலிருந்து சிலர் வருவதில்லை. ஆனால் 50% வருவதால் இதற்கு ஏதாவது தீர்வு கிடைக்கும். இன்னும் ஒரு வருடத்தில் அவர்கள் வருவார்கள் ” என்று தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
**விலைமனு கோரல்**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களைக் கோருதல்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை திறந்த கேள்விப் பத்திரங்களைக் கோரி விற்பனை செய்வதற்கு குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் குழு தீர்மானித்துள்ளது.

| தொ. இல. | வாகன வகை | விலைகூறல் ஆவணங்களுக்காக திருப்பிச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | விலைகூறல் ஆவணங்களுக்காக திருப்பிச் செலுத்தப்படும் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|
| 01 | Cab (Commercial / Dual Purpose vehicle) மோட்டார் வாகனம் (WPPA – 6063) | 1,000.00 | 10,000.00 |
| 02 | Van (Winger / Motor Coach) மோட்டார் வாகனம் (WPNA-9689) | 1,000.00 | 10,000.00 |

1. விற்பனைக்காக இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இந்த வாகனங்களை, 2023.09.22 தொடக்கம் 2023.10.12 ஆம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை திணைக்கள வளாகத்தில் வாகனத் தரிப்பிடத்தில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.

2. இந்த வாகனங்களை விற்பனை செய்வதுடன் தொடர்புடைய விலைகூறல் ஆவணங்கள், 2023.09.22 ஆம் திகதி தொடக்கம் 2023.10.12 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை விநியோகிக்கப்படும். மீளளிக்கப்படாத ரூபா ஆயிரம் (ரூ. 1,000/-) கட்டணத்தை மற்றும் மீளளிக்கப்படும் பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000) விலைமனு கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 06 ஆம் மாடியிலுள்ள சிறாப்பர் பிரிவில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுசீட்டை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுருபாயா”, 5 ஆம் மாடி, “B” பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் விலைகூறல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு வாகனத்திற்காகவும் தனித் தனியாக விலைகூறல்களை முன்வைத்தல் வேண்டும். விலைகூறல்களை முன்வைக்கும் போது விலைகூறல் பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுசீட்டின் மூலப் பிரதியை விலைகூறலுடன் கட்டாயமாக இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. முத்திரையிடப்பட்ட விலைகூறல்களை 2023.10.13 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் 5 ஆம் மாடி, “B” பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது 5 ஆம் மாடி, “B” பகுதியில் பிரதிக் கட்டுப்பாட்டாளரின் (கொள்முதல்) அறையில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “**பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைகூறல் Cab (Commercial / Dual Purpose vehicle) மோட்டார் வாகனம் (WPPA – 6063) / Van (Winger / Motor Coach) மோட்டார் வாகனம் மற்றும் (WPNA 9689)”** எனக் குறிப்பிடல் வேண்டும். 2023.10.13ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைகூறல்கள் திறக்கப்படும். முன்வைக்கப்பட்ட விலைகூறல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கொள்முதல் குழுவிற்கு உண்டு. விலைகூறல்கள் திறக்கப்படுகின்ற வேளையில் விலைகூறுவோருக்கு அல்லது அவரது அதிகாரம்பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க முடியும்.

4. இது தொடர்பான மேலதிக விபரங்களை, வேலை நாட்களில் அலுவலக நேரங்களில், தொலைபேசி இல.: 011-2101559 அல்லது தொலைநகல்: 011-2879091 ஊடாக பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களை அல்லது 071 - 4415473 ஊடாக போக்குவரத்து உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**கொள்முதல் குழு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுஹுருபாயா”,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு

விளையாட்டாகக்கூட ஒருவரை இகழ்ந்து பேசுவதால் கேடு உண்டாகும். அறிவு முதிர்ந்தவர்கள், பகைவரிடமும் பண்புகெடாமல் நடந்து கொள்வார்கள்.

# அனர்த்த ஆபத்தில் அலட்சியம் கூடாது!

நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை கடந்த சில தினங்களாக நீடித்து வருகின்றது. குறிப்பாக மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்து வருவதோடு வட மேல், ஊவா, மத்தி, வட மத்தி, கிழக்கு மாகாணங்களிலும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாலை வேளையிலோ அல்லது இரவு வேளையிலோ மழை பெய்யலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

இந்த மழைக்காலநிலையுடன் சேர்த்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாட்டின் பல பிரதேசங்களில் நிலவிய கடும் வரட்சியின் தாக்கங்களும் பாதிப்புகளும் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

இம்மழைக் காலநிலையுடன் சேர்த்து மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் முன்னெச்சரிக்கைகளை அவ்வப்போது விடுத்துவரும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது.

அந்த வகையில் காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் மலை சார்ந்த பிரதேசங்களை உள்ளடக்கியுள்ள சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நேற்றுமுன்தினம் மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தற்போது பெய்துவரும் கடும் மழைவீழ்ச்சியின் பின்புலத்தில்தான் இந்த மண்சரிவு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. அதற்கு சாதகமான வகையில் சில பிரதேசங்களில் சிறிய சிறிய மண்சரிவுகளும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக கடந்த 19ஆம் திகதி பெய்த கடும் மழையினால் பேருவளையில் மலை சார்ந்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் ஐந்து வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு இவ்வீடுகளில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தினால் உயிரிழப்புக்களோ காயங்களோ தெய்வாதீனமாக ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்ற சிறு சிறு மண்சரிவுகள் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களிலும் இம்மழையுடன் சேர்த்து ஏற்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்ட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும், அனர்த்த முகாமைத்துவ நிலையமும் இம்மழைக் காலநிலையுடன் சேர்த்து மண்சரிவு அச்சுறுத்தல் முன்னெச்சரிக்கைகளை அவ்வப்போது விடுக்கின்றன. சிறுசிறு மண்சரிவுகள் பதிவாகத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்தே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

கடந்த காலங்களிலும் மழைக்காலங்களில் மழை வீழ்ச்சி ஆரம்பித்ததும் மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் முதலில் சிறுசிறு மண்சரிவுகள் பதிவாவது வழமையாகும். ஆனால் அவ்வாறான மண்சரிவுகள் குறித்து கடந்த காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படாத நிலைகள் காணப்பட்டன. அதன் விளைவாக துரதிர்ஷ்டவசமாக விசாலமான மண்சரிவுகளுக்கு முகம்கொடுத்து அதிக உயிரிழப்புகளையும் சேதங்களையும் சந்திக்க வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டமை தெரிந்ததே. அதனால் அவ்வாறான துரதிர்ஷ்டகர நிலைக்கு முகம்கொடுப்பதை தவிர்க்கும் நோக்கில் தான் முன்கூட்டிய முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. அவை பெரிதும் உதவக்கூடிய அறிவுறுத்தலாகும். மண்சரிவு குறித்த முன்னெச்சரிக்கையை விடுவதன் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். அதன் ஊடாக மண்சரிவு மூலம் ஏற்படக்கூடிய பாரிய சேதங்களையும் உயிரிழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அதனால் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் போது மலையக மற்றும் மலை சார்ந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும்.

குறிப்பாக ஒரு பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட முன்னர் மரங்கள், மின்கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் போன்றன திடீரென சாய்தல், வீட்டு சுவர்களிலும் நிலத்திலும் திடீரென வெடிப்புக்கள் ஏற்படுதல், திடீரென நீரூற்று ஏற்படுதல், சேறு சகதி நீர் வெளிப்படல் என்பன முன் அறிகுறிகளாக வெளிப்படும்.

அவ்வாறன அறிகுறிகள் வெளிப்படும் போது கவனயீனமாகவோ அசிரத்தையோடோ நடந்து கொள்ளக்கூடாது. இந்த அறிகுறிகள் தொடர்பில் உடனடியாகச் செயலில் ஈடுபட வேண்டும். குறிப்பாக இவ்வறிகுறிகள் குறித்து பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர், பொலிஸார் உட்பட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தினதும் அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வர வேண்டும். அத்தோடு அப்பிரதேசங்களில் இருந்து பாதுப்பான இடங்களுக்கு விரைவாக நகர்ந்து செல்ல வேண்டும்.

இவ்வாறான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளின் ஊடாக மண்சரிவுகள் ஏற்படும் போது பாரிய இழப்புக்களையும் அழிவுக்களையும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதமாக இருக்கும். அதுவே மிகவும் அவசியமான தேவைப்பாடாகும்.

editor.tkn@lakehouse.lk

# வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் செய்தி மிகைப்படுத்தப்பட்ட ஒரு மாயை!



இலங்கை 1970 காலப்பகுதி முதல் ஐரோப்பா, வடஅமெரிக்கா,அவுஸ்திரேலியா, மத்தியகிழக்கு நாடுகளுக்கு பட்டதாரிகளை அனுப்பிய ஒரு முக்கிய நாடு ஆகும். 1971ஆம் ஆண்டு புரட்சியின் பின்னரும் 1983ஆம் ஆண்டு ஜூலைகலவரம் மற்றும் 1987_89இல் இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் காரணமாக அது மேலும் தீவிரமடைந்தது.

கூடுதலான சம்பளம், சிறந்த தொழில்வாய்ப்புக்கள், மேலதிக கல்வி, பிள்ளைகளின் கல்வி மற்றும் நிறுவனத் தலைவர்களின் பிரச்சினைகள் ஆகியன கற்றவர்கள் வெளிநாடு செல்வதில் தாக்கம் செலுத்திய முக்கிய காரணிகள் ஆகும். வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தட்டுப்பாடு நிலவும் மற்றும் பல துறைகளில் உள்ள பட்டதாரிகள் 1970 முதல் தொடர்ச்சியாக வெளிநாடுகளில் குடியேறியுள்ளார்கள்.

அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரான வைத்தியர் சமில் விஜேசிங்க, 2022 ஆம் ஆண்டு யூன் 01 முதல் 2023ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை 274 விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகக் குறிப்பிட்டார். அவரின் இக்கூற்று முற்றும் பொய்யான ஒரு கூற்றாகும்.

உண்மை யாதெனில், 2021 முதல் 2023 வரை பொதுவான முறை மற்றும் பொ.நி.சு. 14/2022இன் கீழ் சம்பளமற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறை பெற்ற, பொ.நி.சு.இல. 14/2022 இன் கீழ் சம்பளமற்ற உள்நாட்டு விடுமுறை பெற்ற சுகாதார அமைச்சில் நிரந்தர சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் சம்பளமற்ற விடுமுறை பெற்று சேவைக்கு சமுகம் தராதவர்கள் என ஐந்து வகுதிகளுக்கு உட்பட்ட எண்ணிக்கையினர் 289 ஆகும். மூன்று ஆண்டுகள் விடுமுறை பெற்றுள்ள விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் ஒரு வருடத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அவர்கள் பொய் கூறுகின்றார்கள்.

## விசேட நிபுணத்துவ வைத்தியர்கள்

| விபரம் | 2021 | 2022 | 2023. 08.23 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றவர்கள் | 22 | 74 | 91 | 187 |
| சம்பளமற்ற உள்நாட்டு விடுமுறை பெற்றவர்கள் | – | – | 05 | 05 |
| சம்பளமற்ற விடுமுறை பெற்று சேவைக்கு சமூகம் தராத (சேவையை விட்டு நீங்கியவர்களாக கருதப்பட வேண்டியவர்கள்) | 7 | 29 | 14 | 50 |
| சுகாதார அமைச்சில் நிரந்தர சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட (இவர்கள் கொத்தலவல மருத்துவ பீடம், பல்கலைக்கழகம் மற்றும் அமைச்சுகளில் சேவை புரிகிறார்கள்) | 15 | 19 | 13 | 47 |

2021 முதல் 2023 வரை சம்பளமற்ற விடுமுறை பெற்று சேவைக்கு சமுகம் தராத விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் எண்ணிக்கை 50 ஆகும். 2023 ஒகஸ்ட் மாதம் வரை 14, 2022 இல் 29, 2021 இல் 7 சேவையில் இருந்து நீங்கியுள்ளார்கள். தாபன விதிக்கோவை பிரகாரம் ஒவ்வொரு அரச அலுவலர் மற்றும் விசேட நிபுணத்துவ வைத்தியர்களுக்கு சம்பளமற்ற வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவர்களுள் பெரும்பாலானவர்கள் மீண்டும் நாடு திரும்புகிறார்கள்.

## வைத்திய அதிகாரிகள்

| விபரம் | 2021 | 2022 | 2023. 08.23 | மொத்தம் |
|---|---|---|---|---|
| சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்கள் | 146 | 396 | 392 | 934 |
| சேவையில் இருந்து விலகியோர் | 113 | 203 | 121 | 437 |
| இராஜினாமா கோரியுள்ளோர் | 10 | 61 | 78 | 149 |

சுமார் 25 விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் அவர்களின் நிபுணத்துவ தன்மை பற்றிக் கருதாது அரச மற்றும் ஏனைய நிர்வாக பதவிகளை வகிக்கின்றார்கள். நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குதல் அல்லாத நிர்வாக பதவிகளுக்காக விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் நியமிக்கப்படல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

வைத்தியர் சமில் விஜேசிங்கவின் கூற்றுப் பிரகாரம், 842 தர வைத்தியர்கள் (சிரேஷ்ட வைத்தியர்கள்) சேவையில் இருந்து விலகி வெளிநாடு சென்றுள்ளார்கள். இதுவும் ஒரு சுத்தப் பொய் ஆகும். உண்மை யாதெனில் கடந்த 3 ஆண்டுகளில் சேவையில் இருந்து நிரந்தரமாக விலகி அல்லது விலக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை 586 ஆகும். 3 ஆண்டு காலத்திற்குள் விலகியோர் எண்ணிக்கையில் பெரும்பாலானோர் ஓராண்டு காலத்திற்குள் விலகியுள்ளார்கள் என எவரேனும் ஒருவர் கூறுவாராயின் அது ஒரு சுத்தப் பொய் ஆகும்.

2021 முதல் 2023 வரை சேவையில் இருந்து விலகியுள்ள வைத்திய அதிகாரிகள் எண்ணிக்கை 437 ஆகும். இராஜினாமா கடிதம் வழங்கியுள்ள வைத்திய அதிகாரிகள் எண்ணிக்கை 149 ஆகும். தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள முறை மற்றும் பொ.நி.சு. இலக்கம் 14/2022 இன் கீழ் 934 பேர் (மொத்தம் 3 ஆண்டுகள்) சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளார்கள். அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைக்கும் புள்ளிவிபரங்கள் மூன்று ஆண்டுகளின் மொத்தத்தை விடவும் அதிகமானதென்பது இதன் மூலம் தெளிவாகிறது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சிடம் பெறப்பட்ட தரவுகள் பிரகாரம் அவர்கள் இக்கருத்துக்களை முன்வைப்பதாக தெரிவிக்கின்றார்கள். 2023 ஒகஸ்ட் 03 ஆம் திகதி வைத்தியர் ஜீ.விஜேசூரிய வழங்கியுள்ள தரவுகளின் பிரகாரம், 2022 யூன் 1 முதல் 2023 வரை 197 தர வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள் எனவும், 109 வைத்திய அதிகாரிகள் இராஜினாமா செய்துள்ளார்கள் எனவும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் ஒரு வருடத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள் என பாராளுமன்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் குறிப்பிட்டுள்ளார். முறையாக விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ள அனைவரையும் நாட்டை விட்டு வெளியேறிய வைத்தியர்களாக சித்திரித்து மிகைப்படுத்திக் காட்டப்படுகிறது.

### பல் அறுவை சிகிச்சை வைத்தியர்கள்:

21 பல் அறுவை சிகிச்சை வைத்தியர்கள் கடந்த 3 ஆண்டு காலத்திற்குள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள். இராஜனாமா செய்தோர் எண்ணிக்கை 12 ஆகும். முறையாக சம்பளமற்ற விடுமுறை பெற்று மேலும் 39 வைத்தியர்கள் வெளிநாடு சென்றுள்ளார்கள்.

### தாதி உத்தியோகத்தர்கள்:

தற்போது அங்கீகரிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர் எண்ணிக்கை 45,367 ஆகும். அதில் சேவையில் ஈடுபட்டுள்ள அளவு 42,253 ஆகும். 2021 முதல் 2023.08.31 வரை 557 தாதி உத்தியோகத்தர்களுக்கு சேவையில் இருந்து விலக்குவதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. 05 தாதி உத்தியோகத்தர்கள் இராஜினாமா செய்துள்ளார்கள். முறைசார்ந்த ரீதியில் 434 தாதி உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளார்கள்.

### சுகாதார துறையின் ஏனைய உத்தியோகத்தர்கள்:

சுகாதாரத் துறையின் ஏனைய உத்தியோகத்தர்களின் நிலைமையும் இதற்கும் சமமானது ஆகும். கடந்த 3 ஆண்டுகளுக்குள் 20 இராஜினாமா, 54 சேவையில் இருந்து விலகுதல் இடம்பெற்றுள்ளன. சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறையினை முறையாகப் பெற்றுள்ள எண்ணிக்கை 71 ஆகும். 6 மாதத்துக்கு மேற்பட்ட காலம் விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ள மொத்த ஊழியர்களின்எண்ணிக்கை 43 என்பதுடன் 2023 ஒகஸ்ட் மாத இறுதி வரை மொத்த எண்ணிக்கையில் 15 பேர் வெளிநாடு சென்றுள்ளார்கள்.

இதன் மூலம் உணர்த்தப்படுவது நாட்டின் சுகாதாரத்துறையில் மனிதவளக் குறைபாடு காணப்படுவதில்லை என்பது அல்ல. அங்கீகரிக்கப்பட்ட விசேட நிபுணத்துவ வைத்தியர்கள் 2,851 ஆக இருக்கவேண்டிய நிலையில் 2,574 பேர் (90.3%)சேவையில் உள்ளார்கள். 22,535 வைத்திய அதிகாரிகள் இருக்க வேண்டிய நிலையில் 20,907 (92.8%) பேர் காணப்படுகின்றார்கள். 1,769 பல் வைத்தியர்கள் இருக்க வேண்டிய நிலையில் 1,585 (89.6%) பேர் காணப்படுகின்றார்கள். தெளிவாகவே சுகாதாரத் துறையில் 10 சதவீத பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆனாலும் மொத்தமாக நாட்டைவிட்டு வெளியேறுதல் என்பது பொய் என்பது தெள்ளத்தெளிவாகும்.

### பணியாட்கள் தொகுதி:

2022.12.31 இல் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்கள் தொகுதி இல் சேவையில் ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பணியாட்கள்தொகுதி

1. விசேட நிபுணத்துவ வைத்தியர்கள்
   2,851 2,574 90.3
2. வைத்திய அதிகாரிகள்
   22,535 20,907 92.8
3. பல் வைத்தியர்கள்
   1,769 1,585 89.6
4. மருந்தாளர்கள்
   2,306 2,022 87.7
5. வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள்
   2,392 2,132 89.1
6. பௌதீக சிகிச்சையாளர்கள்
   847 733 86.5
7. தொழில்சார் சிகிச்சையாளர்கள்
   276 166 60.1
8. கதிரியக்கவியலாளர்கள்
   1,103 694 62.9
9. பேச்சு சிகிச்சையாளர்கள்
   144 119 82.6
10. செவிப்புல வைத்தியர்கள்
   58 35 60.3
11. தாதி உத்தியோகத்தர்கள்
   45,367 42,253 93.1

உண்மையாகவே சுகாதாரத் துறையில் இணைந்த சுகாதார சேவைகளிலேயே அதிகளவு வெற்றிடங்கள் நிலவுகின்றன. 1,103 கதிரியக்கவியலாளர்கள் இருக்க வேண்டிய போதும் 694 (62.9%) பேர் காணப்படுகின்றார்கள். 58 செவிப்புல வைத்தியர்கள் இருக்க வேண்டிய போதும் 35(60%) பேர் காணப்படுகின்றார்கள். 2,306 மருந்தாளர்கள் இருக்க வேண்டிய போதும் 2,022 (87.7%) பேர் காணப்படுகின்றார்கள். இது உடனடியாக பதில் காணப்பட வேண்டிய சுகாதாரத் துறையின் உண்மையான நெருக்கடியாகும்.

1971 புரட்சியின் பின்னர் 1972, 1973 மற்றும் 1974 ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டில் உருவாகிய வைத்திய பட்டதாரிகளில் முறையே 37%,36%மற்றும் 45 சதவீதம் இங்கிலாந்தில் குடிபெயர்ந்து அங்கு நிரந்தரமாக குடியேறியுள்ளார்கள். 1971 இல் இந்த நாட்டில் உருவாகிய 165 பொறியலாளர்களில் 75 பேர் இங்கிலாந்தில் குடிபெயர்ந்துள்ளார்கள். (மூலம்: அங்டாடுக்காக கொழும்பு மார்கா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஆய்வு. விஞ்ஞானிகள் நாட்டில் இருந்து வெளியேறுதல் வீ.கே. சமரநாயக்கவின் கட்டுரை)

இன்று வைத்தியர்கள் வெளிநாட்டுக்குப் புலம்பெயரும் போது அவ்வாறான ஒரு போக்கு காணப்படவில்லை. 1980 மற்றும் 2009 ஆம் தசாப்தங்களில் இந்த நாட்டில் உருவாகிய வைத்தியர்களில் 11 சதவீதத்தினர் நிரந்தரமாக வெளிநாடு சென்றுள்ளார்கள்.

வருடாந்தம் எமது மருத்துவக் கல்லூரிகளில் இருந்து சுமார் 2,000 புதிய வைத்தியர்கள் உருவாகின்றார்கள். 2020 முதல் 2022 காலத்திற்குள் வெளிநாடுகளில் கற்கைகளை நிறைவுசெய்த 1,239 மருத்துவ பட்டதாரிகள் மருத்துவ சபை மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்து இந்த நாட்டின் வைத்திய தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். 2023 ஆம் ஆண்டு சுமார் 600 வைத்தியர்கள் மருத்துவ சபையில் பதிவுசெய்வதற்கு எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். 2020 முதல் 2022 வரை வெளிநாடுகளில் கல்வியைப் பூர்த்திசெய்த வைத்தியர்கள் முறையே 421, 229 மற்றும் 589 பேர் மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

வைத்தியர் பற்றாக்குறைக்கு மாத்திரம் அன்றி, வைத்திய துறையின் ஏனைய தொழில் வாண்மையாளர்களின் பற்றாக்குறைக்கும் பிரயோக ரீதியாக தீர்வு காண்பதற்கு சுகாதார அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்துதல் வேண்டும். ஓய்வு பெற்ற வைத்தியர்கள் மற்றும் விசேட நிபுணத்துவ வைத்தியர்களை ஒப்பந்த அடிப்படையில் வைத்திய சேவைக்கு துரிதமாக ஆட்சேர்த்தல் தற்போதுள்ள வைத்தியர்களின் பற்றாக்குறைக்கான தீர்வாக உள்ளது. 3 தனியார் மருத்துவக் கல்லூரிகளை தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. வருடாந்தம் சுகாதாரத் துறையில் ஒன்றிணையும் வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் அத்தியாவசியம் ஆகும்.

இன்று சுகாதாரத் துறை மருந்து பற்றாக்குறை மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை காரணமாக பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. அதற்கிடையில் வைத்தியர்கள் நாட்டில் இருந்து வெளியேறுதல் தொடர்பான தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டு வருகின்றன. துரதிர்ஷ்டவசமாக இவை தொடர்பான சரியான மற்றும் உண்மையான தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் தலைமை தவறியுள்ளது. அதன் காரணமாக சுகாதாரத் துறையில் காணப்படும் உண்மையான பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன.



ரஜித் கீர்த்தி தென்னகோன்
தென்மாகாண முன்னாள் ஆளுநர்

# மருதமுனை அந்-நஹ்ழா அறபுக் கல்லூரியின் 5ஆவது பட்டமளிப்பு விழா




மருதமுனை அந் நஹ்ழா அரபுக் கல்லூரியின் 5ஆவது காபிழ் பட்டமளிப்பும் 2ஆவது மௌலவி பட்டமளிப்பு விழாவும் நாளை மறு தினம் 24ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) காலை 8.00 மணிக்கு மாணவர்களின் வீதி ஊர்வலத்துடன் இடம் பெறவுள்ளது. மஸ்ஜிதுல் நூறாணியா பள்ளிவாசலுக்கு முன் ஆரம்பமாகும் ஊர்வலம் அல்மனார் மத்திய கல்லூரி வரை செல்லவுள்ளது. நிகழ்வுகள் அனைத்தும் கல்லூரியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதிபதியுமான ஏ.எம்.பதுறுத்தீன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் என்.எம்.அப்துல்லாஹ் கலந்து கொள்ளவுள்ளார். இவர்களுடன் இன்னும் பல அதிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**கல்லூரியின் தோற்றத்திற்கான பின்னணி**

மருதமுனை வரலாற்றில் அல்குர் ஆன் ஓதுவதை கற்றுக்கொடுக்கும் பயிற்சி பன்னெடுங் காலமாக இருந்து வருகின்றது. முஅல்லிம்கள், கதீப்கள், ஹஸ்றத்மார்கள் இவற்றில் தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்தனர். பாரம்பரிய முறையில் குறைவான வசதிகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட மேற்பார்வை, நிர்வாகம் இன்றி அவை இயங்கி வந்தன. இந்நிலையில் அவற்றை சீர்செய்து தரமான மார்க்கக் கல்வியை போதிக்கும் அவசியம் பலராலும் உணரப்பட்டது. இதனை ஒரு முன்மொழிவாக 10.09.1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை மத்திய குழு கூட்டத்தில் அஷ்ஷெய்க் ஏ. அபூ உபைதா(மதனி) அவர்கள் முன்வைத்தார். அதனையடுத்து செயற்படுத்தும் பணிக்காக அவரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதில் அல்ஹாஜ். ஏ.எம்.மீரா முஹைதீன்(ஜே.பி) ஓய்வுபெற்ற அதிபர் அவர்கள், அஷ்ஷய்க் எப்.எம். அன்சார் மௌலானா(நளீமி), மௌலவி. ஏ.ஆர். செய்னுலாப்தீன்(ஷர்கி) மற்றும் அல்ஹாஜ். ஏ.பி. செய்னுலாப்தீன்(கராஜ்), அல்ஹாஜ். மௌலவி ஏ.எம். ஹஸன்(ஷர்கி), அல்ஹாஜ். மௌலவி கே.எல்.எம்.ஹனீபா(பஹ்ஜி), அல்ஹாஜ் ஏ.ஆர். பறகதுல்லாஹ் ஆகியோர் இடம்பெற்றனர்.

இக்குழுவின் வழிகாட்டலுக்கேற்ப மருதமுனை உலமாக்கள், குர்ஆன் மத்ரஸாக்களின் உஸ்தாத்மார்கள் ஒன்றிணைந்து சிறிய அளவில் தனித்து இயங்கிவந்த மத்ரஸாக்கள் சிலவற்றை இத்திட்டத்துடன் இணைத்துக் கொண்டனர். மேலும் நவீன கற்பித்தல் நுட்பங்களை தழுவி அல்குர்ஆனை போதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இதன்படி அல்மனார் மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவில் 1995.01.13 அன்று இஸ்லாமிய கல்வி நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பினால் இத்திட்டம் சமூகத்தில் பெரும் வரவேற்பை பெற்றது. மர்கசுத் தஃலீமில் இஸ்லாமி மருதமுனை (Islamic Education Centre) எனும் நாமம் அங்கீகாரம் பெற்றமையால் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஒரே நேரத்தில் பயிற்றப்பட்டனர். கல்வி நிலையத்தின் இலட்சினை முஸ்ஹப் ஒன்றை தாங்கிய வண்ணம் 'உமது இரட்சகனின் பெயரைக் கொண்டு ஓதுவீராக' எனும் அல்குர்ஆனின் ஆரம்ப வசனம் பொறிக்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் சிலரை இணைத்துக்கொண்டு ஹிப்ழு பிரிவு மர்கசுத் தஃலீமில் இஸ்லாமி முழுநேர ஹிப்ழு பிரிவாக 11.03.1996 ஆம் ஆண்டு மஸ்ஜிதுல் கபீர் முன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மத்ரஸாக்களின் வரிசையில் இக்கல்வி நிலையம் ஒன்பதாவது இடத்தில் ஹிப்ழு பகுதிக்கான பதிவை பெற்றுக்கொண்டது. இதன் பதிவு இலக்கம் MRCA/13/1HQ/09 ஆகும்.

**தனியான காணியும் கட்டிடமும்**

ஹிப்ழு பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதற்கென தனியான காணியும், கட்டடமும் இல்லாத குறை காணப்பட்டது. அல்ஹாஜ் ஏ.எம். கமால்தீன் (B.com) தொழிலதிபர் அவர்களும் அவரது மாமனார் ஈ.எம்.செய்னுலாப்தீன் (ராசர்) அவர்களும் நூறானியா பள்ளிவாசலுக்கு அருகாமையில் இருந்த காணியின் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி அதில் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும் நிதியுதவியும் வழங்கினார்கள்;. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அமைச்சர் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் 1999.01.29 அன்று வெள்ளிக்கிழமை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்தார்கள் அதனை தொடர்ந்து பலரது நிதிப்பங்களிப்புடன் வளர்சியடைந்துள்ளது. முதன் முதலில் எட்டு ஹாபிழ்கள் பட்டம் பெற்றனர். இவர்களுக்கான முதலாவது பட்டமளிப்பு விழா 06.02.1999 ஆம் ஆண்டு மருதமுனை மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது. கபீர் பள்ளிவாசல் முன்றலில் இருந்து ஹாபிழ்கள் திறந்த வாகன பவனியில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இரண்டாவது பட்டமளிப்பு விழா 2006.04.11 ஆம் திகதி மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அஷ்ரப் மண்டபத்தில் நடந்தேறியது. இதில் ஏழு ஹாபிழ்கள் பட்டம் பெற்றனர். மூன்றாவது பட்டமளிப்பு விழா பன்னிரண்டு ஹாபிழ்களுடன் ஸம்ஸ் மத்திய கல்லூரியில் 2010.07.31 ஆம் திகதி நடைபெற்றது.நான்காவது பட்டமளிப்பு விழா 21 ஹாபிழ்கள் 06 மௌலவிகளுமாக ஸம்ஸ் மத்திய கல்லூரியில் 2019.02.02 ஆம் திகதி நடைபெற்றது.

**ஷரீஆ பிரிவும் புதிய நாமமும்**

ஒன்றரை தசாப்த நிறைவில் மர்கசுத் தஃலீமில் இஸ்லாமி தன்னுள் ஷரீஆ பிரிவை உள்வாங்கிக் கொண்டது. இதன் பின்னர் இக்கல்லூரி 2010ல் அந்நஹ்ழா அறபுக் கல்லூரி என பெயர் மாற்றம் பெற்றது. ஷரீஆ பிரிவின் தோற்றத்தோடு புதிய வகையில் நிர்வாக சபையும் மாற்றி அமைக்கப்பட்டது.

'அந்நஹ்ழா' என்ற அறபுச் சொல் எழுச்சியைக் குறிக்கிறது. பலவீனமான நிலையிலிருந்து மீண்டெழுந்து பலம் அடைவதை இது தெளிவுபடுத்துகின்றது. இதுவரை இருந்த முகாமைத்துவம், மேற்பார்வை, கண்காணிப்பு என்பன மீளாய்வு செய்யப்பட்டு புதிய பாதையில் மத்ரசா பயணிக்க பல்வேறு வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டன

**இதுவரை கடமை புரிந்த அதிபர்களின் விபரங்கள்**

அல்ஹாபிழ். எம்.எச்.எம். றிஸ்வி – காத்தான்குடி (12 வருடங்கள்)

2. அல்ஹாபிழ். அஷ்ஷெய்க். எஸ்.எம். நியாஸ் (ஹாபிழி) (B.A.) – கஹட்டகஸ்திகெலிய, அநுராதபுரம்

3. அஷ்ஷெய்க். ஏ. அபூஉபைதா(மதனி) (B.A.) – மருதமுனை

4. அஷ்ஷெய்க். என். முகம்மது பாரிஸ் (பாகவி – தென் இந்தியா) – அட்டாளைச்சேனை

கல்லூரியின் ஹிபுழு பிரிவின் பாடத்திட்டத்தினை பொறுத்தவரை அது 04 வருட கற்கை நெறியினை கொண்டது. புனித அல்குர்ஆனின் 6666 வசனங்களை 9002 வரிகளாக கொண்ட அல்குர்ஆனை மாணவர்கள் 04 வருடகாலத்திற்கு பூரணமாக மனனமிட்டுக் கொள்வதற்கான பாடத் திட்டமிடலினை கல்லூரி மேற்கொண்டுள்ளது. ஷரீஆ பிரிவின் பாடத்திட்டத்தினை பொறுத்தவரை அது 07 வருட கற்கை நெறியினை கொண்டது. அரச பாடசாலைகளில் கவ்வி கற்ற தரம் 08 ல் சித்தியடைந்த மாணவர்கள் இக் கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்படுவர். ஷரீஆ பிரிவில் இஸ்லாமிய கல்வி,பாடசாலைக் கல்வி என்ற இரு பிரிவுகள் காணப்படுவதுடன் இஸ்லாமிய கல்விச் செயற்பாடுகளுக்காக ஆலிம்கள் முழு நேர ஆசிரியர்களாக கல்லூரியில் தங்கி இருந்து செயற்படுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பழைய மாணவர் அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்கள்

**தலைவர்**
அஷ்ஷெய்ஹ். அல்ஹாபிழ்.
ஆதம்பாவா முஹம்மது ஷிம்லி(நஹ்ழி)

**உபதலைவர்**
அஷ்ஷெய்ஹ். அப்துற் றஷீட்
அல்ஸஜான்(நஹ்ழி) Dip in Pro
Manager – AlSajan Hospitality and Decoration

**செயலாளர்**
அஷ்ஷெய்க். அஷ்ஷெய்ஹ். அப்துல் சமட்
அப்றத் அஹமட்(நஹ்ழி)

**பொருளாளர்**
அல்ஹாபிழ். எம்.ஏ.அஸ்ரின் B.A. Development Officer

**உப செயலாளர்**
அஷ்ஷெய்ஹ். முஹம்மது அஸ்வர் முஹம்மது
இப்றாஜ் (நஹ்ழி)
பேஷ் இமாம் மழ்ஹருல் மக்பூலியா ஜூம்ஆ பள்ளி
வாசல் மருதமுனை
வெளியீட்டு ஒருங்கிணைப்பாளர்
அல்ஹாபிழ். அஷ்ஷெய்க். ஏ.ஆர்.எம். சஜித்
(இஸ்லாஹி) B.A. HNDEn. JP Development Officer.
Base Imaam Masjidur Rayyan Jummah Mosque
Maruthamunai

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்**
அல்ஹாபிழ்.எம்.எஸ்.எம்.றஸ்ஸான்
பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்
இறக்காமம்
அல்ஹாபிழ். அஷ்ஷெய்க். எம்.யூ. அப்துல் ஹாலிக்
(நழீமி) B. A, MBM (University of Colombo)
Development Officer
அல்ஹாபிழ். முஹம்மது அலி முஹம்மது பஸ்கின்
Management Studies Degree (Honours) (R)



தொகுப்பு
ஏ.எல்.எம்.ஷினாஸ்,
B.A(Hons)



அந் நஹ்ழா அரபுக் கல்லூரியின் நிர்வாக சபையினர்...



இம்முறை அல் ஆலிம் நஹ்ழி பட்டம் பெறும் உலமாக்கள்



இம்முறை அல் ஹாபிழ் பட்டம் பெறும் ஹாபிழ்கள்

## ஈஸ்டர் குண்டு தாக்குதல் ...

பார்க்காது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் சபையில் மேலும் உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தான், நாட்டில் நடந்த இறுதி தாக்குதலாகும் என சிந்தித்து எவரும் செயற்படக் கூடாது. எதிர்காலத்திலும் இது போன்ற தாக்குதல்கள் பல இடம்பெறலாம். அடிப்படைவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் நாட்டுக்குள்ளேயும், வெளியேயும் இருக்க முடியும். அவர்களை இனம் கண்டு கொள்ள முடிந்தால் மாத்திரமே தாக்குதல்களை தடுக்க முடியும். அதனை கவனத்தில் கொண்டு எமது புலனாய்வுப் பிரிவினர் இரவு, பகல் பாராது செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தகவல்களை வெளியிட்ட அவர்,

2019.04.21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை நடத்த முன்னர் தற்கொலை குண்டுதாரிகள் 2021.04.20 ஆம் திகதி கல்கிஸ்சை பகுதியில் ஒன்றிணைந்து சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டுள்ளனர். இதன் போது ,தாம் ஏன் தற்கொலை குண்டுதாரிகளாக மாற வேண்டும் என்பதற்கான 10 காரணங்களை உள்ளடக்கி காணொளி ஒன்றையும் வெளியிட்டிருந்தனர். இலங்கையில் வாழ்ந்த ஏனைய மதத்தவர்கள் அல்லாஹ்வை அவமதித்தமை, குளியாப்பிட்டி பகுதியில் பன்றியுடன் ஒன்றிணைத்து அல்லாஹ்வை அவமதிக்கும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை,ஞானசார தேரர் இஸ்லாத்தையும் முஸ்லிம் சமூகத்தினரையும் அவமதித்தமை, நபிகள் நாயகத்தை அவமதித்தமை, திருக்குர் ஆன் எரிக்கப்பட்டமை கிழித்தெறியப்பட்டமை, பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டமை அவர்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டமை ,முஸ்லிம் பெண்கள் புலனாய்வு விசாரணை என்ற பெயரில் அவமதிக்கப்பட்டமை ஆகிய காரணங்கள் அவற்றில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

## நவீன மயமாகும்...

இந்திய எக்சிம் வங்கி மூலம் இந்திய கடன் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்திற்காக, 15 மில்லியன் அமெரிக்க டொலர் (490 கோடி ரூபா ) செலவிடப்படும். அங்கு உரையாற்றிய அமைச்சர்,

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கையின் மிக நெருங்கிய நண்பர். போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் முடங்கியிருந்த பல திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளார். இத்திட்டங்கள் அனைத்துக்கும் முன்னதாகவே டென்டர்கள் கோரப்பட்டு நான் அமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்னரே முடிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு 2015 ஆம் ஆண்டிலேயே அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது . அதன் பின்னர் பல சக்திகளால் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க தாமதம் ஏற்பட்டது. கொவிட் 19 தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக மேலும் பாதிப்படைந்த இத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அமைச்சராக நானும் எனது அமைச்சின் செயலாளர் மற்றும் ரயில்வே பொதுமுகாமையாளர் ஆகியோர் இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் சென்று அவரை சந்தித்து கலந்துரையாடினோம். அச்சந்தர்ப்பத்தில் நிபந்தனைகளின்றி நிறுத்தப்பட்டிருந்த திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அவர் பூரண பங்களிப்பை பெற்றுக் கொடுப்பதாக அவ்வேளையில் உறுதியளித்தார்.

அதன்படி அவர் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்களிப்புடன் வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அநுராதபுரம் தொடக்கம் ஓமந்தை வரையிலான பகுதி தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து அனுராதபுரம் தொடக்கம் மாஹோ வரையிலான ரயில் பாதையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன.

அதே வேளை 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அதிநவீன சமிக்ஞை மற்றும் தொடர்பாடல் தொகுதியைப் பெற்றுக் கொள்ள வழங்கப்பட்டிருந்த டென்டர், நடைமுறைப்படுத்து வதற்காக இச்சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுகிறது. அதன்படி எதிர்வரும் ஜுலை மாதத்திலிருந்து கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்க முடியும். அத்துடன் ரயில்வே திணைக்களத்தில் பெரும் குறைபாடாக காணப்படும் 20 என்ஜின்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள் விடுத்தேன்.

அதன்படி ரயில் என்ஜின்களை இலங்கைக்கு பெற்றுக் கொடுத்தல் தொடர்பான விடயங்களை கருத்தில் எடுத்துள்ளதாக உயர்ஸ்தானிகர் எனக்கு அறிவித்துள்ளார். இவை அனைத்தும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் உறுதி செய்யும் என நான் நம்புகிறேன்.

## G.C.E உயர் தர பரீட்சை...

உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் சபையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை (2023) நவம்பர் மாதம் 27ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில், இறுதியாக இடம் பெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் மீண்டும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் தயாராகுவதற்கு போதுமான கால அவகாசம் இல்லாமை போன்ற காரணங்களை கவனத்திற் கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேறு வெளியிடப்பட்ட பின்னர் 18, 473 பேர் மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்துள்ளர். இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமான எண்ணிக்கையாகும்.

அதேவேளை, கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையை ஏற்கனவே குறிப்பிட்ட திகதியில் நடத்துவததால், மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதாகவும் பரீட்சையை பிற்போட நடவடிக்கை எடுக்குமாறும் பாராளுமன்றத்தில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இதன் படி பரீட்சைகள் ஆணையாளர் பரீட்சை இடம்பெறும் திகதியை திருத்தங்களுடன் அடுத்த வாரம் அறிவிப்பார். எனினும், பரீட்சையைப் பிற்போட வேண்டாம் என பரீட்சைக்குத் தயாராகவுள்ள அதிகமான மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் உத்தேச திகதியில் பரீட்சை இடம்பெறுவதால், மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக

எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கல்வி அமைச்சு பூரண ஒத்துழைப்பை பரீட்சைகள் திணைக்களத்துக்கு வழங்கும். பரீட்சை இடம்பெறும் திகதியை அறிவிக்கும் பொறுப்பு பரீட்சைகள் திணைக்களத்துக்கே உள்ளதால், பரீட்சை ஆணையாளர் நாயகம் இவ்வாரத்துக்குள் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை இடம்பெறும் திருத்தப்பட்ட திகதியை அறிவிப்பார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆதாரங்களுடன் எவரேனும்...

ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றன. இது தொடர்பில் ஆராய்ந்து, அதிகபட்ச தண்டனைகளை பெற்றுக் கொடுக்க அவற்றை சிறப்புரிமை குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சர் சபையில் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார். சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற ரயில்வே வேலை நிறுத்தப் போராட்டத்தை வைத்து தமக்கு எதிராக பொய் பிரசாரங்களை ஊடகங்கள் மூலம் சிலர் முன்னெடுத்து வருவதாகவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் நேற்று சபையில் மேலும் தெரிவித்த அவர்,

கடந்த சில தினங்களாக சில ஊடகங்கள், என்மீது தவறான, வெறுக்கத்தக்க விடயங்களை ஒளிபரப்பி வருகின்றன. கடந்த மார்ச் முதலாம் திகதி யூ டியூப் நியூஸ் பிரேக் மூலம் ரயில்வே சாரதிகள் தொழிற்சங்க பிரமுகரான இந்திக்க தொடங்கொடவுடன் நடத்தப்பட்ட நேர்காணல் உள்ளிட்ட, பல நிகழ்வுகளில் இவ்வாறு எனக்கு எதிரான உண்மைக்கு புறம்பான விடயங்கள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. ஊடகங்கள் மூலம் இவ்வாறு சிலர் செயற்படுவதால் 1953 21 ஆம் இலக்க பாராளுமன்ற அதிகாரம் மற்றும் சிறப்புரிமை சட்டத்துக்கிணங்க எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக நான் நம்புகிறேன். நான் அமைச்சராக, ஆசிரியராக விரிவுரையாளராக சமூகத்துக்கு பெரும் சேவை செய்து வருகின்றேன். இத்தகைய நிலையில் என்னை இழிவுபடுத்தும் வகையில் குரோதமான செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதனால் தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

## உலகலாவிய முன்னேற்றத்தின்...

இலக்குகள் தொடர்பான 2023 கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

COP 21 அமைப்பின் 196 நாடுகளால் நிறைவேற்றப்பட்ட பெரிஸ் ஒப்பந்தம், முற்போக்கான உலகளாவிய முயற்சியாகும்.

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளால் 2015 இல் நிறைவேற்றப்பட்ட 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பின்புலம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் பாரிய அளவிலான வளப்பற்றாக்குறை அதற்குத் தடையாக அமைந்துள்ளது.

மேலும், 2020 இல் ஏற்பட்ட கொவிட்19 நோய்த்தொற்று எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதை தாமதப்படுத்தியுள்ளது. இந்நிலையில், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்து , பல்வேறு துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளை முழுமையாக முடக்கியுள்ளது. இது ஏற்கனவே நிலவும் உலகளாவிய கடன் நெருக்கடியை அதிகப்படுத்தியது. இச்சவாலான நிலை, இலங்கை உட்பட மேலும் பல்வேறு நாடுகளை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது. இந்த சூழ்நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் அபிவிருத்தி இலக்குகளை அடையக் கூடியதாக இருக்கிறதா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கை தொடர்பில் கூறுவதாயின், 2019 ஆம் ஆண்டின் முழுமையான மதிப்பீட்டுக்கமைய, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 09% முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொவிட் தொறறோல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியும் இந்த இலக்கை அடைவதற்கு பெரும் தடையாக காணப்பட்டது.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்துக்கு மாத்திரம் 2030 ஆம் ஆண்டாகும்போது 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான முதலீடுகள் தேவைப்படும். அதனை நிறைவு செய்து கொள்வதும் பாரிய சவாலாகும்.

இக்கட்டான பொருளாதார நெருக்கடி நிலைமை இலங்கைக்கு மாத்திரமின்றி ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல நாடுகளை பாதித்துள்ளது. வங்குரோத்து நிலையிலிருந்து மீளக்கூடிய நிலையிலிருந்த நாடுகள் கூட தற்போதைய நெருக்கடியின் விளைவுகளுடன் போராடுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை நிறைவேற்ற 2030 ஆம் ஆண்டுக்குள் 5.9 டிரில்லியன் நிதியுதவி தேவை. இதை G20 உச்சிமாநாடு மீண்டும் உறுதிப்படுத்தியது.

மேலும், 2050 ஆண்டுக்குள் நிகரபூஜ்ஜிய உமிழ்வை அடைய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழினுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 04 டிரில்லியன் வருடாந்த முதலீடு அவசியம். பல்வேறு நாடுகளைப் பாதிக்கும் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலையில், இந்த புள்ளிவிவரங்கள் சாத்தியமா என்பதை விமர்சன ரீதியாக ஆராய வேண்டும். புதிய உலகளாவிய நிதிச் சட்டத்திற்கான பாரிஸ் உச்சி மாநாடு நிதிச் சவால்களை எதிர்கொள்வதற்கான உறுதிப்பாடாக அமையும் என நம்புகிறேன். எவ்வாறாயினும், உலகளாவிய நிதி மயமாக்கல் இந்த சிக்கலான மற்றும் அச்சுறுத்தலான நிலைமையை வெற்றிகொள்ள தீர்மானமிக்க நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்:...

தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையில் 50 பக்கங்களுக்கும் மேல் எமது பாதுகாப்புத் துறையிலுள்ள பல்வேறு பிரிவினரிடையே காணப்படும் மோதல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதியையும் குறிப்பிட்டு ஏதோவொன்று அரசாங்கத்திற்காக செய்யப்பட்டுள்ளது. அரச புலனாய்வு மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றில் 7000 பேர் உள்ள போதும் குறித்த சம்பவம் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை என்று நாட்டின் தலைவர் கூறியுள்ளார். இதற்கான காரணமே இப்போது வெளியில் வருகின்றது. மறைந்திருந்த சூத்திரதாரிகள் தொடர்பில் வெளிவராத தகவல்கள், தற்போது வெளிவருகின்றன. இதன் உண்மைகளை கண்டறிய வேண்டும். பலமான புலனாய்வுத் துறை நாட்டில் கடமையிலிருந்தும் சஹ்ரானின் சிறு குழு, இத்தகைய தாக்குதலை எவ்வாறு செய்தது என்பதை ஆராய வேண்டும்.

தாக்குதலை நடத்தியவர்கள் பல இடங்களில் தங்கியிருந்துள்ளனர். பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பில் புலனாய்வு பிரிவினர் ஆராயவில்லையா?

சாரா எனும் புலஸ்தினி என்ற பெண்ணுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர் சாய்ந்தமருது குண்டு வெடிப்பில் இறந்ததாகக் கூறப்பட்டு, ஒரு வாரத்தின் பின்னர் நீதிமன்றத்திற்கு அவரின் அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட்டது. அது எவ்வித கீறலும் இன்றி புதிதாகவே காணப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற போது அவர் அங்கே இருந்தார் என்று காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

மூன்று தடவைகள் டி.என்.ஏ பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. விசாரணைகளில் பல விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. வெளி சக்தியின் தலையீட்டில் தகவல்கள் மறைக்கப்பட்டனவா என்ற சந்தேகங்களும் உள்ளன.

இதனால், உண்மைகளைக் கண்டறிய சர்வதேச விசாரணைகள் அவசியமாகும். பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்து காலத்தை இழுத்தடிக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து...

எதிர்க்கட்சியினரது செயற்பாடுகள் சிறுபிள்ளைத்தனமாக உள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். 52 நாள் அரசியல் நெருக்கடியை நீதிமன்றம் தோற்கடித்ததைத் தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கான 'பிளேன் பி' சிறைக்கூடத்தில் வகுக்கப்பட்டுள்ளது என்றும், பிள்ளையானை முறையாக விசாரித்தால் பல விடயங்கள் வெளிவரும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே, நளின் பண்டார எம்பி இவ்வாறு தெரிவித்தார். அச்சமயம் ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குல் சம்பவம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி நிரோஷன் பெரேரா, எனது பெயரை குறிப்பிட்டு சில விடயங்களை குறிப்பிட்டார். குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டால் அதற்கும் நான் தயாராக உள்ளேன்.எப்போது சர்வதேச விசாரணைகளை மேற்கொள்வீர்கள் என்று குறிப்பிடுங்கள். குண்டு தாக்குதலானது இடம்பெற்று முடிந்த சம்பவம். எனினும், எதிர்க்கட்சிகளின் செயற்பாடு சிறுபிள்ளைத்தனமானது என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நிரோஷன் பெரேரா எம். பி: சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானுக்கு இந்த குண்டுத் தாக்குல் சிறுப்பிள்ளைத்தனமானதாக இருக்கலாம்.ஆனால், உயிரிழந்த,பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இச்சம்பவம் சிறுப்பிள்ளைத்தனமானதல்ல, இவரின் வரலாற்றை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் . பிள்ளையானுக்கு எதிராக வெகுவிரைவில் முறையான விசாரணைகளை முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

## யுத்த காலத்தில் ...

எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஆட்சியை கைப்பற்றும் நோக்கில், சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வசதியாக, இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் உயிர்களை பணயம் வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தற்போது செனல் 4,அலைவரிகை காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது.அது உண்மையானதா பொய்யானதா என்பதை விட, அது தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் வேண்டுகோளாக உள்ளது.

அந்தவகையில் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை, நான் பாராட்டுகின்றேன். முக்கியமாக கிறிஸ்தவ தேவாலயங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன.அது கிறிஸ்தவ,தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவுகளை பிரிப்பதற்கான சூழ்ச்சியாக பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வியும் எழுகின்றது.

கர்தினால் விடா முயற்சியாக இது தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டுமென கோருகின்றார் .நாமும் அதனையே கோருகின்றோம்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டவர்களும் இருப்பதனால் உள்ளூர் விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது.

எமது கிறிஸ்தவ மக்கள் படுகொலை செய்யப்பட்டு அந்த வடுவை இன்றும் தாங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில், அந்த மக்களுக்கு எமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம். அதே வேளை அம்மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதிலும் சர்வதேச விசாரணையிலும் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அத்துடன் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு ஒரு பணிவான வேண்டுகோளை இந்த உயரிய சபை ஊடாக விடுக்கின்றேன். யுத்த காலத்திலே எமது பகுதிகளிலுள்ள தேவாலயங்களில் தங்கியிருந்த மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பாடசாலைப்பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டார்கள், எமது பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டன.

அந்த வகையில் உங்களுடைய நீதி கோரும்,சர்வதேச விசாரணை கோரும் விடாப்பிடி என்பதும் மனித நேயம் என்பதும் வடக்கு, கிழக்கிலே நடந்த படுகொலைகளுக்கும் அவசியமாகும்.உங்கள் குரல் எமது பகுதிகளிலுள்ள தேவாலயங்களில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும் உரத்து ஒலிக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

முன்னர் எது நடந்தாலும் விடுதலைப் புலிகளின் மேல் பழியை போட்டு விடுவார்கள். நடக்கும் சம்பவங்களை தட்டிக்கழிக்கவே விடுதலைப்புலிகள் மீது பழியை போட்டு விடுவார்கள். அந்த வருத்தம் இன்றும் பல பேரிடம் உள்ளது. சம்பவங்களை கிடப்பில் போடுவதற்காக இந்த பழி போடும் வேலையை இனியும் செய்ய வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடு வங்குரோத்து... (03 ஆம் பக்கத் தொடர்)

கூட்டிச் சென்றால் பரவாயில்லை. ஆனால், நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு காரணமான மொட்டுக் கட்சி உறுப்பினர்களையே அழைத்துச் சென்றுள்ளனர். ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு பாய்ந்தவர்களை சந்தோஷப்படுத்துவதற்காகவே அவர்களை அழைத்துச் சென்றுள்ளார். நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு வரியாக வழங்கும் நிதி இவ்வாறு எவரையும் சந்தோஷப்படுத்துவதற்காக ஏன் பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

## எதிர்க்கட்சியின்... (03 ஆம் பக்கத் தொடர்)

செனல் 4 பிரச்சினையுடன் தந்துள்ளது. செனல் 4 மூலம் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி உண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இலக்காகக் கொண்டதல்ல என நான் நம்புகிறேன். அதன் முழு நிகழ்ச்சியின் ஐந்தில் ஒரு பங்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றியது. ஐந்தில் நான்கு வீதம் போரைப் பற்றியது. ஜெனிவாவில் பேசுவதற்காக த விடுதலைப் புலிகளின் அபிமானிகளால் கொண்டு வந்த விளம்பரமே இந்த செயல் 4 காணொளி காட்சி.

இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது.

ஒய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி...

*பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்தார். இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.*

*வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.*

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ...

*இது தொடர்பாக நேற்று (21) நடைபெற்ற அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் தொடர்பான அமைச்சின் ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.பின்னர்,வேட்பாளர்களின் அசௌகரியங் களை இக்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.*

*பிரதமரும், அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி தொடர்பான அமைச்சுக்களுக்கான ஆலோசனைக் குழுவில் ஏகமனதாக உடன்பாடு எட்டப்பட்டது.*

## தனுஸ்கவிற்கு எதிரான ...

சட்டத்தரணி கப்பிரியலீ ஸ்டீட்மென் தெரிவித்துள்ளார்.

அது மிகவும் மூர்க்கத்தனமானதாக காணப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர் அந்த பெண்ணின் வேண்டுகோள்களை மதிக்கவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

குற்றம்சாட்டியுள்ள பெண்ணை பிரிஸ்பேர்னுக்கு வருமாறு தனுஷ்க குணதிலக அழைத்தார். தான், அதற்கான செலவை பொறுப்பேற்பதாக அவர் தெரிவித்தார். இதை, அப்பெண் நிராகரித்துவிட்டாரென குறிப்பிட்டுள்ள அரச சட்டத்தரணி, இருவருக்கும் இடையிலான உறவு பரஸ்பர சம்மதத்துடன் இடம்பெற்றமை தெளிவாவதாகவும் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கு முன்னர் குற்றம்சாட்டப்பட்டவர் அந்த பெண்ணை, இடைவிடாது முயற்சி செய்தாரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

படுக்கை அறையில் தனக்கு ஆணுறை பயன்படுத்துவது பிடிக்காதென தெரிவித்த தனுஷ்க அது தொடர்பில் அந்த பெண்ணுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டாரெனவும் அரசதரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அப்பெண்ணை திருப்திப்படுத்துவதற்காக அவர் ஆணுறையை அணிய இணங்கினார். அதனை அகற்றுவதற்கு அவருக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்ததாகவும் அரசதரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## அவிசாவளை துப்பாக்கி...

*இத்துப்பாக்கிச் சூட்டிற்கு T56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது. தப்பியோடிய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

## தயாசிறியை பதவி நீக்கி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், தயாசிறி ஜயசேக்கரவுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படுமென, கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன திங்கட்கிழமை (செப். 18) கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக, நீதிமன்றில் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், அவ்வாறான கடிதத்தை அனுப்புவதற்கு கட்சியின் தலைவருக்கு அதிகாரம் இல்லை எனவும் தயாசிறி ஜயசேக்கர குறிப்பிட்டுள்ளார். இதன்பின்னர், முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார். சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சமர்ப்பணங்களையும் பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி, 2023ஆம் ஆண்டு அக்டோபர் 05 ஆம் திகதிவரை அமுலில் இருக்கும்படி இந்த தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## தெரிவுக் குழு அமைக்க...

செனல் 4 ஊடகத்தால், முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேரினால் சபாநாயருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தெரிவுக்குழு அமைக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்படும். இதற்கமைய தெரிவுக்குழு அமைக்கப்பட்டால் அதன் மூலம் ஜனாதிபதி ஆணைக்குழு, பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஆகியவற்றைப் பெற்று, அவற்றை ஆராய்ந்து அதனை சாட்சிகளாக மாற்ற முடியுமென்றால் சட்டமா அதிபர் ஊடாக அதற்கான நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் திறமைக்கு...

கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள அவர், அங்கு நடைபெற்ற கலந்துரையாடல்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். இதுபற்றி கருத்து தெரிவித்த அவர்:

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் மலையக மக்கள் சார்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்து கொண்டது தொடர்பில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கூட்டத் தொடரில் பல உலகத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக உலக வங்கித் தலைவர்,ஈரான் ஜனாதிபதி ஆகியோருடனான கலந்துரையாடல்கள் மிகவும் சிறப்பாக நடந்தன. ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று எதிர்வரும் நாட்களில் ஈரான் ஜனாதிபதி மலையகத்துக்கு வருகை தர இருக்கிறார்.உமாஓயா திட்டத்தை திறந்து வைப்பதற்காக அவர் வருவதாக உறுதியளித்திருக்கிறார். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பங்களிப்பு வழங்குவதாக அவர்கள் உறுதியளித்தனர். இது மகிழ்ச்சியளிக்கிறது. 200 வருட கால வரலாற்றைக் கொண்ட மலைய மக்களின் வாழ்வாதாரம் ,உரிமைகள்,வேதனைகள் மற்றும் சாதனைகள் பற்றிய விடயங்களை பல உப குழுக் கூட்டங்களில் நான் எடுத்துரைத்தேன். இதில் பாரிய முன்னேற்றத்தை காணக் கூடியதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## அறுகம்பை பிரதான சுற்றுலா ...

*கணிசமான பங்களிப்பை வழங்கும் சாத்தியமுள்ள அறுகம்பை சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் குறித்து கலந்துரையாடுவதற்காக, ஜனாதிபதி செயலகத்தில் இக்கூட்டம் கூட்டப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இக்கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமான சந்திப்பில் இனங்காணப்பட்ட விடயங்கள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.*

*இப்பகுதியின் உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பான சவால்கள் மற்றும் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியை தடுக்கும் தடைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

*பல்வேறு நிறுவனங்களின் பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு நிறுவனமும் இந்த சவால்களுக்கு தீர்வு காண்பதில் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதையும் விவாதித்தனர்.*

*அறுகம்பை பிரதான சுற்றுலாத் திட்டத்தை சாகல ரத்நாயக்க சமர்ப்பித்ததுடன், மூன்று வருட சுற்றுலா அபிவிருத்தித் திட்டமும் ஜனாதிபதியின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.*

*இம்முயற்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு ஒரு மாதத்தில் தொடர் கூட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.*

# வெற்றியை நோக்கிப் பயணிக்கும் சவூதி-இலங்கை இருதரப்பு உறவுகள்



சவூதி அரேபியாவின் 93 ஆவது தேசிய தினத்தினை முன்னிட்டு சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் ராசிக் (PhD) அவர்களுடனான விசேட நேர்காணல்.

**கே: கலாநிதி அவர்களே சவூதி அரேபியா தனது 93 ஆவது தேசிய தினத்தினை செப்டெம்பர் 23 அன்று அனுஷ்டிக்கும் இவ்வேளையில் இத்தேசிய தினத்தின் வரலாற்றுச் சுருக்கத்தினை முதலில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோமா?**

**ப:** செப்டெம்பர் 23 ஆம் திகதி சவூதி அரேபியாவின் தேசிய தினம். அதனை முன்னிட்டு முதலில் சவூதி அரேபியாவின் மன்னர் இரு புனிதஸ் தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்களுக்கும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் அனைத்து சவூதி அரேபிய மக்களுக்கும் இலங்கை மக்கள் சார்பாக குறிப்பாக தினகரன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கி.பி 1727ஆம் ஆண்டில் முதலாவது சவூதி இராச்சியம் ரியாத் நகரிலுள்ள திர்இய்யா எனும் இடத்தில் வித்திட்டது. அது சற்று தளர்வடைந்து மீண்டும் சவூதி இராச்சியத்தின் இரண்டாவது ஆட்சி கி. பி 1824ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் அதுவும் சற்று தளர்வடைந்து முற்றுப்பெற்றது. அதன்பின்னர் கி.பி 1902ஆம் ஆண்டு தற்போதைய சவூதி அரேபிய இராச்சியத்தின் இஸ்தாபகர் மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் அது மீண்டும் பலமாக கட்டியெழுப்பப்பட்டது. பறந்து விரிந்த அரேபிய தீபகட்பத்தின் நாலாபுறமும் சிதறி வாழ்ந்த கோத்திரங்களை 30 வருட காலமாக ஒன்றுபடுத்தி தீபகட்பத்தின் அதிகமான பகுதிகளை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து அவ்வொற்றுமைப்படுத்திய நாளை உத்தியோகபூர்வமான "சவூதி அரேபிய இராச்சியம்" (Kingdom of Saudi Arabia) என ஸ்தாபக மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் 1932 செப்டெம்பர் 23இல் அறிவித்த நாளே இன்று வருடாவருடம் அனுஷ்டிக்கும் சவூதி அரேபியாவின் தேசிய தினமாகும்.

**கே: இன்றைய சவூதி அரேபியாவினை ஒருங்கிணைத்த ஸ்தாபக மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களைப் பற்றி எம் வாசகர்களுடன் பரிமாறிக் கொள்ள முடியுமான சில முக்கிய தகவல்கள் யாவை?**

**ப:** மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் ஆலு ஸுஊத் அவர்கள்; முதலாவது சவூதி இராச்சியத்தின் ஸ்தாபகர் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் (கி. பி 1765) அவர்களின் ஐந்தாவது தலைமுறையாகும். இமாம் முஹம்மத் பின் ஸுஊத் உடைய தந்தை ஸுஊத் என்பவரைத் தொட்டே "ஆலு ஸுஊத்" என்ற கோத்திரப் பெயர் தொடர்புபடுகின்றது. இவர்கள் பல நூற்றாண்டு காலமாக ரியாத் நகரை அண்டிய பகுதிகளில் வாழும் "பனூ ஹனீபா" என்ற பெரும் கோத்திரத்தினைச் சேர்ந்தவர்களாகும்.

மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் கி. பி. 1876 (ஹி 1293) இல் பிறந்தார்கள். இரண்டாவது சவூதி இராச்சியம் நலிவுற்றபொழுது தனது தந்தையுடன் அண்டை நாட்டில் சிலகாலம் தஞ்சமடைந்து இருந்தார்கள். பின்னர் சுமார் 50 பேர்கொண்ட சிறிய படையுடன் தமது பூர்வீக பூமியாம் திர்இய்யாவை நோக்கி வந்து அதனை சுலபமாக கைப்பற்றினார்கள். அல்லாஹ்




வின் உதவிக்குப் பின் மன்னரின் ஈமானிய உறுதியும் அவருடன் வந்தவர்களின் உறுதியுமே அந்த வெற்றிக்குக் காரணமாகும். அன்று தொடக்கம் மிக வேகமாக மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களின் படைகள் 30 வருட காலத்துக்குள் சிதறுண்டிருந்த மக்களனைவரையும் ஒன்று சேர்க்கும் மகத்தான பணியில் வெற்றி கண்டார்கள்.

அதேபோன்று ஒரு ஸ்திரமான நாட்டிக்கான அடித்தளத்தினை மிகவும் திட்டமிட்டே அமைத்தார்கள். அதன் வெளிப்பாடாக உலகில் பலம்பொருந்திய நாடுகளுடனான தமது உறவுகளை; அவர்களுக்கேயுரிய சமயோசிதத் திறமையின் மூலம் பலப்படுத்திக் கொண்டார்கள். அதன் அறுவடையும் இன்றைய சவூதி அரேபியாவின் வளர்ச்சிக்குக் காரணமெனில் அது மிகையாகாது.

**கே: சவூதியின் தேசிய தினத்தினூடாக தற்கால தலைமுறைக்கு ஞாபகப் படுத்த விளையும் முக்கிய நோக்கங்கள் எவை?**

**ப:** ஒரு நாடு அனுஷ்டிக்கும் அனைத்து முக்கிய நிகழ்வுகளின் ஊடாகவும் பல முக்கிய நோக்கங்கள் ஞாபகப்படுத்துவது வழமை. குறிப்பாக தேசிய தினங்களின் பொழுது அந்நாட்டின் வரலாறு, அந்நாட்டிற்காக அர்ப்பணித்தவர்கள் வரலாறு என்பவற்றை புதிய தலைமுறைக்கு எடுத்துக்கூறல் என்பன மிக முக்கிய ஒரு நோக்கமாகும். அந்தவகையில் சவூதி அரேபியாவின் வரலாறு அந்நாட்டு புதிய தலைமுறைக்கு மாத்திரமன்றி உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சாதனைமிக்க வரலாறாகும்.

மேலும் தேசிய தினத்தினூடாக ஒரு நாட்டின் ஒற்றுமை வலுப்படுத்தப் படுகின்றது. அந்நாட்டு மக்கள் அந்நாட்டின் மீது வைக்கவேண்டிய பற்று, அந்நாட்டை உருவாக்கி சிறப்பாக ஆட்சி செய்துவரும் ஆட்சியாளர்கள்,



பொறுப்பாளர்களின் மீது அவர்கள் வைக்க வேண்டிய பற்று என்பன வலியுறுத்தப்படுகின்றன. குறிப்பாக இஸ்லாமிய அரசியல் வழிகாட்டல்களிலும்; ஆட்சியாளர்கள் சிறப்பாக தமது ஆட்சியை செய்யும் பொழுது அவர்களை நேசித்து அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வது இஸ்லாமியக் கொள்கையில் (அகீதாவில்) மிக முக்கிய ஒரு பங்காகக் கருதப்படுகின்றது.

இமாம் அஹ்மத் அவர்கள் ஒரு முறை கூறும்பொழுது: "எனது பிரார்த்தனை ஒன்று அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படும் என்று எனக்கு உறுதியாகத் தெரியும் எனில் அந்தக் குறிப்பிட்ட பிரார்த்தனையை நான் ஆட்சியாளர்களுக்காக வேண்டியே பயன்படுத்துவேன், ஏனெனில் ஆட்சியாளர் சிறப்பானவராக இருந்தால் மக்கள் அனைவரின் நலன்களும் சிறப்பாக இருக்கும்". எனக் கூறினார்கள்.

குறிப்பாக சவூதி அரேபியாவில் சென்ற சில வருடங்களாக தேசிய தினங்களின் பொழுது ஒரு மகுடம் அல்லது ஒரு கருப்பொருள் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.அந்த வகையில் இவ்வருடம் 2023 இல் 93 ஆவது தேசியதினத்தை ஒட்டி "நஹ்லும் வ நுஹக்கிக்" என்ற வார்த்தை கருப்பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதாவது; "(சாதிக்க) ஆர்வம் கொள்வோம்; (அதனைச்) சாதிப்போம்", என்பதே அதன் அர்த்தமாகும். அதேபோன்று சென்ற வருடங்களில் "ஹிம்மா நஹ்வள் கிம்மா" (மலை உச்சி வரை எம் உத்வேகம் தொடரும்) என ஒரு மகுடம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவை அனைத்திலும் புதிய தலைமுறை நாட்டைக் கட்டியெழுப்ப தயாராக வேண்டும் என்ற ஒரு அறிவுரை வழங்கப்படுகின்றது.

**கே: நிகழ்கால சவூதி அரேபியாவின் குறிப்பிடத்தக்க சர்வதேச அடைவுகள் யாவை?**

**ப:** நிகழ்கால சவூதி அரேபியா ஒரு பலம் பொருந்திய நாடாக மாறியுள்ளது என்பது முதலாவது குறிப்பிட்டுக் கூறவேண்டிய பெரும் அடைவாகும்.

உதாரணத்திற்கு நாம் சில விடயங்களை நோக்குவோமெனில்; முதலில் இரு புனிதஸ்தலங்களையும் தன்னகத்தே வைத்து புனிதமாகப் பராமரிக்கும் விடயத்தில் சவூதிக்கு நிகர் சவூதி மாத்திரமே எனும் அளவு அவற்றுக்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவுறும் தருவாயில் உள்ள பாரிய விஸ்தரிப்புத் திட்டங்கள், இரு புனிதஸ்தலங்களின் சீரான நிருவாகத்தினை கருத்திற்கொண்டு; அமைச்சுத் தரத்தில் நின்று இயங்கும் நிர்வாக மற்றும் மார்க்கத்துறை என்ற இரு வேறு நிர்வாகக் கட்டமைப்புகள் என அதற்கான பணிகள் தொடர்கின்றன.

அதேபோன்று சர்வதேச அரசியலைப் பொறுத்தவரையில் வல்லரசுகளுக்கு மத்தியில் ஏற்படும் பிணக்குகளின் பொழுதுகூட அவற்றுக்கு மத்தியில் சுமுக நிலையினை உருவாக்கும் ஓர் பலம்பொருந்திய நாடு எனும் அளவுக்கு சவூதி இன்று வளர்ந்திருக்கின்றது.



அதேபோன்று பொருளாதார ரீதியில் அதிக தனிநபர் வருமானம் கொண்ட நாடாகவும் இன்று சவூதி திகழ்கின்றது. மேலும் பாதுகாப்பான முதலீட்டுச் சந்தையாகவும், பொருளாதார ரீதியாக அதிக வளங்களை கையிருப்பில் தக்கவைத்துள்ள நாடாகவும் திகழ்கின்றது மட்டுமல்லாமல் சுற்றுலாத்துறையிலும் நவீன செயற்றிட்டங்களை உலகில் முதல் முதலாக நடைமுறைப்படுத்தும் நாடாகவும் திகழ்கின்றது.

மேலும் கல்வி ரீதியில் சவூதி அரேபியாவின் பல்கலைக்கழகங்கள் உலகில் முதல்தர பல்கலைக்கழகங்களாகத் திகழ்கின்றன, நவீன விஞ்ஞானக் கண்டிபிடிப்புகளுக்கான பல சன்மானங்களை சவூதி அரேபிய மாணவர்களும் கல்வியியலாளர்களும் குறுகிய காலத்தில் பெற்றுக் கொண்டனர்.

2030 என்ற திட்டமிட்ட அடைவை நோக்கி பயணிக்கும் சவூதி அரேபியா பிரமாண்டமான பொருளாதார மற்றும் பௌதீக வள மேம்





பாட்டுச் செயற்றிட்டங்களையும் திட்டமிட்டு மேற்கொள்வது இங்கே நாம் கவனிக்கத்தக்க ஒன்றாகும். அந்த வகையில் செங்கடலின் வடதிசையில் நிறுவப்படும் நியூம் நவீன நகரம் அதிலும் குறிப்பாக செயற்கை நுண்ணறிவுடன் கூடிய "தி லைன்" எனப்படும் நவீன நகரம் என்பன போன்ற பாரிய செயற்றிட்டங்கள் உலகளவில் பிரபல்யமடைந்துள்ளன.

மேலும் பௌதீகவள மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பினை அதிகரிக்கும் நோக்கில் உலகிலேயே மிகப் பெரும் செயற்திட்டமாகிய "கிரீன் சவூதி" எனும் பாரிய சூழல் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

உலகளவில் பல இடங்களில் அநியாயமாக காடழிப்பு நடவடிக்கைகளும் சூழல் மாசடைவு சம்பந்தப்பட்ட விடயங்களும் அதிகரிக்கும் இக்காலகட்டத்தில் சுமார் 700 பில்லியன் செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் பல பில்லியன் மரங்களை நட்டி சூழலை பசுமையாக மாற்றி உலக வளிமண்டலத்தை பாதுகாத்து சூழல் மாசடைவைக் குறைக்கும் உலகில் முதலாவது பாரிய திட்டம் என ஐ. நா தெரிவித்துள்ளது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உலக மக்கள் அனைவரும் நலன்பெறும் இத்திட்டத்தின் மூலம் 2030 ஆம் வருடத்தினை எட்டும் பொழுது உலகளவில் வளிமண்டலத்தில் கார்பன் அளவினை சுமார் 278 மி. தொன் அளவில் குறைக்க முடியுமென அத்திட்ட வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு சவூதியின் சர்வதேச அடைவுகளைப் பற்றி மார்க்க ரீதியாக, அரசியல் ரீதியாக மற்றும் பொருளாதாரம், கல்வி, பௌத்திகவள மேம்பாடு, மனிதவள மேம்பாடு என அடுக்கிக் கொண்டே போகலாம்.

**கே:சவூதி அரேபியா ஒரு சக்திமிக்க நாடகத் திகழும் இவ்வேளை அதன் உலகளாவிய மனிதாபிமானப் பணிகள் சம்பந்தமாகவும் நாம் சற்று நினைவு படுத்துவது சிறந்ததல்லவா?**

**ப:** ஆம் இன்றைய உலக நாடுகளில் அனர்த்தங்களின் பொழுதும் மனித குலம் எதிர்நோக்கும் சேதங்கள் அழிவுகளின் பொழுதும் உடனுக்குடன் கைக்கொடுக்கும் ஓர் நாடு எனில் அதில் சவூதி முதலிடம் வகிக்கின்றது. அதேபோன்று வளர்ச்சிகுன்றிய நாடுகளின் அத்தியாவசிய கட்டமைப்புகளை நிறைவேற்றுவதிலும் சவூதி அரேபிய பாரிய பங்களித்து வருகின்றது.

சென்ற 2022 டிசம்பரில் உலக பொருளியல் மற்றும் கூட்டுறவு வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின் பிரகாரம் உலகளாவிய மட்டத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டிய பலம்வாய்ந்த நாடுகளின் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடம் வகித்துள்ளது. இச்செய்தியினை ஷர்க் அல்அவ்சத் நாளேடு 26.12.2022 அன்றும் எமது தினகரன் நாளேடு 1.1.2023 அன்றும் பிரசுரித்தது இங்கே குறிப்பிடத்தக்கது. சவூதி அரேபியாவின் 2021 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய உதவிகள் மாத்திரம் 26.71 பில்லியன் சவூதி ரியால்களை எட்டியுள்ளது. இது சவூதியின் தேசிய வருமானத்தில் 1.05% வீதத்தினை எட்டியது விசேட அம்சமாகும்.

அதிலும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம் யாதெனில் 1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் எட்டப்பட்ட தீர்மானத்தின் படி உலகில் பலம்வாய்ந்த உதவி வழங்கும் நாடுகள் தமது தேசிய வருமானத்தில் குறைந்த பட்சம் 0.7% வீதத்தினையாவது உலகளாவிய மனிதநேய உதவிகளுக்காக ஒதுக்க வேண்டும் என்ற சிபாரிசினையும் தாண்டி சவூதி அரேபியா 2021ஆம் ஆண்டு தனது தேசிய வருமானத்திலே 1.05% வீதத்தினை ஒதுக்கியிருப்பதானது சவூதி அரேபியாவின் உலகளாவிய மனிதநேய அபிவிருத்திப் பணிகளுக்கான அயராத பங்களிப்பினை எடுத்துக்காட்டியது.

குறிப்பாக சென்ற சில மாதங்களுக்குள் மாத்திரம் ஏற்பட்ட துருக்கிய




அனர்த்தம், சூடானின் பதற்ற நிலவரம், யுக்ரைன், ரஷ்யப் போரினால் ஏற்பட்டுள்ள அனர்த்தம், மொரோக்கோ நிலநடுக்கம், லிபியப் புயலின் பின்னரான அனர்த்தம் என்று தொடர்ந்தும் சலிக்காமல் அனைத்து அனர்த்த நிலைகளின் பொழுதும் முன்னின்று பல விதமான தொடரணிகள் மூலம் உதவிக்கரம் நீட்டியுள்ளது. அதேபோன்று யமன், பாகிஸ்தான், எகிப்து, லெபனான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியினை தீர்க்க அந்நாட்டு மத்திய வங்கியில் வைப்பிலிடப்பட்ட பண உதவிகளும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியவையாகும்.

**கே: சவூதியில் வேலைவாய்ப்புச் சந்தை இலங்கையர்களுக்கு கைகொடுக்குமா?**

**ப:** சவூதியின் வேகமான அபிவிருத்திக்கு மத்தியில் தொழிவாய்ப்புச் சந்தை நல்ல இடத்தினை வகிக்கின்றது. குறிப்பாக தொழிலாளர்கள், பட்டதாரிகள், துறைசார் நிபுணர்கள் என அனைவருக்குமான தொழில் வெற்றிடங்கள் அங்கே காணப்படுகின்றன.

மற்றைய நாடுகளைப் போன்று எமது நாட்டு மக்களுக்கும் அங்கே தொழில்வாய்ப்புக்களை ஈட்டிக்கொடுப்பது சம்பந்தப்பட்ட தரப்பு பொறுப்புதாரிகளின் கடமையாகும். குறிப்பாக 2023 திட்டத்தின் கீழ் சவூதியின் அனைத்து நகரங்களும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன, இத்திட்டத்தின் கீழ் மாத்திரம் சுமார் புதிய 10 பாரிய வைத்தியசாலைகள் உருவாகின்றன. இவையனைத்தும் தொழில்வாய்ப்புக்கான இடங்கள்.

**கே: சவூதி இலங்கை தொடர்பாடல்களின் தற்போதைய நிலை பற்றி?**

**ப:** இலங்கையில் சகவாழ்வும், பரஸ்பர நல்லெண்ணங்களும் புரிந்துணர்வும் மேம்பட்டு வரும் இக்காலக்கட்ட சூழலில் உலகளாவிய நாடுகள் அனைத்துடனும் கைகோர்த்துப் பயணிக்கும் ஒரு நல்ல நிலையினை நாம் உணரமுடிகின்றது. அந்தவகையில் உலகில் பாரபட்சம் பாராது நல்லுறவுகளைப் பேணி உதவி செய்யும் சவூதி அரேபியாவுடனான உறவும் ஒரு உயர்ந்த நிலையில் உள்ளது. குறிப்பாக இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவர்களின் அயராத உழைப்பு இங்கே நாம் விசேடமாக சுட்டிக்காட்டவேண்டிய ஒன்றாகும். அவரின் குறுகிய கால சேவையில் இலங்கையின் முக்கிய பிரமுகர்களுடன் அவர் பேணிவரும் பலமான உறவும், அதன் வாயிலாக இலங்கை மக்களுக்கு ஏற்படும் அபிவிருத்திப் பணிகளும் நாளாந்தம் நாம் அறியமுடியுமான ஒன்றாகும்.

**கே:கடைசியாக 93ஆவது சவூதி தேசிய தினத்துக்கான உங்கள் வாழ்த்துச் செய்தி என்ன?**

**ப:** 93ஆவது தேசிய தினத்தினை அனுஷ்டித்து தம் பொன்னான வரலாறுகளை மீட்டிக்கொள்ளும் சவூதி அரேபியாவின் மன்னர் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்களுக்கும், பட்டது இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களுக்கும், அனைத்து சவூதி அரசின் பொறுப்புதாரிகளுக்கும், சவூதிவாழ் அனைத்து மக்களுக்கும்; குறிப்பாக இலங்கைக்கான சவூதியின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி அவர்களுக்கும், அவரின் தூதரக அதிகாரிகள் அனைவருக்கும் எனது உள்ளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, மென்மேலும் சவூதி அரேபியா தனது அபிவிருத்திப் பயணத்தில் அனைத்து ரீதியிலும் முன்னேற வேண்டும், உலகில் தலைசிறந்த நாடகத் திகழ வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்தித்துக்கொள்கிறேன்.

**இக்பால் அலி**

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk





# சகவாழ்வுக்கான முன்மாதிரி முஹம்மத் (ஸல்)

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் மக்கா காலப்பகுதியில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்தனர். இக்காலப்பிரிவில் மக்காவில் கிறிஸ்தவர்கள், மஜூஸிகள், சிலைவணங்குபவர்கள் எனப் பல்வேறு நம்பிக்கைகளை உடையவர்கள் அதிகமாக இருந்தார்கள். இவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் எப்படி இங்கிதமாக நடந்து கொண்டார்கள் என்பது வரலாற்றில் அழியாத்தடம் பதித்த விடயமாக உள்ளது.

நபி (ஸல்) அவர்களுக்கு முந்திய மதமான கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களுடனான நபியவர்களின் முதலாவது சந்திப்பு கிறிஸ்தவ மதகுருவான பஹீராவுடன் நடைபெற்றது. நபியவர்களுக்கு 09 அல்லது 12 வயதிருக்கும் போது தனது சாச்சாவான அபீதாலிபுடன் சிரியாவுக்கு வியாபார நோக்கமாகச் செல்லும் வழியில் நபிகளார் பஹீராவைச் சந்திக்கின்றார். வேதத்தையுடைய இந்த கிறிஸ்தவ மதகுரு இறுதி நபி ஒருவர் வருவார் என்பதிலும், தான் வாழும் காலத்திலேயே அவர் தோன்றுவார் என்பதிலும் நம்பிக்கையுடையவராக இருந்தார். அதனால் அவர் சிரியாவில் இருந்து வரும் வியாபாரக் கூட்டங்களையெல்லாம் கூர்ந்து நோக்கி வந்தார்.

ஒருநாள் மக்காவிலிருந்து வருகின்ற வியாபாரக் கூட்டமொன்றை அவர் அவதானிக்கிறார். அவர்களுக்கு மேகம் நிழலாக வந்து கொண்டிருந்தது. மரங்கள் அவர்கள் வரும் திசையில் வளைந்து நிழல் கொடுத்தன. இக்கூட்டத்தில் விஷேடமான ஒருவர் இருக்கிறார் என்பதை பஹீரா புரிந்து கொண்டார். அவர்களை விருந்துக்கு அழைத்து அவதானித்தார். விஷேடமான யாரும் அவரது கண்ணில்படவில்லை. உங்களுடன் வேறு யாராவது இருக்கிறார்களா என வினவுகிறார். எமது கால்நடைகளைப் பார்த்துக் கொள்வதற்காக ஒருவர் வெளியில் இருக்கிறார் என்று சொல்லப்பட்டதும் வெளியே வந்து பார்த்த பஹீரா, அவரிடம் தான் எதிர்பார்த்த அடையாளங்களைக் கண்டு கொள்கிறார். உடனே அவர் அபீதாலிபிடம் வந்து இவரை உடனே பாதுகாப்பாக ஊருக்கு அழைத்துச் செல்லுங்கள் என வேண்டுகோள் விடுத்தார். இச்சந்திப்பின் போது நபிகளார் சிறுவராக இருந்ததால் பஹீராவுடன் உரையாடாவிட்டாலும் பின்னாட்களில் கிறிஸ்தவ மத குருக்களை மதிப்பதற்கு இச்சந்திப்பு காரணமாக இருந்திருக்கிறது.

இத்தொடரில் தான் வரகா இப்னு நௌபல் எனும் கிறிஸ்தவ மத போதகருடனான சந்திப்பு நபியவர்களுக்கு சகஜமானதாக அமைந்திருந்தது. நபிகளாருக்கு வஹி இறங்கியதன் தாக்கத்தை தணிப்பதற்காக அவரை உளவள ஆலோசனைக்காக அரபுக் கிறிஸ்தவரான வரகா இப்னு நௌபல் என்ற தனது உறவினரான அறிஞரிடம் கதீஜா (ரழி) அவர்கள் நபியவர்களை அழைத்துச் சென்றார்கள். நபியவர்கள் தமக்கு நேர்ந்ததை அவரிடம் விபரித்த போது அவர்தான் ஜிப்ரீல், தூதினை ஏந்திவரும் வானவர். மூஸா (அலை) விடமும் இவர் தான் வந்தார்' எனக் கூறினார். மூஸா, ஈஸா (அலை) அவர்களுக்குப் பின்னரான தூதர் இவர் தான் என்பதை வரகா பின் நௌபல் புரிந்து கொண்டு, இவ்வேளை நான் இளைஞனாக இருந்திருக்க வேண்டுமே என ஆதங்கப்பட்டார்.

நபியவர்கள் தமது தூதை மக்காவில் எத்திவைத்த போது அதனை எதிர்த்த மக்கள் நபியவர்களைப் பின்பற்றியவர்களுக்கும் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். அவர்களைக் காப்பாற்றுவதற்கு அவர்களை வேறிடங்களுக்கு அனுப்ப வேண்டிய தேவை நபியவர்களுக்கு வந்தது. எங்கே அனுப்புவது என்றிருந்த நிலையில் அபீஸீனியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த கிறிஸ்தவ ஆட்சியாளர் நஜ்ஜாசியைப் பற்றி நபியவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. நஜ்ஜாசி மன்னன் வேதத்தை அறிந்த கிறிஸ்தவரென்றும் அங்கு நல்லாட்சி நடத்தி வருவதாகவும் அறிந்து கொண்ட நபியவர்கள் ஒரு கடிதத்தை எழுதி தனது மருமகன் ஜஃபருடன் (ரழி) 11 பேரை அபீஸீனியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். எனது மருமகன் ஜஃபரை சில முஸ்லிம்களுடன் உங்களிடம் அனுப்பி வைக்கிறேன். அவர் வந்தால் அவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. மன்னர் நஜ்ஜாசி அவர்களிடம் இயேசுவைப் பற்றி உங்களது மதம் என்ன சொல்கிறது என்று வினவினார். அதற்கு ஜஃபர் (ரழி) அவர்கள் ஈஸா (அலை) தொடர்பில் நபிகளாருக்கு அல்லாஹுத்தஆலா சொல்லிக் கொடுத்தவற்றிலிருந்து சபைக்கு எடுத்துச் சொன்னார். அதனைக் கேட்ட நஜ்ஜாசி மன்னன் அல்லாஹ்வின் மீது சத்தியமாக, மர்யமின் மகன் ஈஸா பற்றி நாம் நம்பிக்கை கொண்டிருப்பவற்றுக்கும் நீங்கள் சொல்வதற்கும் இடையில் ஒரு புல்லின் இடைவெளியளவும் வித்தியாசமில்லை எனக் கூறி எந்த மறுப்புமின்றி அவர்களை ஏற்றுக்கொண்டார். பின்னர் மேலும் 83 பேரை நபியவர்கள் இங்கு பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தார்கள். மக்காவிலுள்ள எதிரிகள் எவ்வளவு அழுத்தம் கொடுத்த போதிலும் நஜ்ஜாசி மன்னன் இவர்களுடைய பாதுகாப்புக்கு குந்தகம் விளைய இடமளிக்கவில்லை.

பின்னர் நபியவர்கள் மதீனாவுக்கு வந்து சமூகக் கட்டமைப்பொன்றை உருவாக்கிய போது நாடுகளின் தலைவர்களுக்கு தமது தூதினை கடிதம் மூலம் அறிவித்தார்கள். இந்த வகையில் நஜ்ரானின் மதத் தலைவரான அபூ ஹாரிஸுக்கும் காலித் பின் வலீத் மற்றும் அலீ இப்னு அபீ தாலிப் (ரழி) அவர்கள் மூலமாக நபியவர்கள் கடிதம் அனுப்பினார்கள். பின்னர் முகீரா இப்னு ஷுஃபாவை அனுப்பி தமது தூதை விளங்க வைத்தார்கள். இதனை தனது சபையில் கலந்துரையாடிய நஜ்ரானின் தலைவர் மார்க்கத்தைக் கற்றறிந்த 60 பேரை நபிகளாரைச் சந்திப்பதற்கு அனுப்பி வைத்தார். அவர்கள் மதீனாவில் நபியவர்களைச் சந்தித்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருந்து நபியவர்களின் தூதினை அறிந்து கொண்டார்கள். அவர்கள் தங்கியிருந்த காலங்களில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அவர்களின் வழிபாட்டுக்காக நபியவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் இடம் கொடுத்தார்கள். இறுதியில் அவர்கள் அபுல் காஸிமே, நாங்கள் உங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் நாங்கள் நாங்களாகவே திரும்பிச் செல்கிறோம். உங்களை நீங்களாகவே நாங்கள் விட்டுச் செல்கிறோம் எனச் சொல்லித் திரும்பிச் சென்றார்கள். நபியவர்களும் அவர்களை கண்ணியமாக வழியனுப்பினார்கள்.

இதுபோல ஏனைய நம்பிக்கைகளை உடையவர்களுடனும் நபியவர்கள் நடந்து கொண்ட பண்பாடுகள் இன்று வரையான மக்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கின்றன. ஒத்த கருத்தில் உள்ளவர்களுடனான அறிவுரீதியான உரையாடல்கள் பண்பாடான முறையில் நடந்திருக்கின்றன. அடுத்த மதங்களையும் மதித்து அவர்களது மதத்தலைவர்களையும் கண்ணியப்படுத்தி நபியவர்கள் நடந்து கொண்ட விதம் ஞாபகப்படுத்தப்படுவதற்கு ஏற்றதாகும்.

நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரியை நடைமுறைப்படுத்துவது சுன்னாவை நடைமுறைப்படுத்திய நன்மையை நமக்குப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

**பியாஸ் முஹம்மத்...**

# பரிகாசம் செய்யாதீர்கள்

நீங்கள் இவ்வுலகில் குடும்ப வாழ்வில் ஈடுபடும் போது, உங்கள் பகுதிவாழ் மக்களுடனும், உறவினர்களுடனும் தொடர்பு கொள்ளும் போது, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது என வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இரண்டு பாதைகளை எதிர்நோக்குவீர்கள். அவற்றில் முதல் பாதை மறுமை நம்பிக்கையின் தேட்டத்தை நிறைவு செய்யும் அடுத்தபாதை உலகாதாயத் தேட்டத்தை நிறைவு செய்யும். இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதற்பாதையையே தெரிவு செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.



அதனால் அடிக்கடி சுய மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும். எத்தனை சந்தர்ப்பங்களில் உலகம் தன்பால் ஈர்ப்பதில் வெற்றி கண்டுள்ளது. அதேபோன்று எத்தனை சந்தர்ப்பங்களில் மறுமையின் பக்கம் செல்வதில் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள் என்று ஆய்வு செய்த வண்ணம் இருங்கள். எந்தக் குறைபாடுகளை உணர்கிறீர்களோ அதனை களைய முயலவேண்டும். மறுமைச் சிந்தனையுள்ள சான்றோர்களுடன் வலுவான தொடர்பு கொள்வது மறுமை வெற்றிக்கான வாய்ப்பாகவும் அமையலாம்.

ஒவ்வொரு மனிதரிடத்திலும் நல்ல குணங்களைப் போலவே தீய குணங்களும் இருக்கவே செய்யும். அக்குணங்களின் சதவீதத்தைப் பொறுத்தே மனிதன் நல்லவனாகவோ தீயவனாகவோ கணிக்கப்படுகிறான்.

தான் சிறியவனாக இருந்த போது பெரியர்கள் தன்னை நடத்திய விதம், தனக்கு ஏற்பட்ட அவமானங்கள், கொடுமைகள் போன்றவை நீங்காத வடுக்களாக ஒருவரின் மனதில் பதிந்து விடலாம். அவர் பெரியவராகும் போது பழைய கொடுமைக்கு பழிவாங்க அவரது மனம் துடிக்கும். அதனால் தன்னைவிடச் சிறியவர்களை அதே போன்ற அல்லது அதைவிடக் கடுமையான முறையில் நடத்தக் காரணமாகவும் அமைந்துவிடும். முதலாளி – தொழிலாளி, அண்ணன் - தம்பி விடயங்களிலும், பல்கலைக்கழகங்களில் முதலாம் ஆண்டு மாணவர்களை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் பகிடிவதை செய்தல் என பல சந்தர்ப்பங்களில் இவை இடம்பெறக்கூடியனவாக உள்ளன.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து ஒவ்வொருவரும் சுயமாக நீங்கிக்கொள்வதற்கு இறையச்சம், இறைசிந்தனை இன்றியமையாததது. இது தொடர்பில் அல் குர்ஆன், 'இறை நம்பிக்கையாளர்களே...! எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கலாம். எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாய் இருக்கலாம். நீங்கள் ஒருவரை ஒருவர் குத்திப் பேசாதீர்கள். ஒருவருக்கொருவர் மோசமான பட்டப் பெயர்களை சூட்டி அழைக்காதீர்கள். இறை நம்பிக்கை கொண்டவன் பின்னர் மோசமான செயல்களைச் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் இந்த நடத்தையைக் கைவிடவில்லையோ அவர்கள் தான் கொடுமைக் காரர்களாவார்கள் (49:11) என்று குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'சிறியவர்கள் மீது அன்பு காட்டத்தவறுபவரும் பெரியவர்களின் மதிப்பை உணராதவரும் எம்மைச் சார்ந்தவர் அல்லர்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் திர்மிதி)

எனவே இறைவழிகாட்டல்கள் படி செயற்படுவோம்.

**தொகுப்பு: ஸப்வான் உமைர்...**

# இஸ்லாத்தின் பார்வையில் கண் திருஷ்டி

அன்று முதல் இன்று வரை கண் திருஷ்டியை உண்மையாக உறுதியாக நம்புவோர் ஒரு சாராராகவும், இது உண்மையில்லையென ஒப்புக்கொள்ளாது மறுத்துரைப்போர் மறுசாராராகவும் இருக்க, இதைக் கவனத்திற் கொள்ளாது உதாசீனம் செய்வோர் மேலுமொரு சாராராகவும் உள்ளனர். எனினும் ஒரு உண்மை முஸ்லிமைப் பொருத்த வரையில் இவ்விடயம் பற்றி ஷரீஅத் நோக்கில் அலசிப்பார்ப்பது அவசியம்.

எம் முன்னோர்களின் வார்த்தைகளில் நாம் அதிகம் செவியுற்ற சொற்களில் ஒன்று கண் திருஷ்டியாகும். இது வெறும் வார்த்தையாகவும், மூடநம்பிக்கையாகவும் அமையாமல் அல் குர்ஆனும், நபி மொழியும் நவில்கின்ற ஒரு விடயமாக விளங்குகிறது.

அல் குர்ஆனில், 'முஹம்மதே! (ஸல்) இந்த அறிவுரையை செவியுற்ற போது (ஏக இறைவனை) மறுப்போர் உம்மை தமது பார்வைகளால் வீழ்த்தப் பார்க்கின்றனர். (அல் கலம்:51) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'கழா கத்ரை' முந்தக்கூடிய ஏதாவது ஒன்றிருக்குமெனில் அது கண் திருஷ்டியாகத்தான் இருக்கும். (ஆதாரம்: முஸ்லிம்) என்று கூறியுள்ளார்கள்.

யஃகூப் (அலை) அவர்கள், தன் மக்களை வழியனுப்பும் போது அவர்களுக்குச் செய்த அறிவுரையை அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான். 'என் மக்களே! நீங்கள் ஒரே வாசல் வழியாக நுழையாதீர்கள். பல்வேறு வாசல்களுடாக நுழையுங்கள்' (ஆதாரம்: யூசுப் 67) எனக் கூறியதாக அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

மக்களினால் தன் பிள்ளைகளுக்கு கண் திருஷ்டி ஏற்படுமென யஃகூப் (அலை) பயந்தார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அவருக்கு பதினொரு ஆண் பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் அழகு நிறைந்தவராக யூஸுப் (அலை) அவர்களும் உடல் வலிமை மிக்கவர்களும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், கண் திருஷ்டி ஒரு மனிதனை மண்ணறை வரை கொண்டு செல்லும், கண் திருஷ்டிக்கு உள்ளான கொழுத்த ஓர் ஒட்டகம் காலப்போக்கில் உருக்குலைந்து சமயலறை பாத்திரத்தில் அடைபட்டு விடும்' எனக் கூறினார்கள்.

(ஆதாரம்: அபூ நுயைம் பில் ஹில்யா)

இந்த அல் குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் கண் திருஷ்டி உண்மை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதனால் அதிலிருந்து பாதுகாப்புப் பெற முயற்சி செய்ய வேண்டும். அத்தோடு எம்மால் மற்றவர்களுக்கு கண் திருஷ்டி ஏற்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள எம்மை ஏக்கத்தில் ஆழ்த்தும், வியக்க வைக்கும் பிற சகோதரரிடம் காணப்படும் அழகு, அறிவு, திறமை, வசதி போன்ற விடயங்களை கண்டால் உடனடியாக கீழ் காணும் துஆவை ஓதவேண்டும்.'மாஷா அல்லாஹ் லாகுவ்வத இல்லா பில்லாஹ்' (ஆதாரம்: திர்மிதி)

அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நடக்காது என்ற உறுதித் தன்மையை உள்ளத்தில் ஆழப்பதிய வைப்பதுடன் இத்தகைய கண் திருஷ்டியிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புப் பெற குல் சூறாக்களை ஓதிவர வேண்டும். (ஆதாரம்: முஸ்லிம்) அது பயன்மிக்கதாக இருக்கும்.

**ஏ.றயீஸ் முப்தி...**
**(ஹாமிதி)**



# மரணம் நிர்ணயிக்கப்பட்ட வரையறை வாழ்வு

அல்லாஹ் மனிதர்களின் மூலத் தந்தையான ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அன்னாரது முதுகில் இருந்து உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் அனைத்து மனிதர்களையும் படைத்தான். அத்தோடு அவர்களையே அவர்களுக்கு சாட்சிகளாகவும் ஆக்கி வைத்திருக்கின்றான்.

இதனை அருள் மறையாம் அல் குர்ஆனில் அவன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றான்.

'(நபியே...) உங்களது இறைவன் ஆதமுடைய மக்களை அவர்களுடைய (தந்தைகளின்) முதுகுகளில் இருந்து அவர்களுடைய சந்ததிகளாக வெளியாக்கி, அவர்களையே அவர்களுக்கு சாட்சியமாகவும் வைத்து (அவர்களை நோக்கி) 'நான் உங்கள் இறைவன் இல்லையா?' என்று கேட்டதற்கு 'ஏன் இல்லை. (நீ தான் எங்கள் இறைவன்' என்று) நாங்கள் சாட்சியம் கூறுகிறோம்' என்று அவர்கள் கூறியதை (நீங்கள் அவர்களுக்கு) ஞாபகமூட்டுங்கள். ஏனென்றால் (இதனை ஒருவரும் எங்களுக்கு ஞாபகமூட்டாததால்) நிச்சயமாக நாங்கள் இதனை (மறந்து) விட்டுப் பாராமுகமாகி இருந்தோம்' என்று மறுமை நாளில் சொல்லாமல் இருப்பதற்காகவும்' (07:172)

ஆலமுல் அர்வாஹ் (ஆன்மாக்களின் உலகம்) வில் வைத்து உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவரும் இந்த உறுதிமொழியை அல்லாஹ்வுக்கு வழங்கியுள்ளனர். அல்லாஹ்வின் நிர்ணய ஏற்பாடுகளுக்கு அமைய ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட காலம் ஆலமுல் அர்வாஹ்வில் இருந்து விட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் தாயின் கர்ப்பப்பையின் ஊடாக உலகிற்கு வருகின்றனர்.

மனிதன் உலகில் வீண் விளையாட்டுக்காகப் படைக்கப்படவில்லை. உலகில் நிறைவேற்றுவதற்கு அவனுக்கு மாபெரும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுவே பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற உயர் அந்தஸ்து ஆகும். தமக்குரிய வரையறுக்கப்பட்ட வாழ்வுக்காலத்தில் அவன் இப்பொறுப்பை நிறைவேற்றிட வேண்டும். அப்போது தான் எதிர்வரும் கப்ரு, மஹ்ஷர் மைதானம், இறுதித்தீர்ப்பு நாள் உள்ளிட்ட வாழ்வுக் கட்டங்கள் வளமானதாகவும் வெற்றிகரமாகவும் அமையும்.

அதனால் இப்பொறுப்பை நிறைவேற்றுவற்கு தேவையான இறைவழிகாட்டுதலையும் அதன் நிமித்தம் அவனுக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்குவதற்காக அனைத்து படைப்புக்களையும் வசப்படுத்தி கொடுத்தும் தான் அல்லாஹ் மனிதனைப் படைத்திருக்கிறான்.

ஆலமுல் அர்வாஹ், தாயின் கருப்பை வாழ்வுக்காலம் போன்று உலக வாழ்வுக் கட்டமும் மனிதனுக்கு வரையறுக்கப்பட்டது தான். ஆனால் பூமியில் வரையறுக்கப்பட்ட தெரிவுச் சுதந்திரமும் அல்லாஹ்வினால் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பயன்படுத்தி அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற பொறுப்பை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும்.

அதேநேரம் அல்லாஹ்வின் பிரதிநிதி என்பதற்காக எவரும் உலகில் நிரந்தரமாக உயிர்வாழ முடியாது. அதற்கான அனுமதியை அல்லாஹ் எவருக்கும் வழங்கவில்லை. அதனால் தமக்கு கிடைக்கப்பெறும் வாழ்வுக்காலத்தில் தம் பொறுப்புகளை நிறைவேற்றுவதே அவரவர் கடமையாகும்.

ஏனெனில், 'ஒவ்வொரு வகுப்பாருக்கும் (அவர்கள் வாழ்வும், அழிவும்) ஒரு காலமுண்டு. அவர்களுடைய காலம் வரும் பட்சத்தில் ஒரு வினாடி பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள்'. (07:34) என்று அல் குர்ஆன் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. அதனால் நிர்ணயிக்கபட்டுள்ள வாழ்வுக் காலம் முடிவுற்றதும் அடுத்த வாழ்வுக்கட்டத்தை நோக்கி பயணித்தே ஆக வேண்டும். அதுவே மரணமாகும்.

அதனை அல்லாஹ், 'ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும்' (3:185) என்று உறுதிபடக்கூறியுள்ளான். 'நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும். மிகப் பலமான உயர்ந்த (கோட்டை) கொத்தளத்தின் மீது நீங்கள் இருந்த போதிலும் சரியே' (4:78) என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

என்றாலும் மரணத்தை தவிர்த்துக் கொள்ளவும் வாழ்வுக் காலத்தை நீடித்துக் கொள்ளவும் மனிதன் எத்தனையோ முயற்சிகளை மேற்கொள்கிறான். ஆனால் அவை அனைத்தும் சாத்தியமற்ற முயற்சிகளாகும். உலக வாழ்வுக்காலம் நிறைவுற்றதும் ஒரு வினாடி கூட முன்னோக்கியோ அல்லது பின்னோக்கியோ நகரவே முடியாது.

இதனை அல் குர்ஆனே, 'இவர்கள் (தங்கள் வீட்டில்) இருந்து கொண்டே (போரில் இறந்து) போன தங்கள் சகோதரர்களைப் பற்றி 'அவர்களும் எங்களைப் பின்பற்றி இருந்தால் (போருக்கு சென்று இப்படி) கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள் என்றும் கூறினார்கள். (ஆகவே நபியே) கூறுவீராக... நீங்கள் உண்மை சொல்பவர்களாக இருந்தால் (அவர்களை என்ன, முதலில்) நீங்கள் உங்களை விட்டு மரணத்தைத் தடுத்துப் பாருங்கள்' (3:168) என்று சவால் விட்டிருக்கிறது. அதனால் அல்லாஹ் நிர்ணயித்துள்ள நேர காலத்தில் மரணத்தை அடைந்தே தீர வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனாலும் நபிமொழிகளில் வந்துள்ள அறிவிப்புகளின் படி துஆ, ஸதகா, தானதர்மங்கள் ஊடாக மரணத்தை பிற்படுத்தலாம். ஆனால் அல்லாஹ் நிர்ணயித்துள்ள இடத்தில் மரணம் நேரவே செய்யும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'கழாவை துஆவைத் தவிர எதுவும் தட்டாது, மேலும் வாழ்நாளை நல்ல நன்மையான கருமங்களைத் தவிர எதுவும் அதிகரிக்கச் செய்யாது' (ஆதாரம்: திர்மிதி) என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேநேரம் 'நிச்சயமாக தான தர்மம் செய்வது கெடுதிகளை தடுத்துவிடும். மோசமான மரணத்திலிருந்து பாதுகாப்பு பெற்று தரும்' (ஆதாரம்: திர்மிதி) என்றும், 'ஒவ்வொரு மனிதனும் எதற்காக படைக்கப்பட்டானோ அது அவனுக்கு இலகுபடுத்தப்பட்டதாக இருக்கும்' (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்) என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனாலும் மரணம் உறுதியானது. அதனைத் தவிர்த்துக் கொள்ளவே முடியாது. நபி(ஸல்) அவர்களும் அதனைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

'நிச்சயமாக ஒரு மனிதனை அவனது மரணம் தேடுவது போன்று அவனுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள உணவும் தேடுகின்றன' (ஆதாரம்: தபரானி, பஸ்ஸார்) என்றும், 'மலக்கல் மௌத் (அலை) அவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு நாளும் ஐந்து தடவைகள் நுழைகிறார்கள். வீட்டில் உள்ளவர்களில் யாருடைய அஜ்ல் (உயிர்வாழ்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவு) முடிவடைந்துவிட்டதோ அவரது உயிரைக் கைப்பற்றுவதற்கான வேலையைச் செய்கிறார்கள்' என்றும் அன்னார் எடுத்தியம்பியுள்ளார்கள். (ஆதாரம்: இப்னு வத்ஆன், அல் அர்பஈன்)

ஆகவே வரையறுக்கப்பட்ட உலக வாழ்வுக் காலம் நிறைவுற்றதும் விரும்பியோ விரும்பாமலோ நிகழக்கூடியது தான் மரணம். அது மற்றொரு வாழ்வுக் கட்டத்திற்கான தொடக்கமே அன்றி வேறில்லை. அதனால் அதனை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. எதிர்வரும் வாழ்வுக்கட்டங்கள் சிறப்பாகவும் வளமாகவும் அமைந்திட வேண்டுமாயின் இந்த உலக வாழ்வை அல்லாஹ்வின் கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு அமைய அமைத்துக்கொள்ள வேண்டும். அதுவே இஸ்லாத்தின் அடிப்படை போதனையாகும்.

**மர்லின் மரிக்கார்...**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. விவசாயம், உழவன், அறுவடை இவற்றுக்கு பொருத்தமான உரு



i. ii. iii.

02. இயற்கை, ஒளி, வெப்பம்



i. ii. iii.

03. இதனை மடித்து பெறப்படும் உருவானது







i. ii. iii.

04. வைக்கோல் - கடதாசி எனில்
i. நூல் - மெத்தை ii. இறப்பர் - செருப்பு iii. ஆடை – அணிகள்

05. எனக்கு 10 வயதாக இருக்கும் போது எனது அப்பாவின் வயது 42 ஆகும். எனக்கு 5 வயதாக இருக்கும் போது அப்பாவினதும் எனதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
i. 42 ii. 52 iii. 47

06. சபரியிடம் உள்ள பணத்தின் மூன்று மடங்குடன் 13 ரூபாவைக் கூட்டினால் மிதுர்சினியிடம் உள்ள பணத்தொகையான ரூபாய். 88.00 வரும் எனில் சபரியிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
i. ரூபாய் 50.00 ii. ரூபாய் 20.00 iii. ரூபாய் 25.00

07. குறித்த வரிசை ஒன்றில் தனுக்ஷன், முன்னால் இருந்து பார்க்கும் போது 10 ஆவதாகவும் பின்னால் இருந்து பார்க்கும் போது 9 ஆவதாகவும் நின்றான் எனில் அவ்வரிசையிலுள்ள மொத்த நபர்கள் எத்தனை பேர்?
i. 17 ii. 18 iii. 19

08. நோயாளி ஒருவர் நாளொன்றுக்கு இரண்டு மாத்திரைகள் வீதம் ஒரு நாளைக்கு மூன்று வேளை எடுக்க வேண்டுமாயின் 42 மாத்திரைகளை அவர் எத்தனை நாட்களுக்கு எடுத்துக் கொள்ள முடியும்?
i. 6 நாட்கள் ii. 7 நாட்கள் iii. 8 நாட்கள்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள உருக்களின் பெறுமதிகளை கருத்திற் கொண்டு அதன் கீழ் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**




09. ஒரு குடையும் இரண்டு தொப்பிகளும் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
i. ரூபாய் 500.00 ii. ரூபாய். 300.00 iii. ரூபாய் 450.00

10. மூன்று கடிகாரங்களும் ஒரு குடையும் எவ்வளவு ரூபாய்?
i. ரூபாய் 300.00 ii. ரூபாய் 350.00 iii. ரூபாய் 400.00

11. மூன்று தொப்பிகள் வாங்க எவ்வளவு பணம் தேவைப்படும்?
i. ரூபாய் 450.00 ii. ரூபாய் 550.00 iii. ரூபாய் 750.00

12. ஒருவர் அவரது வீட்டிலிருந்து மேற்கு நோக்கி பயணம் செய்து பின்பு தெற்கு நோக்கி சென்று இறுதியில் கிழக்கு நோக்கி சென்றார். அவரது பயணப் பாதையை விளக்கும் உரு எது?



i. ii. iii.

13. ஒரு கைக்குட்டை தைக்க 45cm துணி தேவை எனில் அதுபோல 10 கைக்குட்டைகள் தைக்க தேவையான துணியின் அளவு யாது?
i. 40m 50 cm ii. 4m 500 cm iii. 4m 50 cm

14. நாடு, மாகாணம், மாவட்டம் இதனை சரியாக காட்டும் உரு




i. ii. iii.

15. அடுத்துள்ள இரண்டு இலக்கங்களை கூட்டும் போது விடை 7 ஆகவும் பெருக்கும் போது விடை 12 ஆகவும் வரும் இலக்கங்கள் எவை?
i. 6, 2 ii. 4, 3 iii. 4, 5

16.




i. 5 ii. 4 iii. 3

17. இவ்வுருவின் சுற்றளவு யாது?
i. 34 cm
ii. 17 cm
iii. 26 cm




18. கறையான், கிளி என்பவற்றின் வாழ்விடங்கள் முறையே
i. பொந்து, புற்று ii. பொந்து, வளை iii. புற்று, பொந்து

19.




i. 7 ii. 6 iii. 5

20. பசு, யானை, எறும்பு, தவளை, பூனை இவற்றினை பருமன் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் நடுவில் வருவது
i. பசு ii. தவளை iii. பூனை

21. பாடசாலையில் கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்பிப்பதற்கான முக்கிய காரணம்
i. ஒழுக்கம் வாழ்வுக்கு அத்தியாசியம் என்பதனால்
ii. கல்வி கற்பதனால் ஒழுக்கமின்றி போவதனால்
iii. ஒழுக்கம் அவசியமற்ற பண்பு என்பதால்

22. காகிதமொன்று நான்கு சமபகுதிகளாக மடிக்கப்பட்டு இவ்வாறு வெட்டப்பட்டது. அதனை பிரித்துப் பார்த்தால் கிடைக்கும் உருவானது





i. ii. iii.

23. பின்வருவனவற்றுள் செங்கோணத்தைக் கொண்டிராத உருவானது



i. ii. iii.

24.



இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கையானது?
i. 6
ii. 7
iii. 8

25. முட்டையிட்டு அடைகாத்துக் கொண்டிருந்த குயில் இனிமையாக கூவியது. இக்கூற்று பிழை என்பதற்கான காரணமாக அமைவது,
i. குயில் முட்டை இடல் ii. குயில் அடைகாக்காது
iii. குயில் இனிமையாக கூவாது

26. ஒரு மண்டபத்தில் 2/5 பங்கு பெண்கள், 1/5 பங்கு சிறுவர்கள் இருந்தனர். அங்கிருந்த ஆண்களின் எண்ணிக்கை 50 எனில் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?
i. 50 ii. 100 iii. 75

27. திறந்திருக்கும் புத்தகமொன்றின் இடது பக்கத்திலுள்ள எண் 130 எனில் மேலும் 2 தாள்களை புரட்டிய பின் இடது பக்கமுள்ள தாளின் எண் யாது?
i. 132 ii. 134 iii. 135

28. ஒரு மாம்பழத்தினையும் அதன் நான்கு மடங்கு பெறுமதியான தோடம் பழத்தினையும் வாங்க கோகுல் ரூபாய் 200.00 கடைக்காரருக்கு கொடுத்தான் எனில். ஒரு மாம்பழத்தின் விலை யாது?
i. ரூபாய் 40.00 ii. ரூபாய் 50.00 iii. ரூபாய் 100.00

29. 1975ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு, எத்தனையாம் தசாப்தம்?
i. இருபதாம் நூற்றாண்டு ஏழாம் தசாப்தம்
ii. பத்தொன்பதாம் நூற்றாண்டு எட்டாம் தசாப்தம்
iii. இருபதாம் நூற்றாண்டு எட்டாம் தசாப்தம்

30. கீழே காணப்படும் திண்ம உருக்களில் வட்ட வடிவமான முகத்தை கொண்டிராத உரு எது?



i. ii. iii.

31. வருடமொன்றில் 28 நாட்களை கொண்டுள்ள மாதங்களின் எண்ணிக்கை
i. 1 ii. 5 iii. 12

32. 2004ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி திங்கட்கிழமை எனில் அவ்வருடத்தில் டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை?
i. செவ்வாய்க்கிழமை ii. திங்கட்கிழமை iii. புதன்கிழமை

33. ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல என்ற தொடர் விளக்கும் பொருளானது
i. செய்ய முடியாத செயலை செய்ய முயலுதல்
ii. மிக ஊக்கத்துடன் செயற்படுதல்
iii. பெரிய வேலையை இலகுவாக செய்தல்

34. ஜனினாவிடம் 2 ரூபாய் நாணயங்களும் 5 ரூபாய் நாணயங்களும் மொத்தம் ரூபாய் 23.00 இருந்தது. அவளிடம் ஆகக்கூடியது எத்தனை 2 ரூபாய்கள் இருக்கலாம்?
i. 10 ii. 9 iii. 8

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

35. இவ்வுருவமைப்பில் அடுத்து வரும் உருவானது?



i. ii. iii.

36. W F L இவை ஒரே அளவான ஈர்க்குத் துண்டுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன எனில் இதன்படி அடுத்துவரவேண்டிய உரு எது?

i. T ii. V iii. I

37. எண் 50 தொடக்கம் 65 வரை எண்ணும் போது வருகின்ற இலக்கம் 5 களைக் கூட்டினால் வரும் விடை யாது?
i. 50 ii. 60 iii. 65

38. 20 தேங்காய்களின் விலை ரூபாய் 1400.00 எனில் மூன்று தேங்காய்களின் விலை யாது?
i. ரூபாய் 210.00 ii. ரூபாய் 350.00 iii. ரூபாய் 270.00

39. 6*l* பாலை 12 பேருக்கு சமமாக அருந்தக் கொடுக்க வேண்டுமாயின் ஒருவருக்கு கொடுக்கும் பாலின் அளவு யாது?
i. 750 ml ii. 500 ml iii. 250 ml

40. ஒரு கடிகார முகமொன்றில் மணித்தியால முள் ஒருமுறை முழுமையாக சுற்றி வர எடுக்கும் கால அளவு யாது?
i. 12 மணித்தியாலங்கள் ii. 24 மணித்தியாலங்கள்
iii. ஒரு நாள்

## கடந்த வார (15.09.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**
1. சுயசரிதை
2. மழை
3. நான் / எனது
4. பச்சைப்பசேல்
5. மருந்து
6. கண்

**II.**
7. சிறக்க
8. விளையும்
9. i. தொழிலாளி ii. முயற்சி iii. வறுமை
10. i. ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன.
ii. நோய்நொடியின்றி வாழ்தலே சிறப்பு ஆகும்.

**III.**
11. i. பொன்விழா ii. அந்தப்புரம்
12. i. பால் + சோறு ii. வெம்மை + நீர்
13. i. பெரியவரே! பக்கத்து கிராமத்துக்குச் செல்ல எவ்வளவு நேரமாகும்?
ii. பூந்தோட்டத்தில் மல்லிகை, முல்லை, ரோசா என்பன வளர்ந்திருந்தன.
14. i. தாள்
15. ஏமாற்றுதல்
16. i. நண்பன் ii. தெளிவு
17. i. பிள்ளை ii. குட்டி
18. வெண்மை நிறமானது

**IV.**
19. i. நான் தண்ணீர் குடிக்கின்றேன்
ii. நீங்கள் எங்கே போகிறீர்கள்?
20. i. சமனலயா ii. அம்பகஹா

**V.**
21. i. 4 கட்டங்கள்
22. i. 6 ii. 4
23. i. 11 ii. 4
24. 100.00 100.00 50.00 20.00
25.

| | | |
|---|---|---|
| 0.8 | 0.4 | 0.4 |
| 0.5 | 0.2 | 0.3 |
| 0.3 | 0.2 | 0.1 |

26. XX
27. ஏழாயிரத்து ஐந்நூற்று இருபத்திரண்டு
28. ரூபாய். 70.00
29. 00.25

**VI.**
30. 2
31. 3
32. 3
33. 2
34. 3
35. 1
36. 1
37. 2
38. 1
39. 2
40. 1
41. 2
42. 3
43. 1
44. 1
45. 3
46. 2
47. 1
48. 1
49. 3
50. 2
51. 2
52. 1
53. 1
54. 3
55. 2
56. 1
57. 3
58. 2
59. 3

# வடக்கின் உதயம்

## ஆனைக்கோட்டையில் நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்து தீக்கிரை

*யாழ். விசேட நிருபர்*



யாழ். ஆனைக்கோட்டை, சாவல்காட்டு பிரதேசத்தில் பேருந்தொன்று நேற்று வியாழக்கிழமை அதிகாலை (21) திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. ஆனைக்கோட்டை, சாவல்காட்டில் வசித்து வரும் பேருந்து உரிமையாளர், தனது வீட்டுக்கு முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை (20) இரவு பேருந்தை நிறுத்தி வைத்திருந்த போதே, அது தீக்கிரையாகியுள்ளது.

இந்நிலையில் பேருந்து உரிமையாளர், தீயை அணைக்க முற்பட்ட போதிலும், பேருந்து முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பேருந்து உரிமையாளர் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து, சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மின்னொழுக்கினால் பேருந்து தீப்பிடித்து எரிந்ததா அல்லது வன்முறைக் கும்பல்களின் நாசகார வேலையா எனும் கோணங்களில் விசாரணையை முன்னெடுத்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியாவில் கல் அகழ்வுப் பணிக்கு எதிராக விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

*வவுனியா விசேட நிருபர்*



வவுனியா, சின்ன விளாத்திக்குளத்துக்கு இயற்கையாக அமைந்துள்ள அணைக்கட்டை உடைத்து கல் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கதிரவேலர் பூவரசன்குளம் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள், ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை (20) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சின்ன விளாத்திக்குளம் குளக்கட்டு இயற்கையாக கற்பாறைகளை கொண்டமைந்ததுடன், 12 அடி நீரை சேமிக்கக்கூடிய சிறு நீர்ப்பாசனக் குளமாகவும் உள்ளது. இந்நிலையில், மேற்படி குளப்பகுதியில் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் கல்குவாரி அமைக்கப்பட்டு, கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில், குளத்தின் பாதுகாப்பு மற்றும் விவசாய செய்கைக்கு பாதிப்பு ஏற்படுமென, விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா பிரதேச செயலாளர், ஓமந்தை பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்த போது கல் அகழும் பணி நிறுத்தப்பட்டது.

ஆயினும், அவ்விடத்தில் கடந்த 15 நாட்களாக மீண்டும் கல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதுடன், குளத்தின் அணைப்பகுதி சேதமாகியுள்ளதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், பொலிஸார் வருகை தந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளுடன் கலந்துரையாடிய போது, கல் அகழ்வு பணியை இடைநிறுத்தி, குளத்தின் அணைப்பகுதியை செப்பனிட்டு தருவதாக தெரிவித்ததையடுத்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டுச் சென்றனர்.

## அச்சுவேலியில் மாணவருக்கு பாதணிகள் வழங்கிவைப்பு



யாழ். அச்சுவேலி, வளலாய் அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்று வரும், வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 36 மாணவர்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையினர் நேற்று முன்தினம் பாதணிகள் வழங்கி வைத்தனர்.

இந்த மாணவர்களின் நலன் கருதி மேற்படி பாடசாலை சமூகத்தினர், பூமணி அம்மா அறக்கட்டளையினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய, மாணவர்களுக்கு பூமணி அறக்கட்டளையினர் இந்த உதவியை வழங்கினர்.

அம்மா பூமணி அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் விசுவாசம் செல்வராசாவின் பணிப்புக்கமைய, 40 ஆயிரம் ரூபா பெறுமதியில் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், ஆலோசகர் இ.மயில்வாகனம், நிர்வாகசபை உறுப்பினர் யா.தேவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோப்பாய் கலாசாலையில் ஆங்கில தின நிகழ்வு

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினுடைய ஆங்கில மன்றத்தின் ஏற்பாட்டில் நூற்றாண்டுகால ஆங்கில தின விழா கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை (22) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் எம்.ஜீவராணி புனிதாவும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர், கவிஞர் சோ.பத்மநாதனும் கௌரவ விருந்தினராக கலாசாலையின் முன்னாள் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் எம்.ஜே.எஸ்.முத்துக்குமாரசாமியும் கலந்துகொள்கின்றனர்.

ஆங்கில தினத்தையிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இதன்போது வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

*தலைமன்னார் விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்*



சுங்கவரி செலுத்தாமல் நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர் மன்னார், உயிலங்குளம் பிரதான சந்தியில் கடந்த செவ்வாயன்று (19) மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேகநபரிடமிருந்து 2,900 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதுடன், இதன் பெறுமதி 50,000 ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்பிட்டியிலிருந்து பேருந்தில் கொண்டுவரப்பட்டு, மன்னார் நகரிலுள்ள இரவுவேளை உணவகங்களுக்கு இந்த சிகரெட்டுகள் விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சந்தேகநபர் கல்பிட்டியைச் சேர்ந்த 23 வயதுடையவரென, மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

## நானாட்டானில் டிப்பர் வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு



*மன்னார் குறூப் நிருபர்*

மன்னார், நானாட்டானின் கட்டைக்காடு காட்டுப் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) மாலை 4.00 மணியளவில் டிப்பர் வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நானாட்டான், இராசமடு சாளம்பன் பிரதேசத்தில் வசித்து வரும் 55 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராசா ஞானசேகரம் என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தை தொடர்ந்து, டிப்பர் வாகனச் சாரதியும் அவரது உதவியாளரும் விபத்து இடம்பெற்ற இடத்திலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது, இருவரையும் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அக்கரைப்பற்றில்

# கட்டணம் செலுத்தாத பாவனையாளரின் நீரிணைப்பை துண்டிக்க ஏற்பாடுகள்

## பிராந்திய முகாமையாளர் முஸாஜித்



**ஒலுவில் விசேட நிருபர்**

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய காரியாலயத் துக்குட்பட்ட பகுதிகளில் மாதாந்த நீர்ப்பாவனை கட்டண நிலுவையை செலுத்தாத நீர்ப் பாவனையாளர்களின் இணைப்புகள் துண்டிக்கப்படவுள்ளதாக, அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம்.முஸாஜித் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, மருதமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், இறக்காமம், சம்மாந்துறை, ஆலையடிவேம்பு, பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளில் கடந்த ஆறு மாதங்களாக மாதாந்த நீர்ப் பாவனை கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளதாகவும், பாவனையாளர்களுக்கு நீர் துண்டிப்பு தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நீர்ப் பாவனையாளர்களின் நிலுவைக் கட்டணம் மற்றும் பாவனையின் அளவு போன்றவற்றை கருத்திற்கொண்டே நீர் இணைப்பு துண்டிக்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், கட்டண நிலுவையை செலுத்தாமலுள்ள வாடிக்கையாளர்கள் நீர்க் கட்டணத்தைச் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இதேவேளை, நீர் துண்டிப்பு செய்யப்படும் வாடிக்கையாளர்கள், நீர்க் கட்டண பட்டியல் தொகையுடன் அபராதத்தையும் முழுமையாக செலுத்திய பின்னரே மீள் இணைப்பை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது பல சவால்களுக்கு மத்தியிலேயே பாவனையாளர்களுக்கு குடிநீரை விநியோகித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.


**கம்புறுப்பிட்டிய பிரதேச சபை**

**2023ஆம் ஆண்டிற்காக விலைமனுக் கோரல்**

கம்புறுப்பிட்டிய பிரதேச சபைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அதனடிப்படையில் எமது நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கின்ற பொருட்கள் பற்றிய சகல விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை கம்புறுப்பிட்டிய பிரதேச சபை FaceBook பக்கத்தில் மற்றும் www.kamburupitiya.ps.lk இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகள்: 041-2292275**
**2023.09.18ம் திகதி**
**கம்புறுப்பிட்டிய பிரதேச சபை**

**செயலாளர்,**
**கம்புறுப்பிட்டிய பிரதேச சபை**


**தேசிய லொத்தர் சபை – National Lotteries Board**
புதன்கிழமை 2023.09.20 – உத்தியோகபூர்வ முடிவுகள் – www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5243
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 27,711,616.00
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 8 0 5 1 6 1

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3485
சீட்டிழுப்பு திகதி: 2023.09.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: Rs. 61,537,179.20
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 27 35 42 70
விசேட எழுத்து: F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 57133

**லக்கி 7**
திகதி: 20.09.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 0069
வெற்றி இலக்கினம்: கடகம்
L7 இலக்கம்: 0 9
வெற்றி இலக்கங்கள்: 9 2 6 3 4 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 10,965,738.00

**ராசி சுப பலன் – Handahana**
சீட்டிழுப்பு திகதி: 2023-09-20
சீட்டிழுப்பு இலக்கம்: 552
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 3,137,073.20
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 01 17 40 42
விசேட இலக்கினம்: சிம்மம்

**தன நிதானய**
தேதி: 2023/09/20
சீட்டிழுப்பு இலக்கம்: 1273
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 111,079,039.20
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 05 37 69 76
விஷேட ஆங்கில எழுத்து: L
Double Chance இலக்கம்: 13571

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம்: 1591
20/09/2023
69068
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 408,341,516.00
ஆங்கில எழுத்து: O
சுப்பர் இலக்கம்: 18
வெற்றி இலக்கங்கள்: 04 19 38 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

களுவாஞ்சிக்குடி

# விவசாயிகளுக்கு உதவித்திட்டம்



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, மண்முனை தென்எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களும் உயர் ரக பயிற்றை விதைகளும் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) வழங்கி வைக்கப்பட்டன. விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் இவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேற்படி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட 77 பயனாளிகளுக்கு பயிற்றை உற்பத்திக்கான ஒரு கிலோகிராம் விதைகளும், நீர்க் குழாய்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.


**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**ரூ.220,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்**

11.00% 2026 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 135,000 மில்லியனையும், 09.00% 2028 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 85,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 செத்தெம்பர் 25ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.00% 2026'A' | 09.00% 2028'A' |
|---|---|---|
| ISIN* | LKB01226F014 | LKB01628G019 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 135,000 மில்லியன் | ரூ. 85,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.00% ஆண்டொன்றிற்கு | 09.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2014 யூன் 01 | 2012 யூலை 01 |
| **முதிர்வுத் திகதி** | **2026 யூன் 01** | **2028 யூலை 01** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 யூன் & 01 திசெம்பர் | 01 சனவரி & 01 யூலை |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ. 3.6967 | ரூ. 100 இற்கு ரூ. 2.2745 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 செத்தெம்பர் 25, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2023 செத்தெம்பர் 25, திங்கட்கிழமை, மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2023 ஒக்டோபர் 02** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.டி.வை.சீ. வீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**



**தேசிய கல்வி நிறுவகம்**

**உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி – 2023/2024**

தேசிய கல்வி நிறுவகத்தின் சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு வழங்கும் உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமா கற்கைநெறிக்கு இரண்டாவது குழுவினருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கற்கைநெறிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்**

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாகவிருத்தல்

மற்றும்

- க.பொ.த. (உ. தரம்) சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பூரத்தி செய்திருத்தல்

**கற்கைநெறித் தகவல்**

| | | |
|---|---|---|
| காலம் | - | 02 வருடங்கள் |
| மொழி | - | சிங்களம் / தமிழ் |
| தேர்வு முறை | - | நேர்காணல் |
| நடாத்தப்படும் முறை | - | வார இறுதி நாட்கள்(மு.ப 8.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரை) கற்பித்தல் முறை - விரிவுரைகள், செயன் முறை |
| பாடநெறிக்கட்டணம் | - | ரூபா 90,000.00 (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்) மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். |
| விண்ணப்பக் கட்டணம் | - | ரூபா 2000.00 |
| பதிவுக் கட்டணம் ரூபா | - | 1000.00 |

* பாட நெறியைப் பர்த்தி செய்ததன் பின்னர் இலங்கைத் தகைமைச் சட்டகம் (SCF) IV கல்வி மட்டத்தைப் நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

- நிகழ்நிலை மூலம் விண்ணப்பத்தை அனுப்பும் போது பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- தேசிய கல்வி நிறுவகத்தின் sp.nic.lk இணையத்தளத்தில் உள்ள மாணவர் பதிவுக்குச் (Student registration) செல்லவும்.
- முதலில் உங்களது கற்கை நெறியைத் தேர்ந்தெடுத்து (select your programme) Next என்பதை அழுத்தி (Click) விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துங்கள். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் தகவல்கள் சரியானவையா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- உறுதிப்படுத்தியதன் பின்னர் (save) திரையில் உங்களது பதிவிலக்கம் மற்றும் கற்கை நெறிக்கான கட்டணம் தொடர்பான விபரங்கள் காணப்படும். அங்கு காணப்படும் விண்ணப்பப்படிவ கட்டணத்திற்கான இலக்கத்தை (Reference number) குறித்துக் கொள்ளுங்கள். அங்கு இறுதியில் download application ஐ click செய்யும் போது நீங்கள் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தைப் பதிவிறக்கம் செய்து அதிபர் ஊடாக வலயக்கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்திய பின்னர் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் வைப்புச்சீட்டுப் பத்திரத்தைப் பயன்படுத்தி (Referencc number) மற்றும் உங்கள் விபரங்களை குறித்து ரூபா 2000.00 வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து உங்களது முகவரியுடன் ரூபா. 50/- முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுள்ள கடித உறையில் பிரிவுத்தலைவர், சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

  கடித உறையின் மேல் மூலையில் உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி 2023/ 2024 எனக் குறிப்பிடவேண்டும்.

  தொடர்புகளுக்கு 0117601504 (திரு. மொஹான்) அல்லது 0117601714 (திரு. அரவிந்த) வார நாட்களில் தினமும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

  உங்களது விண்ணப்பப்படிவம் ஏதேனுமொரு காரணத்தினால் நிராகரிக்கப்படின் விண்ணப்பப்படிவக் கட்டணம் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

  **கவனிக்க வேண்டியவை -** நீங்கள் விண்ணப்பிக்கும் மத்திய நிலையத்தில் போதுமான விண்ணப்பம் கிடைக்கப் பெறவில்லை எனின் அந்த மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள மத்திய நிலையத்துடன் இணைக்கப்படுவீர்கள்.

**கற்கைநெறி நடைபெறும் நிலையங்கள்**

1. தேசிய கல்வி நிறுவகம் (சிங்கள மொழி மூலம் )
2. ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
3. நில்வலா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
4. ருகுண தேசிய கல்வியியற் கல்லூரி
5. வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்களமொழி மூலம்)
6. ருவன்புர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
7. புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
8. மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
9. மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)
10. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)

**கலாநிதி. திரு பிரசாத் சேயதுங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**


# கிண்ணியாவில் தொழிற்சந்தை; இளைஞர், யுவதிகள் பங்கேற்பு



**கிண்ணியா தினகரன் நிருபர்**

மனிதவள வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளின் நலன் கருதி தொழிற்சந்தையொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது. கிண்ணியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலும் கிண்ணியா பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ஃபாகிமா ரிஸ்வியின் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில், தொழில் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இந்த தொழிற்சந்தையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் சுமார் 120 பேர் பங்குகொண்டு நன்மையடைந்தனர். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், கிராம நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலக மனிதவள திணைக்கள இணைப்பாளர், உதவி இணைப்பாளர், தம்பலகாமம் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், மொரவெவ பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர், கிண்ணியா பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் தொழிற்சந்தையில் கலந்துகொண்டு தமது சேவையை வழங்கினர்.


**பெறுகை அறிவித்தல்**

**ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் மயுரபுர வார சந்தையை குத்தகைக்கு விடல் - இரண்டாம் முறை கோரல்**

ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு சொந்தமான கீழே பெயர் குறிப்பிடப்படும் வார சந்தையின் குத்தகை உரிமையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக 02 பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023 செப்டெம்பர் 22 முதல் 2023 ஒக்டோபர் 25 மு.ப.10.00 வரை இரண்டாம் முறை கேள்வி கோரலிற்காக என்னால் ஏற்கப்படும்.

கேள்விப் படிவங்கள் 2023.10.24 பி.ப.3.00 வரை தமது அடையாள அட்டை மற்றும் பதிவை உறுதிசெய்யும் கிராம அதிகாரி சான்றிதழை சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டும் இவ் அலுவலகத்தில் கீழே காணப்படும் கட்டணங்களை அறவிட்டு கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன் கிடைக்குமாறு, செயலாளர், ஹம்பாந்தோட்டை பிரதேசசபை, சூரியவெவ வீதி, மிரிஜ்ஜவில, ஹம்பாந்தோட்டை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிட்டு, கேள்வி விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம்.

2023 ஒக்டோபர் 25 மு.ப.10.15 இற்கு கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். சகல கேள்விப் பத்திரங்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் "ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு உரியது" கேள்வி நிபந்தனைகள் கேள்விபடிவங்களில் குறிப்பிட்டவாறு அமையும். சித்திகரமான கேள்விதாரரால் இரு வாரங்களுக்குள் பாதுகாப்பு பிணைத்தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

| வார சந்தையின் பெயர் | குறைந்தபட்ச கேள்வித்தொகை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| மயுரபுர வாரச் சந்தை | 21,850,000.00 | 5000.00 | 75000.00 |

**மேலதிக விபரங்களுக்கு - 0472258098/0472258099**
**ஜீ.என்.எஸ்.டி சில்வா**
**செயலாளர்**

**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை**
**2023 செப்டெம்பர் 22ம் திகதி**
**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில்**


# காத்தான்குடியில் செயலமர்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

பால்நிலை அடிப்படையிலான வன்முறையை குறைக்கும் பிரதேச திட்டமிடல் செயலமர்வொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை (20) காத்தான்குடி ஹோட்டல் பீச் வே மண்டபத்தில் நடைபெற்றது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையை தடுக்கும் வகையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலும் வினைத்திறன்மிக்க பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.

வன சீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு

## வன பாதுகாப்புத் திணைக்களம்

### இறுதி முடிவு தொடர்பான பொது அறிவிப்பு

**அரசாங்கத்திற்கு சொந்தமான கொட்டகம்பொக்க வனப்பகுதியினுல் நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட கல்ம படிகத் சுரங்கத் திட்டத்திற்கான ஆரம்ப சுற்றுச்சூழல் தேர்வு அறிக்கை தேசிய சுற்றுச்சூழல் சட்டம் பிரிவு 23 ஆ ஆ (4) இன் கீழான அறிவிப்பு.**

மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அறிக்கையை ஆய்வு செய்து, மத்திய சுற்றுச்சூழல் ஆணையகத்தின் ஒப்புதலின் பேரில், மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கு, 1993 ஆம் ஆண்டின் (01) ஆம் இலக்க விதிகள் தேசியச் சுற்றுச்சூழலின் (அனுமதிக்கான நடைமுறை) 13வது விதியின்படி இல.190A, இரத்னவீர கட்டிடம், ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடையில் அமைந்துள்ள வனப் பாதுகாப்புத் திணைக்களம் GSMB டெக்னிக்கல் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவரிடம் அனுமதியை பெற்றுக்கொள்ள வனப் பாதுகாப்புத் திணைக்களம் முடிவு செய்துள்ளது என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

**பொது வனப் பாதுகாப்பாளர்**
**வன பாதுகாப்புத் திணைக்களம்,**
தலைமை அலுவலகம், "சம்பத்பாய"
த.பெ.இல. 03, இராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.

---

# விலைமனு கோரல்

**சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் (CPSTL)**
**(விலைக்கோரல் இல. KPR/22A/2023)**

**கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கடிதக் கோப்புகள், காகிதங்கள், பத்திரிகை, பொலித்தீன், பிளாஸ்டிக், காட்போட், கண்ணாடி மற்றும் கண்ணாடி போத்தல் போன்றவற்றை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரல் 2023/2024**

சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் (CPSTL) தலைவரினால் 2023.'.2024ஆம் வருடத்தில், கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையத்திலுள்ள மேற்கூறப்பட்ட பொருட்களை ஒரு வருட காலத்திற்கு விற்பனை செய்வதற்காக பொருத்தமான கொள்வனவாளரை தெரிவு செய்வதற்காக அவைகளைக் கொள்வனவு செய்பவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைக்கோரல் தொடர்பான விபரமான தகவல்களை எமது (CPSTL) இணையதளத்தில் www.cpstl.lk பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை (வேண்டுகோள்) சமர்ப்பித்ததன் பின் ஆயிரம் ரூபா (ரூபா 1000.00) தொகையை (மீளளிக்கப்படாதது) (CPSTL) நிறுவனத்திற்குச் செலுத்தி 2023-09-22ஆம் திகதி முதல் 2023-10-05ஆம் திகதி வரையில் சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் மட்டும் பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்கூறப்பட்ட விற்பனை பொருட்கள் தொடர்பில் ஏதாவது தகவல் தேவையாயின் 0112572107 அல்லது 0112572108 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் முன்கூட்டியே திகதியொன்றை ஒதுக்கிக்கொண்டு மேற்கூறிய பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2023-10-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதான நுழைவாயிலின் அருகில் பாதுகாப்பு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம். அன்றைய நாளிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் மேற்கூறப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. மேலதிக விபரங்கள் விலைமனுக்களில் தரப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

**பெறுகை முகாமையாளர்,**
**பெறுகை அலுவலகம்,**
**சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட்,**
**முதலாம் மாடி, புதிய கட்டிடம், கொலன்னாவ, வெல்லம்பிட்டிய.**
**011-2572156**

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை பிரஜாவுரிமை பதிவேடுகளின் ஸ்கேனிங் (Scanning), அட்டவணைப்படுத்தல் (Indexing) மற்றும் தரவு உருவாக்கல் ஆகியவற்றிற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்வதற்கான பெறுகை**

**ஒப்பந்த இல. (IFB) : DIE/PRO/03/2023/32**

1. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை பிரஜாவுரிமை பதிவேடுகளின் ஸ்கேனிங், அட்டவணைப்படுத்தல் மற்றும் தரவு உருவாக்கல் ஆகியவற்றிற்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்வதற்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
3. 2023.09.22 ஆம் திகதியிலிருந்து 2023.10.12 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஆறாயிரம் ரூபாவை (6,000 இலங்கை ரூபா) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ஶ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05 ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள பெறுகைப் பிரிவின் பெறுகைக்கான பிரதி கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு காசாக செலுத்தப்படல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112-101559 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு ஆவணங்கள் 2023.09.22 ஆம் திகதியிலிருந்து 2023.10.12 ஆம் திகதியன்று வரையும் மேலேயுள்ள 3 ஆம் பந்தியின் முகவரியில் குறிந்துரைக்கப்பட்டுள்ள அமைவிடத்திலும் **www.immigration.gov.lk** என்ற திணைக்களத்தின் இணையதளத்தினூடாகவும் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தயாரிக்கப்பட்டு தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அதன் பின்னர், இவ்விரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, உரித்தான ஒப்பந்தப் பெயர் மற்றும் IFB இலக்கம் ஆகியன முத்திரையிடப்பட்ட இந்த தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2023.10.13 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது 3 ஆம் பந்தியில் குறிந்துரைக்கப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அல்லது பெறுகையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட திகதியிலிருந்தும் தொன்னூற்றொரு (91) நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

   **தலைவர்,**
   **திணைக்கள பெறுகைக் குழு,**
   **குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
   **05 ஆம் மாடி, ''சுஹுருபாய'',**
   **ஶ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்ல.**

6. 2023.10.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பத்தரமுல்ல, ஶ்ரீ சுபூத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05 ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் விலைமனு முன் சந்திப்பொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**05 ஆம் மாடி, ''சுஹுருபாய'',**
**ஶ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

## தரம்05 புலமைப்பரிசில் பரீட்சை

# மலையகம், கொழும்பில் இலவசக் கருத்தரங்கு

இந்த வருடம் ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஒருநாள் இலவச கல்விக் கருத்தரங்குகள், தமிழர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மலையகத்திலும் கொழும்பிலும் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (24) காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரையும் தெமட்டகொடை விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரையும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்குகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தமிழர் நற்பணி மன்றத்தின் செயலாளர் ப. முத்துக்குமாருடன் 072 5875785 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு, தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளுமாறும் நற்பணி மன்றம் கேட்டுள்ளது.

---

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### பெறுகை அறிவித்தல்

**Procurement of maintenance of Software Applications with O/S & Exchange Server upgrade under FMRP Project at Data Centre & Disaster Recovery Centre-IRD**

**செயற்றிட்டத்தின் பெயர்: Procurement of maintenance of Software Applications with O/S Exchange Server upgrade under FMRP Project at Data Centre & Disaster Recovery Centre-IRD**

செயற்றிட்ட இலக்கம் : **IR/PAM/15/28/191/2023**

தேவைப்படும் விலைமனுப்பிணை:
1. பிணைத் தொகை: 130,000.00
2. செல்லுபடியாகும் காலப்பகுதி: 2024.02.06 ஆம் திகதியன்று வரையும்.

1. "Procurement of maintenance of Software Applications with O/S Exchange Server upgrade under FMRP Project at Data Centre & Disaster Recovery Centre-IRD" என்பதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (பிரதானமானது) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் -
   - அ. அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
   - ஆ. இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - இ. கடந்த மூன்று வருடங்களில் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது **300 மில்லியன் ரூபாவாகவிருத்தல்** வேண்டும்.
   - ஈ. Participation as a Main Supplier, must provide three (3) or more data center AMC references within the last 5 years for projects will similar nature (1) AMC project should be more than seven (7) million excluding hardware maintenance cost (Copies of Pos to be attached with the bid document) that have been successfully and substantially completed that is similar to the scope of works indicated in the Schedule of Requirements.
4. விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-05, ஜாவத்த, உள்நாட்டு இறைவரி திணைக்களம், தரவு மையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2590952)
5. **2023.09.22 ஆம் திகதியிலிருந்து 2023.10.05 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பதினைந்தாயிரம் ரூபாவை (15,000 ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம்,** ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
6. **2023.10.06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதானமானது), பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை, 15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரி திணைக்களம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.** தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. **விலைமனுக்கள் 2024.01.06 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.**
8. அனைத்து விலைமனுக்களும் **ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் ரூபா (130,000 ரூபா) விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதும்** இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணத்தின் படிவத்தின் பிரகாரம் வங்கி உத்தரவாத பாங்கில் மாத்திரமைந்த விலைமனுப்பிணையொன்றாக இருத்தல் வேண்டும். **விலைமனுப்பிணையானது 2024.02.06 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.**

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதானமானது),**
**பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை,**
**15 ஆம் மாடி,**
**உள்நாட்டு இறைவரி திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**
**திகதி: 2023.09.21**

---



மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டியிலிருந்து தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவ, மாணவிகளான தரம் 06 ஆர்.சிம்லா 1ஆம் இடம் , தரம் 07 எம்.எப்.சைய்மா 02 ஆம் இடம் , எம்.ஆர். ரைபா 03ஆம் இடம் , தரம் 08 எம்.எஸ். ஆயிஷா 02ஆம் இடம், தரம் 10 என். அல்மாஸ் 03ஆம் இடம், தரம் 11 எம். அஷ்பாக் அஹமட் 01ஆம் இடம்பெற்ற மாணவர்களுடன் வித்தியாலய அதிபர் எம். கே.எம்.ஜஹ்பார் உள்ளிட்ட ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட படம்.
(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

---

# ஜப்பான் தூதரக அரசியல் உயரதிகாரி புத்தளம் காஸிமிய்யாவுக்கு விஜயம்



**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் அரசியல் பிரிவின் உயரதிகாரி கனா மொரிவாக்கி ( Kana Moriwaki) தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (19) புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரிக்கு விஜயம் செய்தனர்.

கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்ஹ் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் குறித்த குழுவினரை வரவேற்றார்.

அத்துடன், புத்தளத்தின் சமகால அரசியல், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு நிலைமைகள் தொடர்பாக கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்ஹ் அப்துல்லாஹ் ஆலிமிடம் கேட்டறிந்துகொண்டனர்.

அத்தோடு, காஸிமிய்யா அரபுக் கல்லூரி வளாகத்தை பார்வையிட்ட அக்குழுவினர், அங்கு கல்வி பயிலும் மாணவர்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

மேலும், கல்லூரிக்கு வருகை தந்த குழுவினருக்கு கல்லூரியின் அதிபரால் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - வடமேல் மாகாணம்**

**சிற்றுண்டிச்சாலை மற்றும் வாகனத் தரிப்பிடத்தை குத்தகைக்கு வழங்குதல் - 2024**

2024ஆம் வருடத்தில் குருநாகல் மற்றும் புத்தளம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பின்வரும் ஆதார வைத்தியசாலைகளில் சிற்றுடிண்டிச்சாலை மற்றும் வாகனத் தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் 2023-10-25ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இதற்குரித்தான விலைக்கோரல் ஆவணங்களை 2023-09-22ஆம் திகதி முதல் 2023-10-24ஆம் திகதி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தினுள் பின்வரும் முகவரிக்கு வருகை தந்து வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து விலைக்கோரல் கட்டணமாக 3,000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| ஆதார வைத்தியசாலை | சேவை | குத்தகைக் காலம் |
|---|---|---|
| தம்பதெனிய | சிற்றுண்டிச்சாலை | 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை |
| நிகவெரட்டிய | சிற்றுண்டிச்சாலை | 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை |
| கல்கமுவ | சிற்றுண்டிச்சாலை | 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை |
| புத்தளம் | சிற்றுண்டிச்சாலை / வாகனத் தரிப்பிடம் | 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை |

2. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்

இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் விண்ணப்பங்களை கடித உறையில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் சேவையின் பெயர் மற்றும் வைத்தியசாலையின் பெயரைக் குறிப்பிட்டு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளுக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தின் தலைமைக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடலாம். 2023-10-25ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுறும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 11.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**வடமேல் மாகாணம்.**
**2023-09-18ஆம் திகதி.**

---

## பாடசாலை மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில்

# பாத்திமா நஜீரா பர்வின் தேசிய மட்டத்தில் முதலிடம்



**(கல்நேவ தினகரன் விசேட, கெக்கிராவ குறூப் நிருபர்கள்)**

2022 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டத்திலான சமூக விஞ்ஞானப்போட்டியில் அநு./ கடாண்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 12,13 பிரிவில் கற்கும் மாணவி என். நஜீரா பர்வின் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலைக்கு தேசிய மட்டத்தில் பெருமை சேர்த்த இம்மாணவிக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் இதே பாடசாலையிலிருந்து தேசிய ரீதியில் போட்டி இடுவதற்கு தரம் 12,13 பிரிவில் எம். என்.எப். சஹ்றா, ஆர்.எப். சஹாமா ஆகிய மாணவிகள் தெரிவாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள்
அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**2023.09.13 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனு அழைத்தலுக்கான திருத்தம்**

இந்த பத்திரிகையில் 2023.09.13 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனு அழைத்தலுக்கான திருத்தத்திற்காக **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கங்களை தயவு செய்து பார்வையிடவும்.

Repeat
Your
Ad
For
Better
Offers

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

119

பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

JG-8604 ISUZU DUMP TRUCK 2000, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 059958

LO-9552 UNIMO KING 2018, LORRY கூடிய விலை க் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 059955

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## கருங்கல் வகைகளை வழங்கப் பெறுதல்

இந்த அதிகார சபையின் வகவத்த அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பின்வரும் கேள்விச் சுருக்கத்தில் காட்டப்பட்டுள்ள வகையில் படிவத் தொகுதியைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | அஸ்போல்ட் உற்பத்தியகம் | வழங்கல் அளவு கியூப் மீற்றர் | | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக | வங்கிப் பிணை |
| PRDA/WP/PRO/2023/80 | வகவத்த அஸ்போல்ட் உற்பத்தியகம் | 0-5 | 400 | 2000.00 + வெட் வரி | 12,500.00 | 25,000.00 |
| | | 5-10 | 200 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023-09-22ஆம் திகதியிலிருந்து 2023-10-06ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023-10-09ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ. இலக்கம் 011-4849825/45**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

**அனுராதபுரத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஆடவர் குடியிருப்பைப் புதுப்பிக்கும் வேலை**

### ஏலவிலை கூறல் இலக்கம்: BOC/PROP/P/2023/170

1. அனுராதபுரத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் ஆடவர் குடியிருப்பை கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு புதுப்பிக்கும் வேலையை செய்வதற்கு தகுதியுடைய ஏலவிலை கூறுபவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏல மனுக்கள் கோரப்படுகின்றன. இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு ஏறத்தாழ 44.0 மில்லியன் ரூபாய் ஆகும்.

   **இவ் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வேலைகளின் விபரம்:**

   தரைக்கு டைல் பதித்தல், புதிய கதவுகளைப் பொருத்துதல், குளியலறைகளைச் சீரமைத்தல், மேற்றளத்தில் பழுதடைந்த கூரைத்தகடுகளை அகற்றி புதிய கூரைத்தகடுகளைப் பொருத்துதல், வர்ணம் பூசுதல், மின்சார வயரிங் முதலான வேலைகளுடன் 24 படுக்கையறைகளைக் கொண்டதும் விருந்தினர் அறையை உடையதுமான இரண்டு தளங்கள் கொண்ட கட்டடத்தைப் புதுப்பிக்கும் வேலை.

   **மேற்கூறப்பட்டுள்ள வேலைகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படவேண்டும்.**

   கட்டம் I – கிழக்குப்புற கட்டடத்தைப் புதுப்பித்தல் (அறை இலக்கங்கள் 01 முதல் 07 வரை கீழ்த்தளம், 14 முதல் 19 வரை மேற்றளம், படிக்கட்டு மற்றும் மேற்றளத்திலுள்ள பொதுவான முகப்பு அறை)

   கட்டம் II – மேற்குப்புற கட்டடத்தைப் புதுப்பித்தல் (அறை இலக்கங்கள் 08 முதல் 13 வரை கீழ்த்தளம், 20 முதல் 25 வரை மேற்றளம்)

   அனுராதபுரம் வங்கி நகரில் இந்த வேலை நடைபெறவேண்டிய மனை அமைந்துள்ளது. இக்கட்டடம் இலங்கை வங்கியின் வடமத்திய பிராந்திய அலுவலகத்திற்கு அண்மையில் இருக்கின்றது.

   இவ்வேலையை முழுமையாகச் செய்து முடிப்பதற்கான காலப்பகுதி வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து **140 நாட்கள்** ஆகும். **(கட்டம் I - 84 நாட்கள், கட்டம் II - 56 நாட்கள்)**

2. தேசிய போட்டிகர ஏலவிலை நடைமுறைக்கமைய(NCB) ஏலவிலை கூறல்கள் இடம்பெறும்.

3. இந்த ஒப்பந்தத்தைப் பெறத் தகுதி பெறுவதற்கு, ஏலவிலை கூறலில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி தடைசெய்யப்பட்ட நபர்களின் பட்டியலில் இல்லாதவராகவும், கட்டடத் தொழிற்றுறை அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுசெய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் கட்டட நிர்மாணத் துறைக்கான C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் தகுதிகள் :-

   a. கடந்த 5 ஆண்டுகளுக்குள் இந்த வேலைத்திட்டத்தையொத்ததும் குறைந்தபட்சம் 35 மில்லியன் ரூபா பெறுமதியானதுமான குறைந்தபட்சம் ஒரு கட்டடத்தையாவது 140 நாட்களுக்குள் முடித்திருக்கவேண்டும் அல்லது இதைவிட அதிக பெறுமதியான திட்டமொன்றை அதற்குரிய காலப்பகுதியில் செய்து முடித்திருத்தல் வேண்டும்.

   b. கடந்த ஐந்து (5) வருடங்களுக்குள் செய்யப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளுக்கான சராசரி பணப்புரள்வானது குறைந்தது 100 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

   c. பிற ஒப்பந்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளையும் இந்த ஒப்பந்தத்தின் பொருட்டு வழங்கப்படக்கூடிய ஏதேனும் முற்பணங்களையும் தவிர்த்து 25.0 மில்லியன் ரூபாய்க்கும் குறையாத திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் காணப்படல் வேண்டும்.

5. ஏலவிலை கோர ஆர்வமுடையவர்கள் மேலதிக விபரங்களையும் சகல தெளிவூட்டல்களையும் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் கீழேயுள்ள முகவரியில் 2023.09.22 முதல் 2023.10.16 வரை 0900 மணியிலிருந்து 1430 மணிவரை ஏலத்துக்கான ஆவணங்களை கட்டணமின்றி பரிசீலிக்க முடியும்.

6. ஆங்கில மொழியிலான ஏலவிலை கூறல் மற்றும் உரிய விலையுடன் பூரணப்படுத்தப்பட்ட ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை கீழே கையொப்பம் இட்டிருப்பவரிடம் எழுத்து மூலமான விண்ணப்பத்தை வேலை நாட்களில் 0900 மணிமுதல் 1430 மணிவரை 2023.09.22 திகதி முதல் 2023.10.16 திகதி வரை சமர்ப்பித்துத் திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூ. 15,000/- வரிகள் அடங்களாக செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். கொடுப்பனவுகளை கீழே ஒப்பமிட்டிருக்கும் அலுவலரின் ஒப்புதலுடனான மீளளிக்கப்படாத பணவைப்பாக மேற்கொள்ளல் வேண்டும்.

7. நகலுடன் முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கியின் 14ஆவது தளத்திலுள்ள பெட்டியில் இடவும். அல்லது பிரதான முகாமையாளர், 'சொத்துகளும் சேகரிப்பும்' எனக்குறிப்பிட்டு இதே முகவரிக்கு 2023.10.17, காலை 1000 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். குறிப்பிடப்பட்ட முடிவு நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் ஏலவிலை கூறல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதுடன் அவை திறக்கப்படாமலே திருப்பி அனுப்பப்படும். ஏலவிலை கூறலுக்கான காலம் முடிந்த உடன் தெரிவுசெய்யப்பட்ட விலை கோருபவர்களின் முன்னால் உடனடியாக ஏலவிலை மனுக்கள் திறக்கப்படும்.

8. ஏலவிலை கூறல்கள் அவற்றின் முடிவு திகதியிலிருந்து 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.

9. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களானவை இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் மற்றொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து மாத்திரம் பெற்ற ரூ. 450,000.00 (ரூபா நானூற்றி ஐம்பதாயிரம் மட்டும்) பெறுமதியானதும் 2024.02.13 திகதி வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்தின் வடிவில் மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின் போதான வங்கிப் பிணைமுறியுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். பிணைமுறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / வங்கி வரைவு ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம் அல்லது அதன் திருத்தங்களுக்கமைய PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் இணைக்கப்படல் வேண்டும்.

11. ஏலத்துக்கு முந்திய கூட்டம் 2023.10.03 1100 மணிக்கு அனுராதபுரம் இலங்கை வங்கி ஆடவர் குடியிருப்பில் நடைபெறும். அதன் பின்னர் புதுப்பித்தல் வேலைகள் நடைபெறவேண்டிய இடங்களைப் பார்வையிடுதலும் நடைபெறும்.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01. இலங்கை.
தொலைபேசி: 094 112204260, 094 112544310, 094 11 2434786
மின்னஞ்சல்: properties@boc.lk

1975 BOC www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

# விலைக்கோரலுக்கான அழைப்பு

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் வைன் பார் ஒன்றை நடாத்திச் செல்வதற்கான தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A WINE BAR IN THE DEPARTURE/ TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0065/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் வைன் பார் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் SLEEPING POD நடாத்திச் செல்வதற்கான தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF SLEEPING PODS IN THE DEPARTURE/ TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0066/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல்/ போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் SLEEPING POD நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் தேயிலை விற்பனைக் கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A TEA SALES SHOP IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0067/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் தேயிலை விற்பனை கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் புதிய வர்த்தக முயற்சியை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF NEW BUSINESS VENTURES IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0095/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் புதிய வர்த்தக முயற்சியை நடாத்திக் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இரண்டு கடை இடப்பரப்புகள் கேள்வியிடப்பட்டுள்ளன என்பதுடன் தற்போது புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேச பகுதியில் ஒரு கடையை நடாத்தி வரும் எந்தவொரு நடத்துனரும் புதிய வர்த்தக முயற்சிக்கு இரண்டு கடைகளையும் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்கள்

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் இலங்கை உணவு வகை கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A SHOP OF SRI LANKAN DELICACIES IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0096/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் இலங்கை உணவு வகைக் கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மருந்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A PHARMACY IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**
விலைக்கோரல் இலக்கம். **0097/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மருந்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தற்போது புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேச பகுதியில் ஒரு கடையை நடாத்தி வரும் எந்தவொரு நடத்துனரிடமிருந்தும் எந்தவொரு விலைமனுக்களையும் பெற்றுக்கொள்ள நிறுவனம் கவனத்திற் கொள்ளாது. இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் என்பன இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த விலைக்கோரல் ஆவணங்களை 2023 ஒக்டோபர் 17ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அலை இல. 37, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 0065/T/2023 | ரூபா 12,500.00 |
| 0066/T/2023 | ரூபா 14,000.00 |
| 0067/T/2023 | ரூபா 24,000.00 |

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 0095/T/2023 | ரூபா 20,000.00 |
| 0096/T/2023 | ரூபா 10,000.00 |
| 0097/T/2023 | ரூபா 3,500.00 |

விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு கடைக்காகவும் இயைபுடைய விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறி விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணை முறியாக அல்லது பணமாக முன்வைக்கலாம்.

விலைக்கோரல்களை முன்வைப்பது தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2023 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், வர்த்தகம் மற்றும் ஆதனப் பிரிவில் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து அமைவிட விஜயம் இடம்பெறும்.

விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அலை இல. 37, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து 011-2264000, 011-2264002, 011-2252744 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.alid@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
# வீதி அபிவிருத்தி அதிகார சபை

### கேள்வி கோரல்

| கேள்வி இலக்கம் | விபரம் | தேவைப்படும் டிப்பர்களின் அளவு |
|---|---|---|
| RDA/KE/EE/TB/2023/26 | 01 கியூப் டிப்பர் வண்டி (அம்பேபுஸ்ஸ அம்பன்பிட்டிய, ரம்புக்கனை டிப்போ | 01 |
| RDA/KE/EE/TB/2023/27 | | 01 |
| RDA/KE/EE/TB/2023/28 | | 01 |
| | | கேள்விப் பிணை 10,000.00 ஒரு டிப்பர் வண்டிக்காக |

கேகாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்காக வாடகை அடிப்படையில் டிப்பர் வண்டி வழங்குதல் சார்பாக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படும். ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் 2023.09.22 முதல் 2023.10.05 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் **www.rda.gov.lk** என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**நிறைவேற்றுப் பொறியியல் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**அம்பன்பிட்டி**
**கலிகமுவ நகரம்.**

# சிதைவடைந்த பொருட்களை கேள்வி கோரி விற்பனை செய்தல்
# இலங்கை தேசிய வைத்தியசாலை

### இலங்கை தேசிய வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சிதைவடைந்த இரும்புப் பொருட்கள் மற்றும் மரத்தாலான உபகரணங்களை விற்பனை செய்வதற்காக கேள்வி கோரல் - 2023ஆம் வருடம்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு தற்போது கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியாவில் அமைந்துள்ள கழிவுப்பொருள் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள சிதைவடைந்த பொருட்களை கேள்வி கோரி விற்பனை செய்வதற்காக 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைப் படிவங்களை 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் மற்றும் 2023-10-09 மற்றும் 10ஆம் திகதிகளில் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியாவில் அமைந்துள்ள கழிவுப்பொருள் களஞ்சியசாலை வளவில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபா பிணைத் தொகையொன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குறித்த சிதைவடைந்த பொருட்களை 2023-10-09 மற்றும் 10 ஆகிய இரு தினங்களிலும் கொழும்பு கிழக்கு, ஆதார வைத்தியசாலை, முல்லேரியாவில் அமைந்துள்ள கழிவுப்பொருள் களஞ்சியசாலை வளவில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவக் கட்டணம் 1000.00 ரூபா அறவிடப்படும். இது தொடர்பில் 011-2691111 (நீடிப்பு 2722) எனும் தொலைபேசியில் திரு. அக்கலங்க அவர்களைத் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

### கைத்தொழில் அமைச்சு
### (சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவு)

LAKSALA All of Sri Lanka

## இலங்கை கைப்பணிச் சபை
# 'லக்சல'
## 'வர்த்தக ஆர்வங்கள்'
## (Expression of Interest)
# உடனான ஆலோசனைகளைக் கோரல்

இலங்கை கைப்பணிச் சபை (லக்சல) புதிய வர்த்தக திட்டமிடலின் கீழ் இச்சபைக்குச் சொந்தமான லக்சல காட்சியக வளாகத்தில் பாவனையாளர் சேவையை மேம்படுத்துதல் மற்றும் முறையின்றி பாவிக்கப்பட்ட கட்டிடங்களை இரு தரப்பினருக்கும் அனுகூலமாக அமையுமாறு வினைத்திறனுள்ள வர்த்தகமாக பாவனைக்கு உட்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுகின்ற மற்றும் அதற்காக முதலிடக்கூடிய வளமுள்ள வர்த்தகர்களிடம் மற்றும் நிறுவனங்களில் இருந்து கீழ்க்காணும் இடவசதிக்காக 'வர்த்தக ஆர்வத்துடனான ஆலோசனைகள்' கோரப்படுகின்றன.

a) பாணந்துறை: கெசெல்வத்த சிவில் பொறியியல் கட்டிட வளாகத்தில் தற்போது பாவனைக்கு எடுக்கப்படாது உள்ள இடவசதி
b) தும்முல்ல: கொழும்பு 07, லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி மற்றும் அதன் வாகன நிறுத்துமிடத்தின் பாவனைக்கு எடுக்கப்படாத பகுதிகள்
c) கட்டுபெத்த லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி
d) பத்தரமுல்ல லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி
e) கண்டி லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி
f) நுவரெலியா லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி
g) பேராதனை லக்சல காட்சியக வளாகத்தின் ஒரு பகுதி
h) பொல்கொல்ல லக்சல கட்டிட வளாகம்
i) இந்துருவ அலங்கார பொருட்கள் நிலைய வளாகம்

உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலும் பிரபலமான 'லக்சல' குழு நாமத்துடன் இணைந்து வர்த்தக விடயங்களை மேற்கொள்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்கள்/ தரப்பினர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகள் பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் 'வர்த்தக ஆர்வங்கள் 2023' என்று குறிப்பிட்டு இவ் அறிவித்தல் பிரசுரமாகி ஒரு மாதம் (30 நாட்கள்) இற்குள் பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

இச்சபையின் வர்த்தக தன்மையுடன் மேலும் பொருந்துகின்ற ஆர்வங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். அத்துடன் கிடைக்கப் பெற்றுள்ள ஆலோசனைகள் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை இலங்கை கைப்பணிச் சபை (லக்சல) விற்கு உரியது.

தேவைப்படும் மேலதிக தகவல்களை தொ.பே இலக்கம்: 0714-521888ஐ அழைத்து அல்லது directorsales@laksala.gov.lk மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர் (விற்பனை)**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்த,**
**தும்முல்ல,**
**கொழும்பு - 07**

## தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை
## கைத்தொழில் அமைச்சு
# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**சுத்தகரிப்புச் சேவை - 2023**
**விலைக்கோரல் இல.** NGJA/18 / 13 /2023

சுத்திகரிப்புச் சேவைக்காக பொருத்தமான முகவரகமொன்றைத் தெரிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| விபரம் | தொகை/ திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 1,000.00 +SSCL 2.5% +VAT 15% |
| விலைக்கோரல் காப்பு/ பிணை முறி | ரூபா 10,000.00 |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்/ திகதி | 2023.10.13 மு.ப. 10.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2023.10.13 மு.ப. 10.05 மணி |

| அமைவிடம் | மேற்பார்வையாளரின் எண்ணிக்கை | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு தலைமை அலுவலகம் | 01 | 06 |
| இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் | - | 04 |
| எஹலியகொட பிராந்திய அலுவலகம் | - | 02 |
| நாஉல பிராந்திய அலுவலகம் | - | 01 |
| மொனராகல பிராந்திய அலுவலகம் | - | 01 |
| காலி அலுவலகம் | - | 01 |
| இரத்தினபுரி - தெமுவாவத - இரத்தினக்கல் கோபுரம் | 01 | 02 |

**நிபந்தனைகள்**

(i) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைகள் கோரப்படும். (NCB)

(ii) மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 +2.5% SSCL (ரூபா 25.00) + 15% VAT (ரூபா 153.75) = (மொத்தத் தொகை ரூபா 1,178.75) தொகையை கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'', 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் காசாளருக்குச் செலுத்தியதன் பின் உதவிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து 2023-09-22ஆம் திகதி முதல் 2023-10-12ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(iii) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இல. 12, மெக்சன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 4ஆம் தளத்திலுள்ள வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுத்திகரிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் - 2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு குறைந்தபட்சம் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் காலம் சகிதம் வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2023-10-13 முதல் 2024-02-09ஆம் திகதி வரை)

(V) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் 2023-10-13ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும். இந்த விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) -** 071 536 2 536 / 0112 332 197
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03, இலங்கை.**
**தொலைபேசி:** 0112-329295, 2325364, 2390645-8 **தொலைநகல்:** 0112320758, 011-2332197
**இணையதளம்:** www.ngja.gov.lk

# இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.08.31 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு E.K.H.M. கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2013.09.25ஆம் திகதிய 3520ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.04.08ஆம் திகதிய 3763ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு சகா லாவண்யா யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2017.01.04ஆம் திகதிய 1172ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட தவணைக் கடன் மீது 2023.07.04 வரையான வட்டியும் முதலுமாக 37,550,620.28 ரூபாயும் (முப்பத்தேழு மில்லியன் ஐந்நூற்று ஐம்பதாயிரத்து அறுநூற்று இருபது ரூபாய் இருபத்தெட்டுச் சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டுத் தசம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 21,461,332.33 ரூபாய் (இருபத்தொரு மில்லியன் நானூற்று அறுபத்தோராயிரத்து முந்நூற்று முப்பத்திரண்டு ரூபாய் முப்பத்து மூன்று சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 242, ரணால வீதி, ஹபரக்கட, ஹோமாகம என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட துஷான் கேற்றெறஸ் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து ( இல. 242, ரணால வீதி, ஹபரக்கட, ஹோமாகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு.ரணதுங்க ஆரச்சிகே துஷாந்த அஜித் குமார ரணதுங்க ஆரச்சி, இல. 24, முதலாவது ஒழுங்கை, பொல்வத்த, பாதுக்க என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கரகொட பத்திரணகே சரத் குணதிலக்க, இல. 242, ரணால வீதி, ஹபரக்கட், ஹோமாகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. திலகரத்ன ஆரச்சிகே மிதில மதுரங்க, இல. 242, ரணால வீதி, ஹபரக்கட, ஹோமாகம என்ற முகவரியைச் சேர்ந்த திருவாட்டி. திலகரத்ன ஆரச்சிகே நிரோதா சந்தமாலி ஆகியோர் இதன் பணிப்பாளர்களாவர்) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த 2013.09.25ஆம் திகதிய 3520ஆம் இலக்க ஈட்டுமுறி, 2014.04.08ஆம் திகதிய 3763ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.01.04ஆம் திகதிய் 1172ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட தவணைக் கடன் மீதான மேற்குறித்த 37,550,620.28 ரூபாயையும் (முப்பத்தேழு மில்லியன் ஐந்நூற்று ஐம்பதாயிரத்து அறுநூற்று இருபது ரூபாய் இருபத்தெட்டுச் சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை பாதுக்க கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**ஈட்டுமுறியில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

"கட்டுக்குருந்துலந்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் K.M.A.H. பண்டார தயாரித்த 2013.07.08ஆம் திகதிய 4465ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை பள்ளே பற்று ஹோமாகம நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 481B, ஹபரக்கட தெற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள ஹபரக்கட கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் வீதி, வரையறுக்கப்பட்ட துஷான் /பெஸ்ரிவல் /பேணிச்சர் (தனியார்) நிறுவனத்தின் நிலமனை, R.A.D.A.K. ரணதுங்க என்பவரால் உரிமை கோரப்படும் காணி என்பவற்றையும் கிழக்கில் கால்வாயையும் தெற்கில் D.M. மல்லிகா, H. H. N. L குலசிங்க, H.D.K.G. குமாரி, P.G.S. R.A.D.A.K. ரணதுங்க, K.N.J. குமார ஆகியோரால் உரிமை கோரப்படும் காணியையும் மேற்கில் W.A.S. வீரதுங்க மற்றும் H.D. குசுமாவதி ஆகியோரால் உரிமை கோரப்படும் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 4465ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ரூட் ஒன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ1-பே1.75) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் A 368/144 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**இலங்கை வங்கி**
**பாதுக்க கிளை**

**திருமதி U.N. ரணதுங்க**
**முகாமையாளர்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு
### சப்ரகமுவ மாகாண சபை
# பெறுகை அழைப்பு

சப்ரகமுவ மாகாண சபையின் சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சினால் தேசிய போட்டி கேள்விக்கோரல் (NCB) இன் கீழ் கீழ்க்காணும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி கோரல் இலக்கம் | கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் உபகரணம் | கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் அளவு | கேள்வி பத்திரக் கட்டணம் (ரூ) | கேள்வி பிணை வைப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| SRIM25/2023/SWF/01 | கொமட் சக்கர நாட்காலி (Commode Wheel Chairs) | 30 | 2,000.00 | 70,000.00 |
| | சாதாரண சக்கர நாட்காலி (Wheel Chairs) | 30 | | |
| | கைத்தாங்கி (Elbow Crutches) | 40 | | |
| | நடமாடும் சட்டம் (Walking Frames) | 40 | | |
| | வாயுமெத்தை (Air Mattresses) | 40 | | |

2023.09.22 முதல் 2023.10.12 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை, அமைச்சு அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்க முடிவதுடன் கேள்விகளை சமர்ப்பித்தலுக்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்விப் பத்திர வேண்டுதலுக்காக வழங்குநர்களின் எழுத்துமூல வேண்டுதலுடன் மேற்கண்டவாறு கேள்விப்பத்திர கட்டணத்தை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையில் கணக்கு இல : 0001016456 இன் கீழ் செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இடப்பட்டு பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இவ் அமைச்சு அலுவலகத்தில் கேள்விபத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த கேள்வி பத்திரத்துடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதியுடையதாக செயலாளர், சமூகநலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி பெயரில் கோரும் போது காசாக்கக்கூடியதாக அரச அங்கீகாரம்பெற்ற வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும், நிபந்தனைகள் அன்றி (unconditional, on demand) கேள்விப்பிணையொன்றை அல்லது குறித்த தொகையை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையின் கணக்கு இல: 0001016456 இன் கீழ் செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இட்டு அதற்காக அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையின் செல்லுபடிக்காலம் 2023 டிசம்பர் 31 வரையாக இருத்தல் வேண்டும்.

குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது பகுதிகளாக ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது அதுபற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை தலைவர் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**எஸ்.ஆர்.விஜேதுங்க,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்**
**சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும்**
**கிராமிய கைத்தொழில் அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி,**
**தொ.பே.இல : 045-2222145, 045 - 2228137**

# 2024ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்
## அகலவத்தை பிரதேச சபை - அகலவத்தை

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் ஒப்பந்தக்காரர்கள்/ அனுமதிக்கப்பட்ட தொண்டர் அமைப்புகள்/ வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து 2023.12.04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களினால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

சகல விண்ணப்பங்களும் தமது நிறுவனம் (இருப்பின்) முகவரி மற்றும் ஏனைய விபரங்களுடன் குறித்த கட்டணத்தை காசாக அல்லது காசோலை மூலம் "செயலாளர், பிரதேச சபை, அகலவத்த" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது அகலவத்த பிரதேச சபைக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். காசோலை மூலம் செலுத்துவதாயின் "செயலாளர், பிரதேச சபை, அகலவத்த" என்ற பெயருக்கு காசோலைகள் எழுதப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சகல வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்வதற்காக 1000.00 ரூபா தொகை மற்றும் சகல ஒப்பந்தக்காரர்களும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பிக்கும் ஒப்பந்த பெறுமதிக்கு குறித்த சான்றிதழ் பத்திரங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். வெற்றிகரமான ஒப்பந்தக்காரர்கள் என்பதை உறுதி செய்வதற்கு எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். ICTAD நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் பெறுமதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றாலும் பதிவுச் சான்றிதழ் 2024.12.31ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

01. காகிதாதிகள்
02. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (வீதி விளக்கு உபகரணங்கள்)
03. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்
04. அச்சு வேலைகள் (புத்தகம் கட்டுதல், புத்தகம் அச்சிடல், கையேடுகள்)
05. சுகாதார உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, ரேக்கை, மண்வெட்டி, சவல், வீல்பரோ)
06. கட்டிடப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் (கல், மணல், செங்கல், வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கல், இரும்பு, சீமெந்து, பலகை பராலை, ரீப்பை, ஜீஐ குழாய், நிறப்பூச்சு வகை, அஸ்பெஸ்டஸ், நீர்க்குழாய் போன்ற ஹியூம் குழாய்கள்
07. கிருமி நாசினி மற்றும் மருந்து வகைகள்
08. சீருடைத்துணி மற்றும் திரைச்சீலை
09. வாகன சேர்விஸ் நிலையங்களுக்கு தேவையான எண்ணெய் வகைகள், கிறீஸ்
10. வாகன திருத்தவேலைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், டயர் டியூப்
11. பெயர்பலகை/ பெனர் தயாரித்தல்
12. கணனி மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் (ரோனியோ இயந்திரம், தொகைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம்)
13. சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் (கையுறை, முகக்கவசம், மழை அங்கி, கம்பூட்ஸ், சப்பாத்து பூட்ஸ்)
14. தார், பிரீமிக்ஸ் மற்றும் கோலாஸ்
15. திகதி முத்திரை, இறப்பர் முத்திரை
16. பொலித்தீன் பை, உரப்பை வழங்குதல்
17. தீயணைப்பு உபகரணங்கள்
18. நில அளவை விடயங்கள் (நில அளவை சேவை)
19. தொழில்நுட்ப உபகரண சேவை மற்றும் பராமரிப்பு உபகரணங்கள்
20. சட்டத்தரணிகள் சேவை.
21. அலுமினியம் கதவு, யன்னல் பொருத்துதல், சிவிலின், குழாய், மழை நீர் குழாய்
22. கொம்போஸ்ட் களஞ்சியத்திற்கு மீள் சுழற்சிப் பொருட்களைக் கொள்வனவு செய்தல். (பிளாஸ்டிக், சிரட்டை, பெட் போத்தல், கண்ணாடி, கார்ட்போர்ட், டின், பொலின், பத்திரிகை, பொக்ஸ் போர்ட்)
23. முன்பள்ளி உபகரணம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
24. சகல வகையான சிவில் நிர்மாணங்கள்

**அட்டவணை**

| | ஒப்பந்த பெறுமதி | தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|---|---|
| I. | ரூ. 50000/- | வரை | ரூ. 1000/- |
| II. | ரூ. 50000/- | முதல் ரூ. 100000/- வரை | ரூ. 1500/- |
| III. | ரூ. 100000/- | முதல் ரூ. 500000/- வரை | ரூ. 2500/- |
| IV. | ரூ. 500000/- | முதல் ரூ. 1000000/- வரை | ரூ. 3000/- |
| V. | ரூ. 1000000/- | முதல் ரூ. 2000000/- வரை | ரூ. 4000/- |

**டப்.ஏ. அஜித் கித்சிறி,**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அகலவத்த பிரதேச சபையின் அதிகாரம்,**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி.**

**2023-09-23**
**அகலவத்தை பிரதேச சபையில்.**
**மேலதிக விபரங்களுக்கு: 034-2243236**

Daily News Classifieds, the Housewives' companion

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
## இலங்கை மதுவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மின், குழாய், தரவுகள், CCTV, PA அமைப்பு மற்றும் PABX அமைப்பு போன்றவற்றின் பராமரிப்பு மற்றும் சேவைக்காக நிறுவனமொன்றினை தேர்வுசெய்தல்

இல-353, கோட்டே வீதி, இராஜகிரியில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக 2023/2024 வருடத்திற்கு மின், குழாய், தரவுகள், CCTV, PA அமைப்பு மற்றும் PABX அமைப்பு போன்றவற்றின் பராமரிப்பு மற்றும் சேவை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. **2023.09.22** ஆம் திகதி முதல் **2023.10.16** ஆம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** மணிக்குள் திணைக்களத்தின் காசாளரிடம் மீளப்பெற முடியாத **ரூ.2,500/-** கட்டணத்தைச் செலுத்திய இரசீதை வழங்கல் பிரிவில் சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.
2. மனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மீளப்பெறக்கூடிய மனுப்பிணையாக **ரூ.30,000/ -** னை இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. மனு ஏற்றுக்கொள்ளல் **2023.10.16** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு நிறைவுபெறும்.

திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம்,
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
இல : 353, கோட்டே வீதி,
இராஜகிரிய.

## பெறுகை அறிவித்தல்

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### மோட்டார் கார் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக வாடகை அடிப்படையில் கார் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|
| | | | பணமாக | வங்கி/ காப்புறுதிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2023/79 | மோட்டார் கார் ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | ரூபா 1000.00 (வரிகள் இன்றி) | ரூபா 10,000.00 | ரூபா 20,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023-09-22ஆம் திகதியிலிருந்து 2023-10-06ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023-10-09ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ. இலக்கம் : 011-4849825/45**

## பெறுகை அறிவித்தல்

### அகலவத்தை பிரதேச சபை

### 2024ஆம் வருடத்தில் ஆதனத்தை குத்தகைக்கு வழங்குதல்

அகலவத்தை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதன உரிமைகளை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப் படிவங்களை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது)

| | | |
|---|---|---|
| ***கேள்விப் படிவங்கள் வழங்குதல்*** | : | 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-23ஆம் திகதி வரை |
| ***கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம்*** | : | 2023-10-24ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை |
| ***கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்*** | : | 2023-10-24ஆம் திகதி பி.ப. 1.35 மணிக்கு |

கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| தொ. இல. | விபரங்கள் | ஆகக் குறைந்த விலை ரூபா சதம் | கேள்விப் பிணைத் தொகை ரூபா சதம் | படிவக் கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்தை மாட்டிறைச்சிக் கடையில் நாளாந்தம் மாட்டிறைச்சியை விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 3980000.00 | 39800.00 | 3500.00 |
| 02 | அகலவத்தை மீன் கடையில் நாளாந்தம் மீன் விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 56000.00 | 560.00 | 1500.00 |
| 03 | அகலவத்தை கோழியிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடையில் நாளாந்தம் இந்த இறைச்சி வகைகளை விற்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 85000.00 | 850.00 | 1300.00 |
| 04 | யட்டியன மயானத்தின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3400.00 | 30.00 | 750.00 |
| 05 | பிம்புர மயானக் காணியின் தேயிலை மற்றும் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 19500.00 | 200.00 | 750.00 |
| 06 | மாகஸ்வத்த விளையாட்டு மைதானத்திற்குரித்தான காணியின் தேங்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல் | 3300.00 | 30.00 | 750.00 |
| 07 | அகலவத்தை திரவப் பால் விற்பனை நிலையத்தை குத்தகைக்கு வழங்குதல் | 132000.00 | 1300.00 | 750.00 |
| 08 | அகலவத்தை பொது மலசலகூடம் | 6600.00 | 50.00 | 750.00 |

கேள்வி நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை கேள்விப் படிவங்களை வழங்கும்போது மற்றும் 034-2243236 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**டப்.ஏ. அஜித் கித்சிறி,**
**பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அகலவத்த பிரதேச சபையின் அதிகாரம்,**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி.**
**அகலவத்தை பிரதேச சபை.**

**2023-09-21ஆம் திகதி**
**அகலவத்தை பிரதேச சபையில்.**

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### கம்பஹா ஆதார வைத்தியசாலையிலுள்ள 01ஆம் மற்றும் 03ஆம் மாடியிலுள்ள மலசலகூட முறைமைக்காக தரையோடுகள் (Tile) கொள்வனவு செய்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/82**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | விபரங்கள் | அலகு | எண்ணிக்கை | வகை | கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரொக்கப் பணமாக | வங்கி அல்லது காப்புறுதி மூலம் |
| 01 | Glazed Ceramic wall tiling of size 12” x 24” approved Colour (Wall Tile) | Nos. | 851 | Rocell / Lanka Tile | 12,500.00 | 25,000.00 |
| 02 | Homogeneous porcelain semi-glazed / mat floor tile 12” x 24” (Floor Tile) | Nos. | 274 | | | |
| 03 | Glazed Ceramic wall tiling of size 12” x 24” approved Colour - Wall Tile | Nos. | 1543 | | | |
| 04 | Homogeneous porcelain semi-glazed / mat floor tile 12” x 24” - Floor Tile | Nos. | 714 | | | |
| 05 | Glazed Ceramic Pantry Top Tiling size 24” x 24” Dining Pantry - Wall Tile | Nos. | 45 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.09.22ஆம் திகதியிலிருந்து 2023.10.09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இவ்வதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதன்பொருட்டு கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 1,150.00 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) கேள்விப் படிவத் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-10-10ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ. இலக்கம் 011-4849825, 011-4849845**

## கடற்றொழில் அமைச்சு

### இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

### பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் TATA சிங்கிள் கெப் வாகனத்தின் உடைந்த பாகங்களை விற்பனை செய்தல்

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நீர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் TATA சிங்கிள் கெப் வாகனத்தின் உடைந்த பாகங்களை விற்பனை செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**விபரங்கள் பின்வருமாறு**

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனு மற்றும் வாகனங்களை இலவசமாக பரீட்சிப்பதற்கான திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத மனுக் கட்டண பெறுமதி (SLR) | மீளச் செலுத்தப்படும் மனுப் பாதுகாப்பு | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் கையளிக்கப்படும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| **NQ/DPC/2023/ NCB/G/08 Sale of used Motor Cycles and scrap parts of a TATA Single Cab** | 2023.09.22 முதல் 2023.10.09 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 மணிவரை வார வேலை நாட்களில் | ரூ.500.00 (பண வடிவில் மட்டும்) | ரூ.1,000.00 (ஒரு வாகனத் திற்காக) | 2023.10.09 பி.ப.3.00 | 2023.10.10 பி.ப.2.00 | இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை |

| இல. | வாகன இலக்கம் | வகை மாதிரி | மாதிரி | பதிவு ஆண்டு |
|---|---|---|---|---|
| 01 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 02 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 03 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 04 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 05 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 06 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 07 | H K-XXXX | YAMAHA | YBX-125 | 2003 |
| 08 | M Z-XXXX | TVS | SCOOTY PEP | 2006 |
| 09 | M Z-XXXX | TVS | SCOOTY PEP | 2006 |
| 10 | M Z -XXXX | TVS | SCOOTY PEP | 2006 |
| 11 | T Z-XXXX | TVS | STAR | 2007 |
| 12 | M E-XXX | HERO HONDA | CD-100 DAWN | 2005 |
| 13 | Single Cab | TATA | 207DI | 2009 |

02. மேலதிக தகவல்களை **0112-786455, 0112-786577** மின்னஞ்சல்: **www.naqda.gov.lk** மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்),
இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்ல.
**2023.09.22**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# பாலியல் குற்றச்சாட்டு: குணதிலக்க வழக்கின் தீர்ப்பு செப்டெம்பர் 28இல்

## நான்கு நாள் நீடித்த வழக்கு விசாரணை நிறைவு



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க மீதான பாலியல் தாக்குதல் தொடர்பான வழங்கு விசாரணை நியூ சவுத்வேல்ஸ் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று (21) நிறைவடைந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் செப்டெம்பர் 28 ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிபதி சாரா ஹுகட் அறிவித்துள்ளார்.

குணதிலக்க மீதான வழங்கு விசாரணை சிட்னியின் டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்று வந்தது. இதில் அனுமதியின்றி பாலியில் உறவில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை குணதிலக்க மறுத்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே குணதிலக்க மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. 32 வயதான குணதிலக்க, குற்றம்சாட்டி இருக்கும் பெண்ணுடன் திருட்டுத்தனமாக ஆணுறையை அகற்றிவிட்டு பாலுறவில் ஈடுபட்டதாகவே இந்த குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

சிட்னி நகரின் புறநகர் பகுதியில் உள்ள குறித்த பெண்ணின் வீட்டிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழக்கு விசாரணை நிறைவை எட்டிய நிலையில் இரு தரப்பினரும் நேற்று தமது இறுதி வாதத்தை முன்வைத்தனர்.

இந்நிலையில் நேற்று வழக்கு விசாரணையில் இறுதியாக நீதிபதியிடம் பேசிய வழக்குத்தொடுநர் கப்ரில்லே ஸ்டீட்மன், இந்த பாலியல் நிகழ்வு, "அவர் (பெண்) எதிர்பார்த்தது அல்லது விரும்பியதற்கு முற்றிலும் மாற்றமாக இருந்தது" என்றார்.

இதன்போது கிரிக்கெட் வீரரை குற்றவாளியாக அறிவிக்கும்படி ஸ்டீட்மன் நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார். வாதியின் சாட்சியத்தை "சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளும்படி" நீதிமன்றத்திடம் அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக இந்த வழக்கு விசாரணையில் வாக்குமூலம் அளித்த பெண், பாலுறவின் போது தான் உயிராபத்தை உணர்ந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

குணதிலக்க சார்பில் வாதாடிய வழங்கறிஞர் முருகன் தங்கராஜ், அந்தப் பெண் பொய்யான மற்றும் சுயநலமான ஆதாரங்களை முன்வைப்பதாக குற்றம்சாட்டினார்.

குணதிலக்க தன்னை மூச்சுத்திணற வைத்ததாக அந்தப் பெண் கூறியிருந்த நிலையில், தனது கட்சிக்காரர் சர்வதேச புகழ்பெற்ற கிரிக்கெட் வீரராக இருக்கும் நிலையில் வெளிப்படையான காயங்களை ஏற்படுத்தும் செயலில் அவர் ஏன் ஈடுபட வேண்டும் என்று தங்கராஜ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்தப் பெண் அவளது வீட்டில் நடந்த நிகழ்வு தொடர்பில் ஆக்ரோஷமான கதை ஒன்றை உருவாக்கி இருப்பதாக தங்கராஜ் வாதிட்டார்.

அந்தப் பெண்ணின் கதை குற்றச்சாட்டு சுமத்துவதற்கு ஏற்ப மாற்றப்பட்டிருப்பதாக குணதிலக்கவின் வழக்கறிஞர் நேற்றைய வழக்கு விசாரணையில் கூறினார். அவர் மேலும் கூறும்போது, "ஆணுறையை அகற்றியதாக அவர் பொலிஸாரிடம் கூறியபோதும் அவர் நண்பர்களிடம், "அதனை அகற்றினாரா என்பது எனக்குத் தெரியவில்லை" மற்றும் "எனக்கு உறுதியாக தெரியவில்லை, நான் நினைக்கிறேன்" என்று கூறியிருந்தார்" என்பதை சுட்டிக்காட்டினார்.

இதில் குணதிலக்கவின் பையில் இருந்து இரு ஆணுறைகளை பொலிஸார் கைப்பற்றியதையும் வழக்கறிஞர் தங்கராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஆணுறையை பயன்படுத்த விரும்பாத ஒருவர் ஏன் அதனை வைத்திருக்க வேண்டும்?" என்று கேள்வி எழுப்பிய தங்கராஜ், "நிச்சயமாக அதனை பயன்படுத்த அவர் திட்டமிட்டிருக்கிறார்" என வாதிட்டார்.

குணதிலக்கவுக்கு எதிராக ஆரம்பத்தில் நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டபோதும் அதில் 03 குற்றச்சாட்டுகள் நீக்கப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக பாலியல் உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே வழக்கு விசாரணை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பம்



கடந்த செப்டெம்பர் 1 ஆம் திகதி இடைநிறுத்தப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உள்நாட்டு கிரிக்கெட் தொடர் இன்று (22) முதல் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் போட்டித் தொடரில் மாற்றங்களை கொண்டுவர விளையாட்டு அமைச்சின் ஒப்புதல் கிடைக்காத நிலையில் அந்தத் தொடரை நிறுத்த இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்தது.

இது தொடர்பில் விளையாட்டுத் துறை அமைச்சர் உத்தரவு பிறப்பிக்காதபோதும் அமைச்சரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை போட்டிகளை இடைநிறுத்தவே கிரிக்கெட் சபை தீர்மானித்தது.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை, விளையாட்டுத் துறை அமைச்சருக்கு விளக்கம் அளிப்பதற்காக கடிதம் ஒன்றை அனுப்பி இருப்பதோடு அதற்கு பதிலளிக்கும் வகையில் உள்நாட்டு போட்டிகளை மீண்டும் நடத்தும்படி அமைச்சினால் கிரிக்கெட் சபைக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி பிரதான கழகங்களுக்கு இடையிலான 3 நாள் லீக் தொடர் 10 போட்டிகளுடன் இன்று ஆரம்பமாகவுள்ளது.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பதுளை மாவட்டம் சார்பாக கலந்து கொண்டு நான்காம் இடத்தை பெற்ற வேவல்ஹின்ன, விரியும் சிறகுகள் மகளிர் கரப்பந்தாட்ட அணியை படத்தில் காணலாம். (படம்: பாசறை நிருபர்)

# ஒக். 14இல் கொல்ப் போட்டி




கொழும்பு றோயல் கொல்ப் கழகம் மற்றும் டயலொக் என்டர்பிரைஸ் உடன் கொழும்பு மெட்ரோபொலிட்டன் றொட்டரி கழகத்தின் *Dialog Enterprise Rotary Metro Par 3 Golf Classic* போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த போட்டி நிகழ்ச்சி தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த புதனன்று (20) கொழும்பில் நடைபெற்றபோது போட்டிக்கான அனுசரணை வழங்கப்பட்டது. இதில் கொல்ப் வீரர்கள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவிருப்பதோடு இந்தப் போட்டிகளானது காலை 7 தொடக்கம் 11 மணி வரை நடைபெறவுள்ளது.

# கண்டிப்பான ஹிஜாப் சட்டமூலம்: ஈரானிய பாராளுமன்றில் ஒப்புதல்



ஈரானின் கண்டிப்பான ஆடை கட்டுப்பாடுகளை மீறும் பெண்களுக்கான சிறைத் தண்டனை மற்றும் அபராதத்தை அதிகரிக்கும் சர்ச்சைக்குரிய சட்டமூலம் ஒன்று அந்நாட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகள் பரீட்சாத்த அடிப்படையில் இந்த சட்டமூலத்தை அமுல்படுத்தவே பாராளுமன்றத்தில் ஒப்புதல் கிடைத்துள்ளது. இதில் முறையற்ற வகையில் ஆடை அணிபவர்கள் 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இது சட்டமாவதற்கு தொடர்ந்து பாதுகாவலர் சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.

முறையற்ற வகையில் ஹிஜாப் அணிந்த குற்றச்சாட்டில் ஒழுக்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மஹசா அமினி என்ற பெண் தடுப்புக் காவலில் மரணித்த சம்பவத்தை அடுத்து நாடு முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டம் வெடித்து ஓர் ஆண்டுக்கு பின்னரே இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சட்டம் தொடர்பான ஈரானின் வியாக்கியானத்தின்படி அந்நாட்டு சட்டத்தில் பருவமடைந்த பெண் ஒருவர் ஹிஜாப் மூலம் தலையை மறைப்பது மற்றும் உடல் அமைப்பை காட்டாத தளர்வான ஆடையை அணிய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டத்தின்படி இதனை மீறுபவர்கள் 10 நாட்கள் தொடக்கம் இரு மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது 5,000 மற்றும் 500,000 ரியால் வரை அபராதத்திற்கு முகம்கொடுக்க வாய்ப்பு உள்ளது.

எனினும் புதிய சட்டமூலத்தில் இந்தத் தண்டனை ஐந்து தொடக்கம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையாகவும் 180 மில்லியன் தொடக்கம் 360 மில்லியன் ரியால் வரை அபராதமாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

அதேபோன்று நிர்வாணத்தை ஊக்குவிப்பது மற்றும் ஹிஜாப் தொடர்பில் நகைச்சுவை செய்வதற்கு அபராதம் விதிக்கவும் புதிய சட்டமூலத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலுடனான 'உறவை' நெருங்கும் சவூதி அரேபியா



இஸ்ரேலுடனான உறவை ஏற்படுத்துவதில் நெருக்கம் ஏற்பட்டிருப்பதாக சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மான் தெரிவித்துள்ளார்.

"ஒவ்வொரு தினமும் நாம் நெருங்கி வருகிறோம்" என்று அமெரிக்காவின் பொக்ஸ் நியுஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் முடிக்குரிய இளவரசர் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சக்திகளுக்கு இடையில் இந்த வரலாற்று உறவை ஏற்படுத்துவதில் மத்தியஸ்தம் வகிக்கும் அமெரிக்காவின் அழுத்தம் அதிகரித்துள்ள நிலையிலேயே முஹமது பின் சல்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் இந்த முயற்சி ஒரு சிக்கலான பேச்சுவார்த்தை மூலமே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் சலுகைகளை வழங்குவது மற்றும் சவூதி அரேபியா கோரும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் மற்றும் சிவில் அனுசக்தி உதவியை அமெரிக்கா வழங்குவது போன்ற விடயங்களும் இதில் உள்ளடங்கும்.

பலஸ்தீன விவகாரம் சவூதிக்கு மிக முக்கியமானது என்று முஹமது பின் சல்மான் மேற்படி பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இராஜதந்திர உறவை ஏற்படுத்துவதற்கு என்ன தேவையாக உள்ளது என்று கேட்கப்பட்டபோது, "அந்த விடயத்தை (பலஸ்தீனர்) நாம் தீர்க்க வேண்டி உள்ளது" என்று அவர் குறிப்பிட்டார்.

"நாம் எங்கு செல்கிறோம் என்று பார்க்க வேண்டும். அது பலஸ்தீனர்களின் வாழ்வை எளிதாக்கும் மத்திய கிழக்கில் இஸ்ரேலை ஒரு பங்காக கருதும் இடத்திற்கு வர வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். எகிப்து மற்றும் ஜோர்தான் உடன் பல தசாப்தங்களுக்கு முன்னரே இராஜதந்திர உறவை ஏற்படுத்திய இஸ்ரேல், 2020 ஆம் ஆண்டு மேலும் மூன்று அரபு நாடுகளாக ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன் மற்றும் மொரோக்கோ நாடுகளுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனேடியர்கள் இந்தியா செல்வதற்கான விசா இடைநிறுத்தம்



இந்தியா, கனடியக் குடிமக்களுக்கு விசா வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

அடுத்த அறிவிப்பு வரும் வரை, இன்றிலிருந்து (21) இந்திய விசாச் சேவைகள் நிறுத்தப்படும் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

கனடாவின் சில பகுதிகளுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்கும்படி இந்தியா அதன் குடிமக்களிடம் கூறியதை அடுத்து, புதிய அறிவிப்பு வந்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் வான்கூவர் அருகில் சீக்கிய பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டார். அதில் இந்தியாவுக்குத் தொடர்பிருப்பதாக கனடா குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடி உருவாகியுள்ளது.

குற்றச்சாட்டுகளை இந்தியா கடுமையாக மறுத்துள்ளது.

இந்நிலையில் இந்தியா மற்றும் கனடா உறவில் கடந்த பல மாதங்களாக முறுகல் நீடித்துவந்த நிலையில் தற்போது அது இதுவரை இல்லாத அளவுக்கு மோசமடைந்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

சீக்கிய பெரும்பான்மை பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினைவாத கலிஸ்தான் அமைப்பு 1980களில் உச்சத்தை பெற்றிருந்தபோது வன்முறைகள் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தனிநாடு கோரும் சீக்கிய பிரிவினைவாதிகள் தொடர்பில் இந்தியா மேற்குலக நாடுகளை அடிக்கடி அறிவுறுத்தி வருகிறது.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திற்கு வெளியில் அதிக எண்ணிக்கையான சீக்கியர்கள் கனடா நாட்டிலேயே வசித்து வருகின்றனர். அங்குள்ள இந்திய இராஜதந்திரிகளின் பாதுகாப்பு குறித்து கடந்த ஜூன் மாதம் இந்தியா உத்தியோகபூர்வமாக அவதானத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தவறாக வழி காட்டியதற்கு கூகுள் மெப் மீது வழக்கு




அமெரிக்காவில் அலிசியா பெக்ஸன் என்பவர் அவரது கணவரின் மரணத்துக்கு 'கூகுள் மெப்' காரணம் என்று கூறி அந்நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார்.

அலிசியாவின் கணவர் பிலிப் பெக்ஸன் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் சேதமுற்ற பாலத்தின் மீது பயணம் செய்து நீரில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

வடக்கு கரோலைனாவிலுள்ள அந்தப் பாலம் 9 ஆண்டுகளுக்கு முன்னரே உடைந்துவிட்டது.

ஆனால் கூகுள் மெப்பில் அந்த விபரங்கள் புதுப்பிக்கப்படவில்லை. தமது கணவருக்கு அந்த இடம் புதிது என்பதால் அந்தப் பாலம் ஏற்கனவே உடைந்த தகவல் அவருக்குத் தெரியாது என்கிறார் அலிசியா.

எனவே கவனக் குறைவாகச் செயல்பட்டு தமது கணவரின் மரணத்துக்குக் காரணமாக இருந்த கூகுள் மெப் மீது நீதிமன்றத்தில் அலிசியா தற்போது வழக்குத் தொடுத்துள்ளார்.

சேதமடைந்த பாலத்தை மீண்டும் நிர்மாணிக்கத் தவறிய 3 நிறுவனங்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பெக்ஸன் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவித்த கூகுள் நிறுவனத்தின் பேச்சாளர் வழக்கைப் பரிசீலிப்பதாக ஏ.பீ செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கேள்வி கோரல் அறிவித்தல்

## விவசாய அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் மற்றும் நிர்மாண பணிகளுக்கும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**01. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | கா.பு. நிலையங்களுக்கு இரசாயனங்கள் மறறும் நுகர்வு பொருட்களின் கொள்வனவு - 2023 | 50,000.00 | 3,000/- | 2023.09.22 முதல் 2023.10.12 வரை | 2023.10.13 மு.ப. 11.00 |
| 1.2 | திரவ நைதரசன் கொள்வனவு - 2024 | 200,000.00 | 7,000/- | | |

**02. நிர்மாணப் பணிகள்**

| விடய இல | விடயம் | ICTAD பதிவு | பொறியியலாளரது மதிப்பீடு சிவில் வேளை (பெ.கூ.வ. இன்றி) ரூபா | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | | விலை மனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலை மனு வழங்கும் காலம் | விலை மனு முடிவுத் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வங்கி உத்தரவாதம் முன்வைப்பதாயின் | காசு செலுத்துவதாயின் | | | |
| 2.1 | குண்டசாலை செ.சி.நிலையத்தின் மாட்டுத் தொழுவங்களை நவீனமயப் படுத்துதல் மற்றும் ஆய்வுகூட திருத்த வேலைகள் | C9, C8, C7 | 2,662,388.60 | 55,000.00 | 27,500.00 | 2,500/- | 2023.09.22 முதல் 2023.10.12 வரை | 2023.10.13 மு.ப. 11.00 |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுல் இடலாம். விலை மனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரையும் மற்றும் விடயத்தின் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணையதளத்தை பார்வையிடவும். **(www.daph.gov.lk)**

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ.இலக்கம் 13,**
**கெட்டம்பே, பேராதனை.**

**தொலைபேசி இல : 081-2388197/081-2385227**
**081-2388120/081-2388189**
**081-2385701 நீடிப்பு 290/291**

---

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6501(MAR) | Spares for 8000-12000 Hour Overhaul of Turbocharger ABB VTR214P-11 of Main Engine Wartsila 9L 20 of Ma/T Vijayabahu | 200,000.00 | 3,500.00 | 2023.10.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6492(MP) | 02 Nos. 06 Ton Fork Lift Truck (Short Mass) | 360,000.00 | 3,500.00 | 2023.10.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6503(MAR) | Spares to Hatlapa W20 Air Compressor of Tug Gotaimbara and Suranimala | 20,000.00 | 1,000.00 | 2023.10.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04 PT/6506(MAR) | 01 No. Air Starter Motor for Main Engine Wartsila 4L20 of M/T Velusumana | 65,000.00 | 1,000.00 | 2023.10.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/LP/23/PT/10/006 | 02 Nos. of Grab Bucket 5 Ton | 200,000.00 | 3,500.00 | 2023.10.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/05/057 | 4992L Transynd Synthetic Fluid TES295 (AN-011001) | 570,000.00 | 12,500.00 | 2023.10.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/11/052 | OM906 ECU (YT 220-084-1808) (M 0654477440) | 25,000.00 | 1,000.00 | 2023.10.16 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/10/060 | 20 Sets of Leaf Spring NOI 55021-Z9319 | 25,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/05/058 | 7560L Transfluid Oil P-157 | 158,000.00 | 3,500.00 | 2023.10.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/17/063 | 40 Nos. Wheel Rim Tubeless (40305-Z2005) | 17,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/05/054 | 12600 Diesel Engine Oil SAE 15W-40 | 175,000.00 | 3,500.00 | 2023.10.17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 செப்டெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

---

# கேள்விகளுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## 2023/2024ஆம் வருடங்களுக்கான ஜெனிட்டோரியல் சேவைகள்

**Q - 483/23**

01. 2023/2024ஆம் வருடங்களுக்கான ஜெனிட்டோரியல் சேவைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கிறார்.

02. வைத்தியசாலையின் சகல இடப்பரப்புகளும் உள்ளடங்கும் வகையில் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக அழைக்கப்படுகின்றன. (கட்டிடங்கள் / வார்டுகள் / விடுதிகள் / துப்புரவேற்பாடு / சிகிச்சையகம் மற்றும் சிகிச்சையகமற்ற இடங்கள்)

03. சேவை வழங்கும் காலம் 01 வருடமாகும்.

04. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறை மூலம் கேள்விகள் கோரப்படுகின்றன.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (மின்னஞ்சல்: suppliceofficesjgh@gmail.com) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அலுவலகத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 3,500.00 ரூபா (மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை) காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் செய்வதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

07. 2023-10-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொட எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் 2023-10-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை முறி 720,000.00 ரூபாவாகும்.

தொடர்பிலக்கங்கள்: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு: 3142, தொலைநகல்: 011-2778624

**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொட.**



---

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கீழ்க்காணும் கட்டிடங்களில் நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக மற்றும் ஒப்பந்தத்துடனான பராமரிப்பு மற்றும் சேவைகளை நடத்திச் செல்வதற்கு தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2023.10.18ம் திகதி 10.30 மணி வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு குறித்த பெறுகை ஆவணங்களை 2023.09.22 முதல் 2023.10.17 வரை அரச விடுமுறை தினம் தவர்ந்த வாரத்தின் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தை கீழே அட்டவணையின் பிரகாரம் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2023.10.18ம் திகதி 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலை குறிப்பிடுநர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்படும் பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
பெறுகை ஆவணங்களில் குறிப்பிடுமாறு அப் பெறுமதியின் பிரகாரம் விலைகள், திறக்கப்படும் நாள் முதல் எதிர்வரும் 119 நாட்களுக்குச் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது அப் பெறுமதிக்குச் சமமான தொகையை (மீளளிக்கப்படும்) பிணையாக வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
பெறுகை ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 045-2222261 மூலம் கணக்காளரிடம் விசாரித்தரியலாம்.

| உருப் படி இல. | இலக்கம் | நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் | குறைந்த பட்ச தகைமை | விலை குறியீட்டு தொகுதியின் விலை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | THR/E17/PA10/2023 | Modification of Ward No 18 | CIDA C8 | 3,500.00 |
| 02 | THR/E17/PA11/2023 | Renovation of Roof in Ward No 11 | CIDA C8 | 3,500.00 |
| 03 | THR/E17/PA12/2023 | Renovation of Director's Quarters | CIDA C8 | 3,500.00 |
| 04 | THR/E17/PA13/2023 | External Wall Painting of Main Building and JICA Building | CIDA C8 | 3,500.00 |
| 05 | THR/E17/PA13/2023 | Construction of OPD Extension - Second Floor (Electrical Work) | CIDA C8 | 3,500.00 |
| ஒப்பந்தத்தினூடாக பராமரிப்பு மற்றும் சேவைகள் | | | | |
| 06 | THR/E19/UPS/2023 | Preventive & Corrective Maintenance & Service of UPS (9KVA, 20 KVA, 40 KVA) for Year 2024 | Experience in Similar in Scope and Complexity in last five years | 1,000.00 |
| 07 | THR/E19/Cold Room/2023 | Preventive & Corrective Maintenance & Service of Cold Room in Drug Stores for Year 2024 | Experience in Similar in Scope and Complexity in last five years | 1,000.00 |
| 08 | THR/E19/SW/2023 | Maintenance of Sewerage Treatment Plant for the Year 2023/2024 | Experience in Similar in Scope and Complexity in last five years | 2,500.00 |
| 09 | THR/E19/EM/2023 | Preventive & Corrective Maintenance & Service of Electrical System for the Year 2023/2024 | CIDA in EM 04 Under Specialty of Electrical Installation - Low Voltage (ET-LV) | 2,500.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**
**2023.09.20**

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

### விஷ எதிர்ப்பு உற்பத்தி மற்றும் வசதிகளை வழங்குதல் திட்டம் - விலங்கு விஷ ஆராய்ச்சி சர்வதேச (பிரைவேட்) லிமிடெட், கலஹா எஸ்டேட், பாத்ஹேவாஹெட்டை

### ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கை (ஆசுஆ) இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

### தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23வ(4) இன் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை பூரண ஆய்வின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக இலக்கம் 49/4, பிரிவு 18 C1, ஐஸ்லேண்ட் பில்டிங், கோல்பேஸ் டெரஸ், கொழும்பு 03 விலாசத்தை கொண்ட விலங்கு விஷ ஆராய்ச்சி சர்வதேச (பிரைவேட்) லிமிடெட்டின், நிர்வாக ஒருங்கிணைப்பாளருக்கு நடைமுறைபடுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள். விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கயானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**'பரிசர பியச'**
**இல. 104, டென்சில் கொப்பெகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

### உத்தேசிக்கப்பட்டுள்ள ஹோட்டல் திட்டம் - இங்குருகொல்ல தோட்டம் தலாத்துஓயா

### ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கை (ஆசுஆ) இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

### தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 23வ(4) இன் கீழான அறிவித்தல்

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை பூரண ஆய்வின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட சட்டம் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக இல 516, சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 விலாசத்தை கொண்ட எலிசபெத் ஹோட்டல் பிரைவேட் லிமிடெட்டின் முகாமையாளர் அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொது மக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் ஆய்வறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**'பரிசர பியச'**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான கேள்வி

1. **2023.10.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும்** பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| Tender No. | Item | Qty | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| Q 484/23 | Sterilization Machine (Mini) | 02 Nos. | **Rs.3,500** |
| Q 485/23 | Audiometry Machine | 01 No, | **Rs.3,500** |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள முகவர்கள் அல்லது உற்பத்தியாளரொருவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் அல்லது கேள்விதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்யலாம்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று.

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.

(iii) வியாபார பதிவின் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று.

2. விலைமனுக்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களைத் தவிர வேறேதாவது படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

3. வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

4. **2023.10.11 ஆம் திகதியன்று வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

6. **2023.10.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சபை மண்டபத்தில் கேள்விகள் மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

7. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் நிராகரிப்பதற்கும் கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான சுயஉரிமையை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



## மஹவ பிரதேச சபை

# பெறுகைக்கான அறிவித்தல்

**பெறுகைக்கான அறிவித்தலும் நிபந்தனைகளும்:**

மஹவ பிரதேச சபைக்கு உரிய பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக உரிமையை 2024.01.01 ஆந் திகதி தொடக்கம் 2024.12.31 ஆந் திகதி வரையிலான காலத்திற்கு மற்றும் 02 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 2024.01.01 ஆந் திகதி தொடக்கம் 2026.12.31 ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட டென்டர் பத்திரங்களை 2023.10.13 ஆந் திகதி மு.ப. 9.30 மணி வரை என்னால் பொறுப்பேற்கப்படும்.

டென்டர் மாதிரிப் படிவம் 2023.09.22 ஆந் திகதி தொடக்கம் 2023.10.12 ஆந் திகதி பி.ப. 1.00 மணி வரை வார வேலை நாட்களில் மஹவ பிரதேச சபை அலுவலகத்தில் வழங்கப்படும்.

டென்டர் விண்ணப்பப் படிவம் 02 பிரதிகள் வழங்கப்படுவதுடன், உரிய டென்டர் பத்திரம் இரண்டையும் சரியாக பூர்த்தி செய்து முதல் பிரதி மற்றும் இரண்டாம் பிரதி என்ற வகையில் வெவ்வேறாக கடித உறையில் இட்டு செயலாளர், மஹவ பிரதேச சபை, மஹவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் டென்டர் பத்திரத்தை நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க கருதுவதாயின், இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடலாம்.

டென்டர் பத்திரம் இடப்படுகின்ற கடித உறையை சரியாக ஒட்டப்பட்டு, முத்திரை இடப்பட்டு இருக்க வேண்டியதுடன், கடித உறையின் இடது மேல் மூலையில் குறித்த டென்டரின் பெயரை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். டென்டர் பத்திரம் இரண்டு பிரதிகளுடன் குறித்த நேரத்திற்கு முன்னதாக இச் சபைக்கு சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து டென்டரும் அந்தந்த பணிக்கு உரித்தாக குறைந்தபட்ச ஏலத்திற்கு அதிகமாக கோரப்பட வேண்டும். டென்டர்பத்திரம் வழங்குவதற்காக காசோலைகளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாததுடன், குறைந்தபட்ச ஏலத்திற்கு குறைவாக ஏலம் சமர்பிக்கின்ற டென்டர்பத்திரம், தாமதமாக கிடைக்கின்ற மற்றும் பூர்த்தியற்ற டென்டர்கள் நிராகரிக்கப்படுவதுடன், ஏல பிணைகள் சபைக்குரித்தாக்கப்படும்.

இந்த நிறுவனத்தில் முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தாக சொத்துக்களை குத்தகைக்கு பெற்று ஒப்பந்தங்களை மீறி கருப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கு டென்டர்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொண்டு சமர்பிக்காதவர்களது பிணைத்தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

டென்டர் விண்ணப்பப்படிவம் 2023.10.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹவ பிரதேச சபையின் பெறுகைக்கான குழுவின் முன்னிலையில் திறப்பதுடன், அச் சந்தர்ப்பத்திற்கு அவரது/அவளது பிரதிநிதிகளுக்கு வருகைத்தருவதற்கு அனுமதி வழங்கலாம்.

மஹவ பிரதேச சபையின் பெறுகைச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்கள் மஹவ பிரதேச சபைக்கு வருகைத் தந்து அல்லது 037 - 2275275 தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**அட்டவணை - 1**

| தொட. இலக்கம் | சொத்து பற்றிய விபரம் | குறைந்தபட்ச ஏலம் (ரூ) | மீள் செலுத்தப் படாத விண்ணப்ப படிவ கட்டணம் (ரூ.) | மீள் செலுத்தப்படும் ஏல பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | மஹவ மாட்டிறைச்சிக் கடை | 1961410.00 | 1,000.00 | 98070.50 |
| 02 | அம்பன்பொல மாட்டிறைச்சிக் கடை | 183150.00 | 1,000.00 | 18315.00 |
| 03 | மஹவ கோழிக் கடை | 392040.00 | 1,000.00 | 31363.20 |
| 04 | மஹவ 01 ஆம் இலக்க மீன் பலகை | 278300.00 | 1,000.00 | 22264.00 |
| 05 | மஹவ 02 ஆம் இலக்க மீன் பலகை | 278300.00 | 1,000.00 | 22264.00 |
| 06 | அம்பன்பொல மீன் பலகை | 99000.00 | 1,000.00 | 9900.00 |
| 07 | மஹவ புதிய பொது சந்தை 11 ஆம் இலக்க கடை அறை | 43560.00 | 1,000.00 | 4356.00 |
| 08 | மஹவ புதிய பொது சந்தை 12 ஆம் இலக்க கடை அறை | 43560.00 | 1,000.00 | 4356.00 |
| 09 | மஹவ புதிய பொது சந்தை 03 ஆம் இலக்க கடை அறை | 503118.00 | 1,000.00 | 25155.90 |
| 10 | மஹவ புதிய பொது சந்தை 04 ஆம் இலக்க கடை அறை | 53478.51 | 1,000.00 | 5347.85 |
| 11 | மஹவ புதிய பொது சந்தை 05 ஆம் இலக்க கடை அறை | 29148.90 | 1,000.00 | 2914.89 |
| 12 | மஹவ சனிக் கிழமை வாரச் சந்தை | 5500000.00 | 1000.00 | 220000.00 |
| 13 | அம்பன்பொல திங்கட்கிழமை வாரச் சந்தை | 2860000.00 | 1000.00 | 114400.00 |
| 14 | நாகொல்லாகம வெள்ளிக்கிழமை வாரச் சந்தை | 1100000.00 | 1000.00 | 55000.00 |
| 15 | பலல்ல புதன் கிழமை வாரச் சந்தை | 440000.00 | 1000.00 | 35200.00 |

**02 ஆம் அட்டவணை**

| தொட. இலக்கம் | சொத்து பற்றிய விபரம் | குறைந்தபட்ச ஏலம் (ரூ) | மீள் செலுத்தப்படாத விண்ணப்ப படிவ கட்டணம் (ரூ.) | மீள் செலுத்தப்படும் ஏல பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 02 | மஹவ புதிய பொது சந்தை 01 ஆம் இலக்க கடை அறை | 7700.00 | 1000.00 | 770.00 |
| 15 | அம்பன்பொல பஸ் தரிப்பிட 08 ஆம் இலக்க கடை அறை | 2640.00 | 1000.00 | 264.00 |

**2023.09.22 ஆந் திகதி**
**மஹவ பிரதேச சபை அலுவலகத்திலிருந்து.**

**ஆர்.டீ.கே. அமரஜீவ,**
**செயலாளர் மற்றும் அதிகாரப் பணிகள்,**
**கடமைகளை செயற்படுத்தும் உத்தியோகத்தர்.**
**மஹவ பிரதேச சபை**

Repeat Your Ad For Better Offers

www.adz.lk
it's what you want

## மக்கள் வங்கி

### நாரஹேன்பிட்ட கிளை

**1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின்கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2023.07.31 ஆந்திகதி நடைபெற்ற அதனது கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 00236751 எனும் பதிவிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதும், இல. 572/7C, சுபசாதக மாவத்தை, எரவ்வல, பன்னிப்பிட்டிய எனும் முகவரியில் தனது பதிவு பெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான (இதனகத்துப்பின்னர் "கடப்பாட்டாளர் கம்பனி" எனவழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படும்) துஷார ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனம், இதன்கண் பயன்படுத்தப்பட்ட அப்பதம் அல்லது அச்சொல்லமைப்பு சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்துகின்றவிடத்து சொல்லப்பட்ட துஷார ஹோல்டிங்ஸ் (பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தையும் அதன் அடுத்துறுனர்களையும் மற்றும் சாட்டுதற்காரர்களையும் கருதுதலும் உள்ளடக்குதலும் வேண்டும், மற்றும் இல. 158D, கிரிபட்டிய வீதி, நீலம்மஹர, பொரலஸ்கமுவ எனும் முகவரியைச் சேர்ந்த சமரசேகர விதான பத்திரனகே அருண விராஜ் மற்றும் சமரசேகர விதான பத்திரனகே வில்மன் சமரசேகர (இதனகத்துப்பின்னர் "ஈடுவைப்பாளர்கள்" எனவழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படும் என்பதுடன் இதன்கண் பயன்படுத்தப்பட்ட அப்பதம் அல்லது அச்சொல்லமைப்பு சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்துகின்றவிடத்து சொல்லப்பட்ட சமரசேகர விதான பத்திரனகே அருண விராஜ் மற்றும் சமரசேகர விதான பத்திரனகே வில்மன் சமரசேகர ஆகியோரையும் அவர்களின் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுனர்கள், நிருவாகிகள் மற்றும் சாட்டுதற்காரர்களையும் கருதுதலும் உள்ளடக்குதலும் வேண்டும்) ஆகியோர் மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கனேகம கமஎதிகே காந்தி மஹேஷிகா ரத்னவர்தனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.12.14 ஆந்திகதிய 43 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனராதலால், சொல்லப்பட்ட ஈட்டுமுறிமீது ஏழு மில்லியன் மூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்றி எண்பது ரூபா தொண்ணூற்றி மூன்று சதம் (ரூபா. 7,394,680.93) பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் உள்ளது.

2023.07.13ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை, முறையே ஐந்து மில்லியன் ரூபா (ரூபா. 5,000,000.00) பணத்தொகைமீதும் மற்றும் ஒன்பது இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து முந்நூற்றி முப்பத்தெட்டு ரூபா இரண்டு சதம் (ரூபா. 951,338.02) பணத்தொகைமீதும் ஆண்டுக்கு 31% எனும் வீதத்திலான மேலதிக வட்டியுடன் சேர்த்து, ஏழு மில்லியன் மூன்று இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து அறுநூற்றி எண்பது ரூபா தொண்ணூற்றி மூன்று சதம் (ரூபா. 7,394,680.93) மொத்தப் பணத்தொகையை, பெறப்பட்டதிலிருந்தான கொடுப்பனவு (ஏதேனுமிருப்பின்) அதனையும் கழித்து, செலவுதொகைகள் மற்றும் வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கி சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விவரணம்**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளேயின் பல்லே பத்துவில் கெஸ்பேவ நகர சபை எல்லைகளினுள்ளும் மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் வருகின்ற, இல. 580/1A எரவ்வல கிராம அலுவலர் பிரிவிலுள்ள எரவ்வல கிராமத்தில் அமைந்துள்ளதும், மண், மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து "கொடபொரகஹவத்த" எனவழைக்கப்படுவதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. டீ.ஜி. வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.08.02 ஆந்திகதிய 5677/A எனுமிலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட "காணித்துண்டம்" என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் A பின்வரும் எல்லைகளை உடையது **வடக்கு**: காணித்துண்டம் B **கிழக்கு**: மஹரகம முதல் பிலியந்தல் வரையிலான வீதி **தெற்கு:** சுபசாதக மாவத்தைத் மற்றும் **மேற்கு:** 1100 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 16, அத்துடன் பரப்பளவில் இது கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்மேலுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து பதின்மூன்று பேர்ச்சுக்களைக் (00ஏ. 00றூ.13பே.) கொண்டுள்ளது என்பதுடன் தெல்கந்த-நுகேகொட காணிப் பதிவகத்தில் C 954/41 எனும் பதிவிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டும் உள்ளது. செல்வழியுரிமையுடன் சேர்த்தும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**பிராந்திய முகாமையாளர் -**
**கொழும்பு தெற்கு**

**பிராந்திய முகாமையாளர் - (கொழும்பு தெற்கு)**
**இல. 11, டியுக் வீதி,**
**கொழும்பு-01.**

PEOPLE'S BANK
Pride of the Nation

# இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.06.07 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி R.V. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.06.18 திகதியிட்ட ஈட்டு முறி இல.4178 இன் பேரில் கலகெதர, மினிகமுவ, தன்னெவெல, இல. 214-A ஐச் சேர்ந்த திரு. அலஹகோன் முதியான்சேலாகே நிரோஷ அலஹகோன் மற்றும் திருமதி தனப்ப ஹிடிகே ஹேமா மல்காந்தி ஆகியோரிடமிருந்து ரூ.620,000.00 கடன் மீது 2023.04.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 345,403.71 (முந்நூற்று நாற்பத்தைந்து ஆயிரத்து நாநூற்று மூன்று ரூபாய்களும் எழுபத்தொரு சதங்களும்)** அத்துடன் ரூ. 285,430.43 (இருநூற்று எண்பத்தைந்து ஆயிரத்து நாநூற்று முப்பது ரூபாய்களும் நாற்பத்து மூன்று சதங்கள்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.04.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், ரூ.7,770,000.00 (ஏழு மில்லியன் எழுநூற்று எழுபது ஆயிரம் ரூபாய்கள்) கடன் மீது 2023.04.19 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ.10,615,652.23** (பத்து மில்லியன் அறுநூற்றுப் பதினைந்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்திரெண்டு ரூபாய்களும் இருபத்து மூன்று சதங்களும்) அத்துடன் ரூ.6,535,328.47(ஆறு மில்லியன் ஐநூற்று முப்பத்தைந்து ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய்களும் நாற்பத்தேழு சதங்கள்) மீது 2023.04.20 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி R.V. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.06.18 திகதியிட்ட ஈட்டு முறி இல. 4178 இன் பேரில் ரூபா 620,000.00 கடன் மீது மேற்கூறிய **ரூ.345,403.71 (முந்நூற்று நாற்பத்தைந்து ஆயிரத்து நாநூற்று மூன்று ரூபாய்களும் எழுபத்தொரு சதங்களும்)** ரூ.7,770,000.00 கடன் மீது மேற்கூறிய **ரூ. 10,615,652.23** (பத்து மில்லியன் அறுநூற்றுப் பதினைந்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்திரெண்டு ரூபாய்களும் இருபத்து மூன்று சதங்களும்) அத்துடன் 2023.04.20 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கலகெதரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த தும்பனையில் தும்பனை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் தும்பனை பிரதேச சபை பிரிவில் தென்னவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில், மினிகமுவயில் அமைந்த அலஹகோன்கே ஹிட்டின வத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் KMH நவரத்ன தயாரித்த 1975 ஜுலை 13 திகதியிட்ட வரைபடம் இல. 2557 இல் காணித்துண்டு இல. 02 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் புரன் கும்புரயை பிரிக்கும் ஓடையும் கிழக்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு இல. 1உம் தெற்கில் கிராம சபை ரோட்டும் மேற்கில் ஈரியகஹமுல தெனியவை பிரிக்கும் ஓடையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண் வீடு மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் W21/133 இல் பதிவு செய்யப்பட்டது.

   இக்காணி அண்மையில் கீழ் விபரித்துள்ளவாறு மீளளவை செய்யப்பட்டுள்ளது.

   மேற்கூறிய மினிகமுவயில் அமைந்த அலஹகோன்கே ஹிட்டின வத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் AJ பண்டார தயாரித்த 2010 பெப்ரவரி 02 திகதியிட்ட வரைபடம் இல, 4192 இல் காணித்துண்டு இல.1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் புரன் கும்புரயைப் பிரிக்கும் ஓடையும் கிழக்கில் வரைபடம் இல. 2557 இல் காணித்துண்டு 1உம் தெற்கில் கிராம சபை ரோட்டும் மேற்கில் ஈரியகஹமுல தெனியவைப் பிரிக்கும் ஓடையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண் வீடு மற்றும் சகலதும் ஆகும்.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த கிழக்கு கோரளை தும்பனையில் தும்பனை பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் தும்பனை பிரதேச சபை எல்லைகளில் ஹியதல வல்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹியதல வல்பொலயில் அமைந்த இல்லகொல்ல ஹேன என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் AJ பண்டார தயாரித்த 2016 மே 11 திகதியிட்ட வரைபடம் இல. 6574 இல் காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் ஓடையும் W.M ரண் பண்டாவும் ஏனையோரும் உரிமை கோரும் இல்லகொல்லே அம்பகஹமுல ஹேனயும் கிழக்கில் W.M கிரிபண்டா உரிமை கோரும் இல்லகொல்லே ஹேனயும் தெற்கில் P வீரகோன் உரிமை கோரும் இல்லகொல்ல ஹேனயும் D.M.P. செனெவிரத்னவும் ஏனையோரும் உரிமை கோரும் இல்லகொல்ல ஹேனயும் மேற்கில் ஓடையும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் மூன்று றூட் மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.1, றூ.3, பே.03..50) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் மற்றும் வரைபடம் இல. 6574 இல் காணித்துண்டு 2 மீதான வழி உரிமையும் ஆகும்

